DEEPAM .news

தீபம்

கனடாப் பதிப்பு

தமிழின் முதல்தர வார இதழ் • தீபம் 42 • 14.09.2016

கனடியத் தமிழர் பேரவையின் 8வது நிதிசேர் நடை 03

பா.உ வியாழேந்திரன் நேர்காணல் 06

கனடியத் தமிழர் பேரவை ரூஜ்ரிவர் இடைத்தேர்தலின்போது பக்க சார்புடன் இயங்கியதா? 08

சம்பூர் அனல் மின்நிலையத் திட்டம் கைவிடப்பட்டது!

மக்களின் விட்டுக்கொடுக்காத தொடர்ச்சியான போராட்டத்துக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி!

விரிவான செய்தி பக்கம் 24

TOYOTA SCION
DON Valley North Toyota Scion ISO 9001:2008
TOYOTA Certified USED VEHICLES
ONCE A TOYOTA, ALWAYS A TOYOTA
CONSUMER CHOICE AWARD 2015
Shan Manojkumar
Pre-owned Sale Consultant
Cell: 416.953.6445 Tel: 905.475.0722 x222
shanm@dvntoyota.com

Life Insurance - Living Benefits - RESP - RRSP - TFSA
Are You Getting Million Dollar Advice?
Life100 INSURANCE & INVESTMENTS INC.
Direct 416.918.9771 Office 416.321.2500
www.life100.ca
We are hiring Advisors

NAVA LAW PROFESSIONAL CORPORATION
YOUR TRUSTED PARTNER FOR DECISIONS THAT MATTER
www.nava.law | 416.321.1100

DYNEVOR EXPRESS
24 Hours expedite
Your trusted transportation partner
Now Hiring Experienced AZ Drivers
Up to 3000 Miles /week earning
Benefit package with bonus
APPLY TODAY!
416.749-2010
18 Years of Experience

AR ALL-RISKS INSURANCE BROKERS LIMITED
AUTO • HOME • LIFE • COMMERCIAL • TRAVEL
New Office Open Now!
Suren Navaratnarajah
Managing Partner
Tel: 416.548.8804 Cell: 416.520.6916
snavaratnarajah@all-risks.com
www.all-risks.com
5514 Lawrence Ave. Scarborough On M1C 3B2

Benjamin Moore®
Paint like no other.®
McNicoll Paint Centre
$10 OFF/Gallon
(Expires September 30, 2016)
Markham & McNicoll Rd. Call Tharan 416-321-5036

முகநூலில் முகமூடி வாள் வீச்சுக் கோழைகள்!!!

ஒன்ராரியோ மாகாண அரசாங்கத்தின் றூஜ் றிவர் தொகுதிக்கான தேர்தலோடு தொடர்புபடுத்தி தீபம் பத்திரிகை மீதான முகநூல் தாக்குதல்கள் பல, சொந்தப் பெயர்களிலும், புனை பெயர்களிலும் நடாத்தப்பட்டு வருகின்றன. பத்திரிகையை எப்பாடு பட்டாவது நிறுத்திவிட வேண்டும் என்ற நோக்கத்துடன் திரிக்கப்பட்ட தகவல்கள் பதிவு செய்யப்படுகின்றன. 'விஷத் தீபம் பத்திரிகையை கனடாத் தமிழர்கள் முழுமையாக அணைத்துவிடுங்கள்' என்று பொது அழைப்பும் விடுக்கப்படுகிறது. பத்திரிகை அலுவலகத் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு, அங்கிருந்த அலுவலக ஊழியர் ஒருவரிடம், தீபம் ஊடக அறத்தை மீறிச் செயற்படுவதாக குற்றம் சாட்டியது மட்டுமல்லாமல், உங்கள் பத்திரிகையை இயங்க முடியாமல் செய்துவிட எமக்கு முடியும், உங்களது விளம்பர தாரர்களை உங்களுக்கு விளம்பரம் தராமல் தடுத்துவிட முடியும் என்று ஒருவகை மிரட்டல் தொனியுடன் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாமல், விளம்பரம் தருபவர்களில் ஒருசிலரை அணுகி ஏன் இந்தப் பத்திரிகைக்கு விளம்பரம் கொடுக்கிறீர்கள். அது ஒரு மோசமான பத்திரிகை என்று பிரச்சாரமும் செய்யப்படுகிறது.

எவ்வாறாயினும், விளம்பரத்தை நிறுத்துமாறு கோரப்பட்ட விளம்பரதாரர்கள் ஏன் அதை நிறுத்தவேண்டும், என்ன பிரச்சினை என்று கேட்டதற்கு அவர்களால் எந்தப் பதிலையும் சொல்ல முடியவில்லை. 'விஷத் தீபம் பத்திரிகையை கனடாத் தமிழர்கள் முழுமையாக அணைத்துவிடுங்கள்' என்ற பகிரங்கக் கோரிக்கையை முன்வைக்கும் பொய்ப் பெயர் முகப் புத்தகக் கணக்காளர் ஒருவர் தனது கோரிக்கைக்கான காரணமாக கனடிய தமிழர்களுக்குத் தெரிவித்திருக்கும் காரணம் இதுதான்:

"கனடா வாழ் தமிழர்களிற்குள் பிரதேசவாதம், மதம், சாதி மற்றும் இனத்துவேசத்தை ஏற்படுத்துவதற்காக சிங்கள புலணாய்வாளர்களின் ஏற்பாட்டில் இலங்கையின் புதிய அரசாங்கம் தொடங்குவதற்கு முன், லண்டனில் நடைபெற்ற சதுர மேசை மாநாட்டில் அச்சாணி போடப்பட்டு, கனடாவில் விதைக்கப்பட்ட விதை தான் "தீபம்" பத்திரிக்கை. இந்த விஷப் பத்திரிக்கையை மக்கள் முழுமையாக புறக்கணியுங்கள்."

இத்தகைய பயமுறுத்தல் அரசியல் கனடியத் தமிழ் மக்களுக்குப் புதியதல்ல. விளம்பரங்களை நிறுத்திவிடுவோம், எரிப்போம் என மிரட்டுவதும் கூடப் புதிதல்ல. கனடாவில் தமிழ் பத்திரிகைகளைக் கடைகளில் இருந்து தூக்கி வீசியதும் வாசிக சாலையை எரித்ததும் கூட நாம் அறியாதவை அல்ல. கருத்துச் சுதந்திரத்துக்கும் ஊடக சுதந்திரத்துக்கும் எதிரான போக்கை நாமும் ஜனநாயக், சட்ட வழிகளில் எதிர்ப்போம். முகமூடிகளைப் போட்டுக் கொண்டல்ல.

தீபத்தைப் புறக்கணிக்கும்படி கோரும் இந்தப் பகுதியில், தாம் சொல்லும் எந்த ஒரு விடயத்தைத் தானும் பத்திரிகையில் இருந்து மேற்கோள் காட்டித் தெரிவிக்க முடியாததால் (இருந்தால் தானே மேற்கோள் காட்ட), வெறுமனே, 'விசத் தீபம்', 'சீர்கெட்ட ஆக்கம்', 'விசக் கிருமிகள்'.' சிங்களப் புலனாய்வாளர்களின் ஏற்பாட்டில் தொடங்கப்பட்டது' 'தேசியத்தலைவரைப் பற்றிக் கீழ்த்தரமான செய்திகளைப் பரப்பிய விஷ யந்துக்கள்' எழுதுகிறார்கள் என்று மட்டுமீறிய மனக் கிலேசத்துடன் பொரிந்து தள்ளியிருக்கிறார்கள்.

சிங்களப் புலனாய்வாளர்கள் மற்றும் தேசியத்தலைவர் பற்றிக் கூறிவிட்டால், கண்ணை மூடிக்கொண்டு தாம் சொல்வதையெல்லாம் கனடியத் தமிழர்கள் நம்பிவிடுவார்கள் என்ற இவர்களது நம்பிக்கை மிகவும் பரிதாபத்துக்குரியது. தவிரவும், இது கனடியத் தமிழ் மக்களை மூடர்கள் என்று நினைத்துக் கொண்டு தெரிவிக்கும் ஒரு கருத்துமாகும்!. இத்தகைய பொய்யான, ஆதாரமற்ற கருத்துக்களால் மிரட்டப்படக் கூடிய ஒரு பத்திரிகை அல்ல தீபம் என்பதை இந்த முகநூல் வீரர்களும் முகமூடியொடு கட்சிகளுக்கு வக்காலத்து வாங்கும்அரசியல்காரரும் முதலில் புரிந்து கொள்வது நல்லது.

ஒன்ராரியோ பழமைவாதக் கட்சி தொடர்பாக ஒரு பத்தியில் வெளியான விமர்சனங்களுக்கு, அவற்றில் தவறிருந்தால், சுட்டிக்காட்டி உரிய முறையில் பதிலளிக்கக் கூடிய தார்மீகப் பலமோ, பொறுமையோ அற்று ஆத்திரப்படுவதால் வரும் வார்த்தைகளே இவை என்பது தீபத்துக்குத் தெரியும். தீபம் தனது ஆசிரியர் தலையங்கங்களில் மிகவும் தெளிவாக தனது கருத்துக்களை தெரிவித்து வந்துள்ளது: தீபத்தின் நிலைப்பாடு எபோதும் மக்கள் நலன் சார்ந்ததாகவே இருக்கும், கட்சிகள் சார்ந்ததாக அல்ல. அவற்றைத் தொடர்ந்து படிப்பவர்களுக்கு அதன் நிலைப்பாடு தெரியும். இணையத்தில் எங்களுடைய எல்லா ஆசிரியர் தலையங்ககையும் நீங்கள் வாசிக்கலாம். அண்மையில் நடந்த தேர்தலிலும் தீபத்தின் நிலைப்பாடாக அதுவே இருந்தது.

தீபத்தில் வரும் விடயங்கள் தொடர்பாக மாறுபட்ட கருத்துக்கள் இருக்குமாயின் எவரும் அவற்றை விமசித்து எழுதலாம். தீபம் அவர்களுடைய கருத்துகளைத் வெளியிடுவதற்கு எப்போதும் தயாராகவே உள்ளது. அந்தக் கருத்துக்கள் உரிய இடம் வழங்கப்பட்டுப் பிரசுரிக்கப்படும்

ஆகவே தீபத்தை அழித்துவிடும் வீண் முயற்சியில் இறங்குவதை விட்டு, உங்கள் கருத்துக்களை வெளிப்படையாக எழுதி விவாதிக்க வாருங்கள். வார்த்தைகளை வார்த்தைகளால் எதிர்கொள்ள இன்னுமா உங்களுக்குத் தெரியாது? நிதானமான, அறிவு சார்ந்த உரையாடல்கள் விவாதங்கள் மூலமாகவே சரியானதை கண்டடைவதற்காக நாமும் மக்களுடன் சேர்ந்து பயணிக்க முடியும்.!

2015 - 2016 புதிப்புரிமை தீபம் கனடா.

ஆக்கங்களின் கருத்துக்களுக்குப் படைத்தோரே பொறுப்பு. பத்திரிகையில் வெளியாகும் செய்திகள், ஆக்கங்கள், படங்கள் மற்றும் கருத்துக்கள் யாவும் தீபம் கனடாவுக்குச் சொந்தமானவை. படியெடுத்தல் மீள்பதிப்புச் செய்தல் மற்றும் தழுவுதலுக்கு எழுத்து வாயிலான அனுமதி பெற வேண்டும்.

Deepam Canada
3-2094 Lawrence Ave.E
Toronto on M1R 2Z6 Canada
416.240.9727
info@deepam.news editor@deepam.news www.deepam.news

கடிதத்தில் இருந்ததை நான் அறியேன் என்கிறார் பற்றிக் ப்ரவுண்!

ஸ்காபரோ ரூஜ் றிவர் இடைத் தேர்தலின்போது வீடுவீடாக வழங்கப் பட்ட, பாலியல் கல்வி தொடர்பான, தனது கையொப்பத்துடனான கடிதம் பற்றி தனக்கு எதுவும் தெரிந்திருக்கவில்லை என்று தெரிவித்திருக்கிறார் ஒன்ராரியோ பழமைவாதக் கட்சியின் தலைவர் பற்றிக் ப்ரவுண். அந்தச் செயலை தமது கட்சியும், தலமை அலுவலரும் செய்திருந்த போதும் அந்தக் கடிதத்தை தான் பார்க்கவே இல்லை என்று அவர் திங்களன்று குயீன்ஸ் பார்க்கில் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் தெரிவித் தார். இந்த விடயம் தொடர்பாக அவர்மீதான விமர்சனங்கள் பரவலாக அடிபட்டுவந்த போதும், தேர்தலுக்குப் பின், நேரடியாக அவர் ஊடகவியலாளர்களை எதிர்கொண்டது இந்தச் சந்தர்ப்பத்தில் தான். "அந்த விடயத்தில் தவறு நடந்து விட்டது. நான் அந்தக் கடிதத்தைப் பார்க்கவில்லை. ஆனாலும் நான் அதற்குப் பொறுப்பு எடுத்துக் கொள்கிறேன். அதற்காக நான் மன்னிப்புக் கோருகிறேன். இவ்வாறான தவறு இனிமேல் நடக்காது என்று நம்புகிறேன் என்று அவர் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார். 'ஒரு தவறு நடந்தது..நாம் பாடங்களைக் கற்றுக்கொண்டோம்" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

நடந்துமுடிந்த இடைத் தேர்தலின்போது, பழமைவாதக் கட்சி ஆங்கிலத்திலும் சீன மொழியிலுமாக பற்றிக் ப்ரவுனின் கையெழுத்துடன் 13500 கடிதங்கள் மக்களிடம் விநியோகிக்கப்பட்டன. ஒகஸ்ட் 24ம் திகதியிடப்பட்ட இக் கடிதம் தாம் பதவிக்கு வரும்போது, இந்தப் புதிய பாலியல் கல்விக்கான பாடத்திட்டத்தை இல்லாதொழிப்போம் என்று என்று தெரிவித்தது. ஆயினும், தேர்தலுக்கு முன்னதாக , 29ம் திகதியன்று, தாம் அவ்வாறு கடிதத்தில் எழுதியிருந்தது தவறு, நாம் அப்படிச் செய்ய மாட்டோம் என்று பற்றிக் ப்ரவுண் அறிவித்திருந்தார். நான் இப்படிச் சொல்வதால் சில வேலைகளில் இந்தத் தேர்தலில் தனது கட்சி தோல்வியடையவும் கூடுமென்றாலும், நான் அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தவை தவறு என்றே சொல்கிறேன் என்று தெரிவித்திருந்தார்.

திங்களன்று,அவர் இதைமேலும்வலியுறுத்தும் விதத்தில், 'அந்தக் கடிதத்தில் இருந்த விடயங்கள் எனக்கு உடன்பாடில்லாதவை. நான் இதை முதலே தெரிவித்துவிட்டேன்..எமது அரசாங்கம் இந்தக் கல்வித் திட்டத்தை இல்லாமலாக்கப் போவதில்லை' என்று கூறினார்.

ஆனால்,ப்ரவுணின் பிரதான அலுவலரான நிக்கொலஸ் பப்பலார்டோ, பாலியல் கல்விக்கு எதிரான கருத்துடன் இயங்கிவருபவரும், இந்தத் தேதலில் சுயேட்சை வேட்பாளராகக் நின்றவருமான குயினீ யூ என்பவருக்கு அனுப்பிய மின்னஞ்சல் ஒன்றில், தாமது கட்சி இந்தப் பாலியல் கல்வியை ஏற்றுக் கொள்ளவில்லை என்று தெரிவித்திருந்தார். அந்த மின்னஞ்சலுக்கு 'ஒன்ராரியோ பழமைவாதக் கட்சியின் தலைவரிடமிருந்து ஒரு கடிதம்' என்று தலைப்பிடப்பட்டு இந்தக் கடிதத்தின் பிரதியும் இணைக்கப்பட்டிருந்தது. மின்னஞ்சலில், குயினீ யூ அவர்களை விளித்து, இணைக்கப்பட்டுள்ள பெற்றோர்களுக்கான திறந்த கடிதத்தைப் பார்க்கும் படியும், அதன் பிரதிகள், அந்த வார இறுதியில் பரவலாக வினியோகிக்கப்படும் என்றும் அவர் எழுதியிருந்தார். செப்ரெம்பர் முதலாம் திகதி, அதாவது தேர்தல் தினத்தன்று, பழமைவாதக் கட்சியின் தலைவரான றிக் டிக்ஸ்ரா இப்படி ஒரு கடிதம் வழங்கப்படுவது தனக்குத் தெரியும் என்றும் தெரிவித்திருந்தார். இவையெல்லவற்றையும் குறிப்பிட்டு, அப்படி எவ்வாறு பற்றிக் ப்றவுனுக்குத் தெரியாமல் அவர்கள் செயற்பட்டிருக்க முடியும் என்று தொறொன்ரோ ஸ்ரார் கேள்வி எழுப்பியுள்ளது. ப்ரவுணுக்குத் தெரியாமல், அவரது அனுமதியில்லாமல் எப்படி அவர்களால், அப்படிச் செய்ய முடிந்தது என்பதை ப்ரவுணால் விளக்க முடியவில்லை என்று அது மேலும் தெரிவிக்கிறது. நாங்கள் எமது கட்சி உள்ளக விடயங்களை வெளியில் பேசுவதில்லை' என்று மட்டும் அவர் தெரிவித்திருந்தார்.

நல்ல கொள்கைதான். ஆனால் கட்சியின் கொள்கை எது, அதற்கு முரணான விதத்தில் நடப்பது என்றால் என்ன என்று தெரியாத நபர்களைத்தான் பற்றிக் ப்ரவுண் தனக்காக வேலை செய்ய வைத்திருக்கிறார் என்றால் அது உண்மையில் ஒரு நல்ல விடயமாகத் தெரியவில்லை.!

கனடியத் தமிழர் பேரவையின் 8வது நிதிசேர் நடை:

படுவான்கரையில் 'கனடா மட்டக்களப்பு நட்புப் பண்ணை' அமைகிறது!

கனடியத் தமிழர் பேரவையின் 8வது ஆண்டு நிதிசேர் நடை 2016 செப்டெம்பர் 11ந்திகதி ஞாயிற்றுக்கிழமை ஸ்காபரோ, தொம்சன் பார்க்கில் நடைபெற்றது. ஏராளமான பொதுமக்களும், பல தமிழ் அமைப்புக்களும் இந்த நிதிசேர் நடையில் ஆர்வத்துடன் கலந்து கொண்டு நிகழ்வை வெற்றிகரமானதாக்கினர்.

இவ்வாண்டிற்கான நிதிசேர் நடை 'கனடா மட்டக்களப்பு நட்புப் பண்ணை' என்று அழைக்கப்படும் நல்லின மாடு வளர்ப்புத்திட்டத்திற்காக நடத்தப்பட்டது. இந்த ஆண்டிற்கான நிதி சேர் நடையில் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ சதாசிவம் வியாழேந்திரன் அவர்கள் கலந்து கொண்டார்கள். 'கனடாமட்டக்களப்பு நட்புப் பண்ணை'யின் உருவாக்கத் திட்டம் திரு சதாசிவம் வியாழேந்திரன் அவர்களால் முன்மொழியப்பட்டு, கனடியத் தமிழர் பேரவையினரால் கனடாத் தமிழர்களின் உதவியுடன் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டு நடத்தப்பட்ட நிதிசேர் நடையானது இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் சம்பூர் பிரதேசத்தில் ஒரு வீடமைப்புத்திட்டத்தை உருவாக்கித்தர நடத்தப்பட்டது. அந்த நிதிசேர் நடையின்மூலம் ஒருலட்சம் டொலர்களுக்கும் மேலாக நிதி திரட்டப்பட்டது. அவ்வாறு திரட்டப்பட்ட நிதியின் மூலம் சம்பூரில் அமைக்கப்பட்ட 41 வீடுகளும் கணவரை இழந்த பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு கனடியத் தமிழர் பேரவையினரால் வழங்கப்பட்டன என்பது நீங்கள் அறிந்ததே.

இந்த ஆண்டிற்கான நிதிசேர் நடையின் பலனாக 50 நல்லின மாடுகளையும் 50 கன்றுகளையும் கொண்டதொரு பண்ணையாக 'கனடாமட்டக்களப்பு நட்புப் பண்ணை' கிழக்கு மாகாணத்தின் படுவான்கரைப் பிரதேசத்தில் உருவாகும். பண்ணை அமைவதற்காகத் திட்டமிடப்பட்ட மொத்தத் தொகை 100,000 டொலர்கள் என்பதும், நிதிசேர் நிகழ்வின்போது அந்த இடத்தில் வைத்து மட்டும் 65,000 டொலர்கள்வரை திரட்டப்பட்டுவிட்டது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எஞ்சியுள்ள தொகையினைத் திரட்ட உதவி புரிய முன்வருவோர் கனடியத் தமிழர் பேரவையுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளும்படி பணிவன்புடன் வேண்டப்படுகின்றனர். பண்ணைக்கான நிதி சேகரிப்பு நொவம்பர் மாத இறுதிவரை தொடரும் என்று கனடியத் தமிழர் பேரவையினர் தெரிவிக்கின்றனர்.

இந்த நிதிசேர் நடவடிக்கையின் போது எடுக்கப்பட்ட ஒளிப்படங்கள் சிலவற்றை இங்கே காணலாம்:

அறிக்கையைப் பதுக்கிய பான் கி மூன்!

கனடிய ஆயுத நிறுவனங்கள் சட்டத்தை மீறி வேறு வேறு நாடுகளுக்கு ஆயுதங்களை விற்பதைப் பற்றி நாம் அடிக்கடி இந்தப் பத்தியில் எழுதியுள்ளோம். கனடாவின் நிறுவனமொன்று சூடானுக்கும் லிபியாவுக்கும் பல மில்லியன் டொலர்கள் பெறுமதியான ஆயுதங்களை விற்றிருக்கின்றது என இப்போது தெரிய வந்துள்ளது. ஒன்ராறியோ மாநிலத்தின் இன்னிஸ்வில் என்ற இடத்தில் அமைந்திருக்கும் ஆயுதத் தொழிற்சாலை Streit நிறுவனத்துக்குச் சொந்தமானது. துருப்புக் காவும் ஆயுத வாகனங்கள் (Armed personnel cariier), வேறு பல படையணிப் பொருட்களை இந்த நிறுவனம் ஐக்கிய அரபு ராச்சியத்துடன் இணைந்து சூடான், தெற்கு சூடான், லிபியா போன்ற நாடுகளுக்கு விற்றுள்ளது. இந்த நாடுகளுக்கு எதிரான ஆயுதத் தடையை ஐ.நா.அவை விதித்துள்ளது தெரிந்ததே. இந்தத் தடையையும் மீறியே கனடிய நிறுவனம் ஆயுதங்களையும் போர்த்தளபாடங்களையும் விற்றுள்ளது. உள்நாட்டுப் போர்களை நீடிப்பது ஆயுத வணிகர்களுக்கே அதிக நன்மை என்பது நாம் அறியாத ஒன்றல்லவே!!!!

இப்பொழுது கனடாவின் RCMP இந்த விவகாரம் தொடர்பாக விசாரணைகளைத் துவங்கி இருக்கிறது. இந்த ஆயுத விவகாரம் பற்றிய அறிக்கையையும் பான் கி மூன் தன்னுடைய வழமைப்படி ரகசியமாகப் பதுக்கி வைத்து விட்டார். மூச்சே காட்டவில்லை. கனடியத் தொலைக் காட்சியான சிஙிசிஇதனை அம்பலப்படுத்தியிருக்கிறது.

– அபிஷ்டு

கெல்லி லீற்ச்

கெல்லி லீற்ச் என்னும் அம்மையாரைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களோ இல்லையோ தெரியாது. என்றாலும் அவரை நீங்கள் நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டிய நேரம் இது. ஹார்ப்பர் என்பவர் பழமைவாதக் கட்சி ஆட்சியில் பிரதமராக இருந்தபோது அவருடன் இணைந்து பணி புரிந்த நாடாளுமன்ற உறுப்பினர் கெல்லி லீற்ச். இஸ்லாமியர்களுக்கு எதிராக ஹார்ப்பரும் அவருடைய கட்சியும் " காடுமிராண்டித்தனமான பண்பாட்டு நடவடிக்கைகளை" (Barbaric Cultural Practices) தடை செய்ய வேண்டும் எனப் பிரசாரத்தை ஆரம்பித்த பொழுது அதன் முன்னணிச் செயல்பாட்டு வீராங்கனையாக இருந்தவர் இந்த அம்மையார். கனடாவில் எந்த மூலையில் " காட்டுமிராண்டித்தனமான பண்பாட்டு நடவடிக்கைகள்" இடம் பெற்றாலும் உடனடியாகக் காவல்துறைக்கு அறிவிப்பதற்கெனதொலைபேசி Hotline ஒன்றை ஏற்படுத்த வேண்டும் எனப் பிரேரித்தவர். (நமது தேர்த் திருவிழாக்கள், ஆடி அமாவாசை, தூக்குக் காவடி, உணவைக் கைவிரல்களால் சாப்பிடுவது என்பனவெல்லாம் இந்தக் காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகளுக்குள்தான் அடங்குமா என்பதைப் பழமைவாதக் கட்சியின் தீவிரமான தமிழ் அணுக்கத் தொண்டர்கள் யாராவது விசாரித்துச் சொன்னால் நல்லது!)

ஹார்ப்பர் விலகிய பிறகு ஏற்பட்டுள்ள தலைமைப் பதவி வெற்றிடத்தை நிரப்ப இடம்பெற இருக்கும் உட்கட்சித் தேர்தலில் முன்னணி வேட்பாளராகக் கெல்லி லீற்ச் இருக்கிறார். பழமைவாதக் கட்சியின் தேசியத் தலைவராக அவர் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இப்போது லீற்ச் அம்மையார் புதிய பீதியொன்றைக் கிளப்பி விட்டுள்ளார். கனடாவுக்கு வர இருக்கும் புதிய குடிவரவாளர்கள் அனைவரையும் அவர்கள் " கனடிய விழுமியங்களுக்கும் கோட்பாடுகளுக்கும்" எதிராக இருக்கிறார்களா எனப் " பரிசீலனை" செய்ய வேண்டும் என அவர் முன்மொழிகின்றார். புதிய குடிவரவாளர்களையும் வெள்ளையர் அல்லாதவர்களையும் சந்தேகத்தோடும் இனவாதக் கண்களோடும் பார்ப்பது கனடா, அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து, போன்ற எல்லா நாடுகளினதும் வரலாற்று இயல்பு. இப்போது அமெரிக்காவில் டொனால்ட் ட்றம்ப், ஃபிரான்ஸின் மரி லு பென், இங்கிலாந்தில் வெளிநாட்டவர்களுக்கு எதிரான ஹிரிமிறி கட்சி எனப் பலரும்/பலதும் அண்மைக்காலங்களாகப் பலம் பெற்று வருகின்றன/ர். அந்த வரிசையில்தான் ஹார்ப்பரும் அவருடைய கட்சியும் வருகின்றன. எனினும் ஹார்ப்பர் தோற்றுவிட்டார். இப்போது அவருடைய வாரிசாக இனவாதத்தையும் வெளியார் வெறுப்பையும் (XENOPHOBIA) பதாகை போல உயர்த்திப் பிடிக்க லீற்ச் அம்மையார் வந்துள்ளார். தலைமைப் பதவிக்கான இன்னுமொரு வேட்பாளரான தோனி க்ளிமெண்ட்ஸ் அவர்களும் லிற்ச் அம்மையாருக்குச் சளைத்தவர் அல்லர். வெறுப்பில் அரசியல் செய்பவரை ஒறுப்பது அறமாக இல்லாவிட்டாலும் மக்கள் வாக்களிப்பின் போது அதனைச் செய்யலாம்!.

வல்லுறவு செய்தவருக்கு வழி சொல்லிக்கொடுத்த நீதிபதி!

பாலியல் வல்லுறவு வழக்கொன்று கனடா நீதிமன்றம் ஒன்றில் விசாரணைக்கு வந்தது. வழக்கில் நீதிபதியாகப் பணியாற்றிய றொபின் காம்ப் என்பவர் வழக்காளியான, வல்லுறவுக்குள்ளான பெண்ணைப் பார்த்துக் கேட்டார்: உன்னுடைய முழங்கால்களை இறுக்கமாக மூடி வைத்திருக்கலாமே? நீ ஏன் அப்படிச் செய்யவில்லை? ("Why couldn't you just keep your knees together?") 2014 இல் நடந்த இந்த வழக்கில் அவர் மேலும் உதிர்த்த பொன்மொழிகள்:

பொன்மொழி1: காமத்தைப் பற்றிப் பொதுவாகவும் இளம்பெண்களுடனான உடலுறவு பற்றிச் சிறப்பாகக் குறிப்பிடும்போதும் அவர் சொன்னது: இளம் பெண்களுக்கு உடலுறவு தேவை. அதுவும் அவர்கள் நன்றாகக் குடித்திருந்தால் அவர்களுக்குக் கட்டாயமாக அது வேண்டும்!

பொன்மொழி2: காதலும் காமமும் வலியும் நோவும் ஒன்றுடன் ஒன்று பிணைந்தே இருப்பவை. அது அப்படியொன்றும் மோசமானதல்ல.

வல்லுறவு செய்தார் என்று குற்றம் சாட்டப்பட்டவரை றொபின் காம்ப் விடுதலை செய்து விட்டார். அதன் போது அவர் உதிர்த்த இன்னொரு பொன்மொழி:

பொன்மொழி3: இளைஞனே, நான் உனக்கும் உனது நண்பர்களுக்கும் சொல்ல விரும்புவது இதுதான்: பெண்களுடன் மிக மிக மென்மையாக இரு. உங்களுக்குப் பொறுமை மிக அதிகம் வேண்டும். மிகக் கவனமும் அவதானமும் வேண்டும்

றொபின் காம்ப்புக்கு என்ன நடந்தது" வழக்குக்கு என்ன நடந்தது என அறிய வேண்டுமா: அடுத்தவாரம் வரை பொறுத்திருங்கள்!!!!!!

றொபின் காம்ப்

சிங்களவரின் காலடியாக மாறும் பீமனின் காலடி

பஞ்சபாண்டவர் வாழ்ந்த வவுனியா கிராமத்தின் அவலம்

பஞ்சபாண்டவர்கள் இலங்கையில் அதுவும் வடக்கு வவுனியாவில் வசித்தார்கள் என்ற ஐதீகம் உள்ளதை எத்தனைபேர் அறிந்திருக்கிறீர்கள்?

ஆம். வவுனியாவிலுள்ள வீமன்கல்லு என்ற கிராமம்தான் இந்த ஐதீக நம்பிக்கையுடன் தொடர்புடைய கிராமம். அந்த கிராமத்திலுள்ள குளத்தின் அணைக்கட்டில் பதிந்துள்ள பெரிய பாதம் பீமனுடையது என்பது நீண்டகால ஐதீகம்.

பீமனின் காலடித்தடம் பதிந்த கிராமத்தை பார்ப்பதற்காக கிளம்பினோம். அங்கு சென்ற பின்னர்தான் பண்டைய புராணத்துடன் தொடர்புபட்ட நமது கிராமமொன்று சந்திக்கும் பேராபத்தும் புரிந்தது. வவுனியாவின் எல்லைப்புற கிராமமான வீமன்காமம் தமிழர்களிடமிருந்து பறிபோகும் தறுவாயில் உள்ளது. அங்கு செல்வதற்குள் முற்றுமுழுதான சிங்கள கிராமங்கள் பலவற்றை கடக்க வேண்டியிருந்தது. சிங்கள மயமாகி வரும் பிரதேசத்தில் கடைசிமூச்சை விட்டுக் கொண்டிருக்கும் நமது வரலாற்று கிராமத்தின் கதை துயரமானது.

பஞ்ச பாண்டவர்களின் வனவாச காலத்தில் பல வனங்களில் தமது வாழ்க்கையை நடாத்தியதாக கூறப்படுகிறது. அவர்கள் வனவாசம் செய்த இடங்களிலொன்றே வீமன் கல். காட்டை அண்மித்த கிராமம். முன்னர் காடாக இருந்து கிராமமுமாகியிருக்கலாம்.

அந்த கிராமத்தில் குளமொன்றுமுள்ளது. அந்த குளத்தின் அணைக்கட்டு இயற்கையான கல்லால் அமைந்துள்ளது. அந்த கல் அணைக்கட்டில் பெரிய பாதச்சுவடு ஒன்று ஆழமாக பதிந்துள்ளது. அது பீமனின் காலடித்தடம் என்கிறார்கள். மற்றைய காலடித்தடம் குளத்தின் நடுவில் பதிந்துள்ளதென்ற ஐதீகம் உள்ளது. குளம் வறண்டு, அந்த காலடித்தடத்தை யாராவது பார்த்தார்களா தெரியவில்லை. அதுபற்றி பேச அங்கு யாருமில்லை.

ஏனெனில், அந்த கிராமமே இப்பொழுது காணாமல் போய்க்கொண்டிருக்கிறது. இருக்கும் மனிதர்களும் விரல்விட்டு எண்ணத் தக்கவர்கள்தான். சிறப்பு மிக்க இக்கிராமம் தற்போது சிங்களவர்களிடம் சிறிது சிறிதாக நம்மவர்களாலேயே தாரை வார்க்கப்பட்டுவரும் வேதனையான நிகழ்வும் நடைபெற்று வருகின்றது.

பீமன் கல்லில் வாழ்ந்த 35 குடும்பங்களின் பிரதான தொழிலாக விவசாயம் காணப்பட்டுள்ளது. பிரதான குளமான பீமன்கல் குளத்தின் நீரை கொண்டு 82 ஏக்கரில் நெற் செய்கை, மானாவாரி செய்கை, மாடு வளர்ப்பு என இந்த மக்களின் வாழ்வு 1977ம் ஆண்டு இடம்பெயர்வுடன் சீரழிந்து போய்விட்டது. அதன் பின்னர் மீண்டும் 60 குடும்பங்கள் 2010ம் ஆண்டு குடியேறிய போதும் இக்கிராமத்தை சூழ தற்போது மாமடுவ, மகாகச்சக்கொடி என சிங்கள கிராமங்கள் காணப்படுவதாலும் கடந்த கால அரசாங்கத்தினால் இக்கிராமத்தில் அபிவிருத்தி திட்டங்கள் எதுவும் செய்யாமையாலும் இங்கு குடியேறிய மக்கள் திரும்பி செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

தற்போது 15 ஏக்கர் வயல் நிலங்களும், மக்களின் வாழ்விடங்கள் சிலவும் சிங்களவர்களிற்கு விற்கப்பட்டுள்ளதுடன் 82 ஏக்கர் வயல் நிலத்தில் சிங்களவர்கள் நெற்செய்கையை மேற்கொள்கின்றனர்.

60 குடும்பங்களில் தற்போது 06 குடும்பங்கள் மட்டுமே இக்கிராமத்தில் வசிக்கின்றனர். அதிலும் ஒரு குடும்பம் சிங்கள குடும்பமாக காணப்படுகின்றது. புதிய அரசு உதயமான பின்னர் மலசல கூடம் வழங்கப்பட்டுள்ளதோடு, அனர்த்த முகாமைத்துவ பிரிவின்கீழ் 50000 பெறுமதியான வீடு 05 பேருக்கு வழங்கப்பட்டிருந்தது. தற்போது எஞ்சிய ஒருவருக்கும் வீடு வழங்குவதற்குரிய நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

இது ஒருபுறமிருக்க இங்கு விவசாயத்தில் ஈடுபடும் மக்கள் யானைகளாலும், குரங்குகளாலும் மிகுந்த சிரமப்படுகின்றனர். தமது பயிர்ச்செய்கைகளில் பாதிக்குமேல் விலங்குகளால் அழிக்கப்பட்டுவிடுவதாக கவலை தெரிவித்தனர்.

இங்கு வாழும் குடும்பங்களின் எண்ணிக்கை மிகவும் குறைவடைந்ததன் விளைவாக இங்கு 05ம் ஆண்டு வரை நடைபெறும் கட்டிட வசதியுள்ள பாடசாலையில் வெறும் 05 பேர் மட்டுமே கல்விகற்கின்றனர். சில நாட்களில் அந்த மாணவர்களும் வராமல் விட்டுவிடுவார்கள். அப்போது ஆசிரியர்கள் மட்டுமே பாடசாலையில் இருப்பார்கள்.

1977 இல் அங்கிருந்து இடம்பெயர்ந்த பெரும்பாலானவர்கள் நகரவாழ்க்கைக்கு பழக்கப்பட்டு விட்டனர். குலீட்டோரமாக உள்ள பூர்வீக கிராமத்திற்கு செல்ல அவர்கள் தயங்குகிறார்கள். சிங்களவர்கள் மட்டுமே வாழும் பிரதேசமாக மாறிவருவதால், தமது நிலங்களையும் சிங்களவர்களிடமே விற்றுவிடுகிறார்கள். இந்த விடயத்தில் மக்களை குற்றம்சொல்வதா, அவர்களின் கிராமத்தை அபிவிருத்தி செய்து கொடுக்காத நமது தமிழ் அரசியல்வாதிகளை குற்றம் சொல்வதா என்று தெரியவில்லை.

இது யாருடைய குற்றமென்பதற்கு அப்பால், நிகழப்போகும் விபத்து ஒன்றே ஒன்றுதான்.

சிவனொளிபாத மலையிலிருந்த சிவனின் காலடித்தடம், சிறீபாத மலை புத்தரின் காலடித்தடமாகியதை போல, வீமன் காமத்திலுள்ள பீமனின் காலடித்தடம் விரைவில் வேறு யாரோவினது காலடித் தடமாகவும் மாறலாம். நம்மவர்கள் அதை பார்ப்பதற்கு போட்டிபோட்டுக்கொண்டு பேரூந்துக்களில் சுற்றுலா கிளம்புவார்கள் என்பது மட்டும் நிச்சயம்.

– வன்னிமது

வாங்குதல் விற்றல் மற்றும் முதலிடுதலில்
தேர்ச்சி பெற்ற சேவை

» Residential
» Commercial
» Investment

» Free home evaluation
» Mortgage
» Home Inspection
» All Other Real Estate Needs

SUTHAHOMES.ca
Ph: 416-271-5420

To work with an experienced realtor who genuinely cares about your needs and truly understands the local market!

CALL TODAY!

Sutha Balasubramaniam, B.Eng
Real Estate Broker

416-271-5420
suthab@gmail.com

HomeLife/Future Realty Inc., Brokerage
7 Eastvale Dr, unit 205., Markham, ON L3S 4N8
905-201-9977

“தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்து எமது நிலங்களைப் பாதுகாக்கவும் முயல்கிறோம்”

தமிழர் பேரவையின் ‘கனடா மட்டக்களப்பு நட்புப் பண்ணை’யின் நோக்கம் இதுதான் என்கிறார் வியாழேந்திரன்.

(மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ சதாசிவம் வியாழேந்திரன் அவர்கள் கனடா வந்துள்ளார். தன் குறுகிய காலப் பயணத்தின்போது பல மனிதநேயத் திட்டங்களை மட்டக்களப்பு மாவட்டத்தில் செயல்படுத்துவதற்கு ஒரு உறவுப்பாலமாகத் தன் முழுநேரத்தையும் அர்ப்பணித்து இங்கு முழுமூச்சுடன் செயற்பட்டு வருகிறார். அவரை 'தீபம்' இதழுக்காக சந்திக்கிறோம்.)

தீபம்: பல மனித நேயத் திட்டங்களில் ஈடுபட்டிருக்கிறீர்கள். உதாரணத்திற்கு கனடியத் தமிழர் பேரவையின் 'கனடா மட்டக்களப்பு நட்புப் பண்ணை' திட்டத்திலும் நீங்கள் பெரும் பங்கு வகிக்கிறீர்கள். இப்பேர்ப்பட்ட திட்டங்களை செயல்படுத்துவதில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக உங்கள் பங்கு என்ன? அதில் நீங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் என்ன?

வியாழேந்திரன்: *புலம்பெயர்ந்து கனடாவில் வாழும் பலரும் தாயகத்தில் வாழும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாக இருப்பதில் பெரும் விருப்புக் கொண்டவர்களாகஇருக்கிறார்கள்.உதவிகள் செய்கிறார்கள். தாம் செய்யும் உதவிகள் சரியான முறையில், சரியான திட்டங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக நான் அங்கு இருப்பதால் கனடா மக்களின் உதவிகள் சரியான முறையில் பாதிக்கப்பட்ட பலருக்கும் சென்று சேர்வதை உறுதி செய்ய முடிகிறது. இலங்கையின் நாடாளுமன்ற உறுப்பினராக நான் பங்கெடுக்கும் அனைத்துத் திட்டங்களும் கனடா தமிழ் மக்களால் தாயகத்து மக்களின் துயர் துடைப்பதற்காகச் செய்யப்படுபவை.*

சவால்கள் என்று சொல்லும்போது... ஆம்.

சவால்கள் பல இருக்கின்றன. மக்களின் உடனடியான தேவைகளுக்குரிய சரியான திட்டங்களை அடையாளம் காணுவது ஒரு சவால். அந்தத் திட்டங்கள் தொடர்ச்சியாக இயங்குவதையும் தூரநோக்குடன் செயற்படுவதையும் உறுதி செய்வது இன்னொரு சவால். முக்கியமாக இத்திட்டங்கள் சுயமாகவும், காலப்போக்கில் இலாபமீட்டி அந்த இலாபங்கள் வேறு திட்டங்களுக்கு அத்திவாரமாக அமைவதை உறுதிப்படுத்துவது மிக முக்கியமான சவால்.

தீபம்: இச்சவால்களை எவ்வாறு எதிர் கொள்கிறீர்கள் என்பதை அறிய ஆவலாக இருக்கிறது. அதுபற்றி கொஞ்சம் விளக்குவீர்களா?

வியாழேந்திரன்: *எந்த ஒரு திட்டத்திற்கும் முதல் சவால் உரிய நிதியைப் பெறுவதாகும். அதுதான் ஒரு திட்டத்தின் முதற்கட்ட அம்சமுமாகும். ஆனால் அதுவே முற்று முழுதான தீர்வும் அல்ல. புலம்பெயர்ந்தோர் பல சிரமங்களின் மத்தியிலும் மனம் உவந்து நிதியுதவி செய்கிறார்கள். அப்படியிருக்கும்போது ஒரு திட்டத்தை நிறைவு செய்வதற்காகத் தரப்பட்ட நிதி உரிய திட்டங்களில் வீண் விரயமில்லாமல் பயன்படுத்தப்படுவது உறுதி செய்யப்படுதல் வேண்டும். அதற்கு முன்கூட்டிய திட்டமிடல் மிக மிக அவசியம்.*

இன்றைய நிலையில், போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுதல்தான் எமது முதற் கவனமாக இருக்கிறது. அந்த உதவி அவர்களுக்குத் தொடர்ச்சியான பலனையும் தரவேண்டும். இதை புரிந்து, பாதிக்கப்பட்ட மக்கள் குறித்த தள நிலையில் அமைந்த ஆய்வுகளை நாம் முதலில் மேற்கொள்கிறோம். அதற்குப் பொருத்தமான திட்டங்களை அடையாளப்படுத்துகிறோம். உதவிகள் கிட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் வரும்போது உதவி புரிய முன்வரும் அனைவரிடமும் அத்திட்டங்கள் பலவற்றையும் வெளிப்படுத்துகிறோம். இருபகுதியும் இணைந்துதான் ஒரு திட்டம் எங்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறது. அதன் பின்னர் அத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான நிதித் திட்டமிடலை மேற்கொள்கிறோம். பங்களிப்பு தரப்படப்போகின்ற கால அளவைக் கணக்கிட்டு உதவித் திட்டங்களுக்கான நிறைவேற்றுப் படிமுறைகளைத் திட்டமிடுகிறோம். பின்னர் திட்டங்களை வெற்றிகரமாகச் செய்து முடிக்கிறோம். குறிப்பாக திட்டம் ஆரம்பித்ததில் இருந்து முடியும்வரை நிறைவேற்றுப் படிமுறைகளை அணுக்கமாகக் கண்காணிக்கவும் செய்கிறோம். இவைதான் நாம் சவால்களை வென்றெடுக்கும் படிமுறைகளாகும்.

தீபம்: உங்கள் பதிலில் இருந்து இங்கிருக்கும் ஒரு நிதி வழங்கும் அமைப்பு தரும் நிதியானது அங்கு வீணாவதற்கான சந்தர்ப்பங்கள் உங்கள் கண்காணிப்பில் குறைவு என்பது புரிகிறது. சரி... இங்குள்ள பலரும் நிதி வழங்குவதில் ஆர்வம் கொண்டிருக்கிறார்கள். எல்லோரையும் ஒன்று சேர்த்து ஒரு பெரிய திட்டத்தில் ஈடுபடுவீர்களா அல்லது பற்பல சிறிய திட்டங்களில் ஒவ்வொருவரையும் ஈடுபடுத்துவீர்களா?

வியாழேந்திரன்: *இது நிதி வழங்குபவர்களைப் பொறுத்தது. அவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு திட்டத்தில் ஈடுபடுவார்களேயானால் நீண்ட காலப் பயன்தரும் பெரிய திட்டங்களை உருவாக்குவது சுலபமாக இருக்கும். ஆனால் இன்றைய நிலையில் அவ்வாறான சாத்தியக்கூறுகள் குறைவே. மக்களின் உடனடித் தேவைகள் அவசரமாக செய்து முடிக்கப்பட வேண்டியுள்ளது. அவற்றில் பலவும் குறைந்த நிதியுடன் செய்து முடிக்கக் கூடியதாகவும் இருக்கின்றன. ஆதலால் 'பலர் சேர்ந்த பெரிய முதலீடு', 'உடனடித் தேவைக்கான சிறிய முதலீடு' என இரு வகை முதலீடுகளையும் நாம் வரவேற்கிறோம்.*

தீபம்: அப்படியென்றால் நீங்கள் இப்போது முன்னெடுக்கும் “கனடா மட்டக்களப்பு உறவுப் பண்ணை” போன்ற திட்டங்கள் சிறிய திட்டமா அல்லது பெரிய திட்டமா?

வியாழேந்திரன்: (சிரிக்கிறார்) இத்திட்டத்தைபெரியதுஎன்றும்சொல்லமாட்டேன். அதற்காக இது சிறிய திட்டமும் அல்ல.. “கனடா மட்டக்களப்பு உறவுப் பண்ணை” ஒரு நடுத்தர அளவிலான திட்டம். 50 மாடுகளைக் கொண்டதொரு பண்ணையைத்தான் தற்போது நாம் அமைக்கிறோம். நாளடைவில் இந்தத் திட்டம் 500 மாடுகளைக் கொண்ட திட்டமாக வளரலாம். வளரும். இவையெல்லாமே நாங்கள் ஒரு திட்டத்தை எப்படி உருவாக்கி வெற்றிகரமாக வளர்த்தெடுக்கிறோம் என்பதைப் பொறுத்திருக்கிறது. “கனடா மட்டக்களப்பு உறவுப் பண்ணை” திட்டம் ஒரு முன்மாதிரித் திட்டம். புலம் பெயர்ந்தோர் உதவியுடன் இலங்கையில் ஆரம்பிக்கப்படும் முதலாவது தொழில்சார் திட்டமாகவும் இதைக் கருதலாம். அந்தவகையில் இதன் முக்கியத்துவம் பெரியது.

தீபம்: தொழில்சார் திட்டம் என்பதால் திட்டத்திற்கான நிதித் திட்டமிடல்கள் உங்களால் செய்யப்பட்டிருக்கும். பிரதான

முதலீடு எந்த வகையான சொத்துக்களைக் கொண்டிருக்கும்?

வியாழேந்திரன்: ஆரம்பத்தில் 50 நல்லின மாடுகளைக் கொண்டிருப்பதற்கான தேவைகள் அனைத்தும் பிரதான முதலீடாக அமையும். அப்பண்ணையை அமைக்க நாம் கொள்வனவு செய்யவிருக்கும் நிலமும் கட்டிடமும் அசையாச் சொத்துக்களாக இருக்கும் வகையில் ஆரம்ப முதலீடு செய்யப் படும். அதன்பின்தான் நல்லின மாடுகளுக்கான முதலீடு வருகிறது. அதேசமயம் மாடுகளைப் பராமரிக்கும் செலவும், பண்ணையை நிர்வகிக்கும் ஆளணிச் செலவுகளையும் திட்டமிடு கிறோம். குறைந்த பட்சம் ஒரு ஆண்டுக்கான மொத்தச்செலவுகள் முற்கூட்டியேஇப்பொது கணக்கிடப்பட்டுள்ளன. ஆரம்ப நிலையில் அவற்றிற்கும் கணிசமான முதலீடு செல்லும்.

கிழக்கில் நிலங்கள் பறிபோய்க்கொண்டி ருக்கின்றன. இதற்கு மற்ற இனங்களை குற்றம் சாட்டுவதைவிட நாம் விடும் தவறுகளை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எமது நிலங்களைப் பாதுகாப்பதிலிருந்து நாம் தவறுகிறோம்

காலப்போக்கில் பண்ணை வளர வளர, பால் விற்பனை மூலம் வரும் பணம் மொத்தச் செலவுகளை மேவி, இலாபத்தைத் தரும் வகையில் அமையச் செய்வோம். அதன்பின் பண்ணையிலிருந்து வரும் வருமானம் வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கான முதலீடாக பின்னர் அமையும்.

தீபம்: நிலம் ஒரு அசையாச் சொத்து என்று என்றிருக்கிறீர்கள்... இந்த நிலத்தைக் கொள்வனவு செய்யும் இடமாக படுவான்கரையை தேர்ந்தெடுத்திருக் கிறீர்கள். அதற்கான சிறப்புக் காரணம் என்ன?

வியாழேந்திரன்: படுவான்கரை ஒரு பாதிக்கப்பட்ட பிரதேசம். அதுமட்டுமல்ல அப்பிரதேசம் தன் சக்திக்கும் மீறிய வகையில் விடுதலைப் போருக்குப் பங்காற்றியுள்ளது. படுவான்கரையிலுள்ள ஒவ்வொரு வீட்டிலும் ஆகக்குறைந்தது ஒரு மாவீரராவது இருப்பார் என்று சொல்லத்தக்க வகையில் அப்பகுதி விடுதலைக்காக தன் பங்களிப்பை செய்திருக்கிறது. தற்போதைய நிலையில் அங்கங்களை இழந்தவர்கள், கணவரை இழந்தவர்கள் என போரால் பாதிக்கப்பட்ட மக்கள் பலரும் அங்குதான் மிக அதிகமாக இருக்கிறார்கள். இவர்களின் வாழ்வாதாரங்களுக்கு உதவி செய்ய வேண்டியது நம் கடமை. அதைவிடவும் படுவான்கரையில் உள்ள நிலங்கள் தமிழரல்லாதவர்களால் வாங்கப்பட்டு பிற குடியேற்றங்கள் அமையும் ஆபத்தும் அங்கு அதிகமாக உள்ளது. படுவான்கரை ஒரு எல்லைப்பிரதேசமாக இருப்பதையும் நாம் கவனிக்க வேண்டும். எனவேதான் இத்தகைய நிலங்களில் அதாவது கிராம மட்டத்தில் அந்தப் பிரதேச மக்களுக்குத் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்து அவர்களை அங்கு வாழ வைப்பதன் மூலம் எமது நிலங்களைப் பாதுகாக்கவும் நாம் முயல்கிறோம். உன்னிப் பாகக் கவனித்துப்பாருங்கள். "கனடா மட்டக்களப்பு உறவுப் பண்ணை" மூலம் நாம் இரண்டு விடயங்களைச் சாதிக்கிறோம். வாழ்வாதாரத்தை உயர்த்துவதும், எல்லைப்புறங்களைப் பாதுகாப்பதும் ஒரே நேரத்தில் ஒரு திட்டத்திலேயே நடக்கிறது.

தீபம்: அதாவது புனர் நிர்மாணம் என்பது 'வாழ்வாதாரத்தை உயர்த்துவது' மட்டும் அல்ல... அது எமது நிலங்களைத் தொடர்ந்துஎம்வசம்வைத்திருப்பதுமாகும் என்கிறீர்கள்.

வியாழேந்திரன்: ஆம். நிச்சயமாக. கிழக்கில் நிலங்கள் பறிபோய்க்கொண்டி ருக்கின்றன. இதற்கு மற்ற இனங்களை குற்றம் சாட்டுவதைவிட நாம் விடும் தவறுகளை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எமது நிலங்களைப் பாதுகாப்பதிலிருந்து நாம் தவறுகிறோம் என்பதை முதலில் நாம் மனதில் கொள்ள வேண்டும். அதற்கு, எல்லைகளைப் பாதுகாக்கும் வகையிலமைந்த தொலைநோக்குப் பார்வை கொண்ட திட்டங்களை ஆரம்பிப்போம். கனடிய தமிழர் பேரவை போன்ற பலங்கொண்ட புலம்பெயர் அமைப்புக்கள் இப்படியான தொலைநோக்குக் கொண்ட செயல் திட்டங்களை முன்னெடுப்பது நாட்டில் வாழ்ந்து வரும் எமக்கும் பலத்தை தருகிறது என்பதையும் இங்கு நான் சிறப்புறக் குறிப்பிடுகிறேன். இன்னும் சொல்லப்போனால் அத்திட்டங்கள் எமது மக்களின் அன்றாட வாழ்வோடு ஒட்டிய திட்டங்களாக இருப்பதையும் நீங்கள் கவனிக்கலாம். **(தொடரும்.)**

ROYAL CACHET MONTESSORI SCHOOLS

Quality Education for Success

3 Months to 12 Years

Infants 3 - 18 Months

Toddlers 18 - 30 Months

Pre-Schoolers 30 Mos - 6 Yrs

Elementary 6 - 12 Yrs (Gr. 1 - 6)

"குழந்தைகளை மனப்பாடம் செய்ய வற்புறுத்துவதல்ல எங்கள் நோக்கம். மாறாக அவர்களது கற்பனைத் திறனை உணர்ந்து அவர்களது உள்மனதை ஊக்கப்படுத்துவதே ஆகும்."

- கலாநிதி. மரியா மொன்ரசொறி



9921 Woodbine Ave. Markham, ON L6C 1H7
Telephone: **(905) 888-7700**
Fax: (905) 888-6200

160 Mostar St. Stouffville, ON L4A 0Y2
Telephone: **(905) 640-8088**
Fax: (905) 888-6200

» CCMA இனால் அங்கீகரிக்கப்பட்ட Montessori பாடங்கள்
» பட்டப்படிப்புடன் அனுபவமும் மிக்க ஆசிரியர்கள்
» தூய்மையான நவீன Camera பொருத்தப்பட்ட வகுப்பறைகள்
» பாதுகாப்பான மற்றும் சிறப்பான சூழல்
» பெரிய பாதுகாப்பான விளையாட்டு மைதானம்
» குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கேற்ற கற்கை

Tel: 905-640-8088
E-mail: info@rcmschool.ca
web: **www.rcmschool.ca**

ரூஜ்ரிவர் இடைத் தேர்தல் முடிந்துவிட்டது. அது குறித்து நினைத்துப் பார்க்கும்போது பலரது கருத்துக்களையும் கேட்டு அரசியல் சார்புடன் இந்தப் பத்தியில் மிக அதிகமாக எழுதவேண்டும்போல இருந்தது. அதன் முதல்கட்டமாக கனடியத் தமிழர் பேரவையின் பேச்சாளரான டேவிட் பூபாலபிள்ளை அவர்களுடன் பேசினேன். அவருடனான சுவையான உரையாடலே அப்படியே தருவதே பொருத்தமானது என்பதால் இந்தத் தொடர் இம்முறை பேட்டியாய்!. கனடா மூர்த்தி

நான்: ரூஜ் ரிவர் தொகுதி இடைத் தேர்தல் முடிந்துவிட்டது. ரேமன் சோ வெற்றி பெற்றிருக்கிறார். அவரது வெற்றியைத் தொடர்ந்து பலவிதமான குற்றச் சாட்டுக்கள் கனடிய தமிழர் பேரவையை நோக்கி வீசப்படுகின்றன. நீங்கள் கனடிய தமிழர் பேரவையின் உத்தியோக பூர்வ பேச்சாளர். எனவே உங்களிடம் முதலாவது கேள்வி. கனடியத்தமிழர் பேரவை பிரகல் திருவை வெளிப்படையாக ஆதரித்தது நடுநிலைக்கு முரணானது அல்லவா... ஏன் ஆதரித்தீர்கள்?

டேவிட்: *முதலாவதாக ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். கனடியத் தமிழர் பேரவை உத்தியோக பூர்வமாக எந்த கட்சியையும் ஆதரித்ததில்லை ஆதரிக்கப் போவதும் இல்லை. இதில் கனடியத் தமிழர் பேரவையின் தலைமை நிர்வாகக் குழு மிகத் தெளிவாக இருக்கிறது.*

நான்: அப்படி இல்லையே.. நீங்கள் ஹரி ஆனந்தசங்கரியை ஆதரித்தீர்கள்.. இப்போது முழுக்க முழுக்க பிரகல் திருவின் பின்னால் உங்கள் ஆதரவு இருந்தது. இவைபற்றி என்ன சொல்கிறீர்கள்?

டேவிட்: *நீங்கள் சொல்வது முற்றிலும் தவறு. நான் முதலில் சொன்னதுபோல கனடியத் தமிழர் பேரவை எந்த தேர்தலிலும் உத்தியோகபூர்வமாக எந்த வேட்பாளரையும் ஆதரித்ததில்லை. ஆதரிக்கப்போவதும் இல்லை. ஆனால் கனடியத் தமிழர் பேரவையின் பெரும்பாலான உறுப்பினர்கள், பலரது வெற்றிக்காகவும் கடுமையாக உழைத்திருக்கிறார்கள். அது ஹரிக்கும் நடந்தது.. பிரகலுக்கும் நடந்தது. இது அதற்கு முன்பும் நடந்த ஒன்றுதான்.. உதாரணத்திற்கு முந்தைய காலங்களில் நீதன் சானின் தேர்தல் பிரச்சார வேலைகளில் கனடியத் தமிழர் பேரவையின் பெரும்பாலான உறுப்பினர்கள் முழுமூச்சாக மிகக் கடுமையாக உழைத்திருக்கிறார்கள். அதைப்போலவே ராதிகாவின்*

முதலாவது தேர்தல் வெற்றியின் பின்னாலும் கனடியத் தமிழர் பேரவையின் உறுப்பினர்களின் பங்கு கணிசமாக இருந்தது. இன்னும் சொல்லப்போனால் ராதிகாவை அரசியலுக்கு அழைத்து வந்ததே கனடியத் தமிழர் பேரவையின் முக்கிய உறுப்பினர்கள்தான். இதைப்போலவே கொன்சவேடிவ் கட்சியின் கென் கிருபா போட்டியிட்டபோதும் கனடியத் தமிழர் பேரவையின் உறுப்பினர்கள் அவருக்காக உழைத்திருக்கிறார்கள்.

நான்: அப்படியில்லையே.. கொன்ஸ வேடிவ் கட்சியின் கென் கிருபாவிற்கு உங்கள் ஆதரவை வழங்காமல் லிபரல் கட்சிக்கே அந்தத் தேர்தலில் நீங்கள் ஆதரவு தந்தாக ஒரு பத்திரிகை எழுதியிருக்கிறதே..

டேவிட்: *முற்றிலும் தவறான செய்தி அது. நீங்கள் வேண்டுமானால் கென் கிருபாவிடம் நேரடியாகக் கேட்டுத் தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள். கனடியத் தமிழர் பேரவையின் உறுப்பினர்கள் கென் கிருபாவிற்காகவும் வேலை செய்தார்கள்...*

நான்: இல்லையே.. கனடியத் தமிழர் பேரவையின் உறுப்பினர்களில் சிலர் அந்தத் தேர்தலில் கென் கிருபாவிற்கு போட்டியாளராக இருந்த லிபரல் வேட்பாளருக்கு உதவியிருக்கிறார்கள்....

டேவிட்: *உண்மை. லிபரல் கட்சியின் உறுப்பினர்கள் அந்த தேர்தலில்போது லிபரல் கட்சி வேட்பாளரை ஆதரித்தார்கள். இதிலென்ன தவறு இருக்கிறது? மீண்டும் அழுத்திச் சொல்கிறேன்: உத்தியோக பூர்வமாக கனடியத் தமிழர் பேரவை எந்தக் கட்சியையும் ஆதரித்ததாக வரலாறு இல்லை. அதே நேரம் உறுப்பினர்கள் தாம் விரும்பும் கட்சிகளை ஆதரித்து வருவதை நாம் ஊக்குவித்தும் வருகிறோம். தகுதியான வேட்பாளர்களுக்காக இயங்குவது தான் வழக்கம்.*

நான்: அப்படியா? சரி... கொன்சவேடிவ் ஒருபுறம் இருக்கட்டும்... என்.டி.பி.க்கு வருவோம்.. ஒரு காலத்தில் கனடியத் தமிழர் பேரவையால் அரசியலில் வளர்க்கப் பட்டவர் நீதன் சான். இன்று நீதனின் அரசியல் பதவிக்கான இடைவிடாத போட்டிகள் அவருடைய வளர்ச்சிக்கு மட்டுமல்ல, ஒட்டு மொத்த தமிழ் நிலைப்பட்ட அரசியல் வளர்ச்சிக்கும் இடையூறாக இருக்கின்றது பல தமிழர் களுக்கு வர வேண்டிய வாய்ப்புக்களை தடுத்து வரும் ஒரு அரசியல்வாதியாக அவர் மாறி வருகிறார் என்று பலரும் இப்போது குறை கூற ஆரம்பித்துவிட்டார்கள். இதை ஒத்துக் கொள்கிறீர்களா?

டேவிட்: *உங்களுடன் நான் உடன் படுகிறேன். தமிழரின் அரசியல் பலத்தைப் பெருக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. அதற்கு நீதனின் போக்கு இடையூறாக இருக்குமென்றால் நீதன் சான்தான் இதனைக் கவனத்தில் எடுக்க வேண்டும். கனடியத் தமிழர் பேரவை இதற்கு என்னதான் செய்ய முடியும் என்று உங்களை நான் திருப்பிக் கேட்கிறேன்...*

நான்: நான் என்னத்தய்ய்ச் சொல்ல... நான்கு மாதங்களுக்கு முன் தன்னை கல்விச் சபைக்குத் தெரிவு செய்த வாக்காளர்களை அவமதிப்பதுபோல தன் பதவிக்காலம் முடியுமுன், பதவியில் இருந்து கொண்டே இன்னொரு பதவிக்கும் போட்டியிட்டவர் என்ற நிலைமைக்கு அவர் வருந்திருக்கிறார். இது தமிழ் மக்களால் மட்டுமல்ல ஏனைய சமூகத்தினராலும் அதிருப்தியுடன்தான் கவனிக்கப்படுகிறது. ரொறன்ரோ ஸ்ரார் பத்திரிகைகூட இதுகுறித்து கடுமையாக எழுதியிருக்கிறது. நீதனின் முந்தைய தேர்தலுக்கான செலவு 250,000 என்கிறது அது. இது மக்களின் வரிப்பணமல்லவா. ஒரு பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் தன் பதவிக்காலம் முடிவடைய முன் அடுத்த பதவிக்காகவும் அவரது தொடர்ச்சியான தேடல்கள் ஒரு முடிவுக்கு வரவேண்டும். ஒரு பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர் மற்றவர்க்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். வரிப்பணத்தை வீணாக்கக் கூடாது. இது பற்றி உங்கள் கருத்தென்ன?

டேவிட்: *உங்கள் கேள்வியிலேயே பதிலும் இருக்கிறது. மேலும், ஒரு பெரும் கட்சியின் மாநில அளவில் பொறுப்புள்ள தலைவராக இருந்த நீதனுக்கு தன் கட்சியின் சார்பில் இன்னொரு தமிழ் முகத்தை அரசியலுக்குள் கொண்டுவந்து அதன்மூலம் இங்கு தமிழ் அரசியல் செயல்பாட்டாளர்களின் எண்ணிக்கைப் பலத்தை அதிகரிக்க வைக்கும் வாய்ப்பு இருந்தது. அதை அவர் செய்ததாகத் தெரியவில்லை என்றுதான் இதற்குப் பதில் சொல்ல முடியும்.*

நினைத்துப் பார்க்கிறேன்-

கனடியத் தமிழர் பேரவை ரூஜ்ரிவர் இடைத்தேர்தலின்போது பக்க சார்புடன் இயங்கியதா?

சொல்லப்போனால் சென்ற வாரம் நடந்து முடிந்த ரூஜ்ரிவர் தேர்தலிலே கொன்சவேடிவ் கட்சி தமிழ் ஆதரவாளர்களாக தம்மை வெளிக்காட்டி இயங்கிய சிலர் கனடியத் தமிழர் பேரவையின் உறுப்பினர்கள்தான் என்பதையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நான்: அப்படியா... இது எனக்குப் புதிய செய்தி...

டேவிட்: *ஆம். 'கன்சவேடிவ் கட்சிக்கான தமிழர்கள்' என்ற அமைப்பிலுள்ள பலரும் கூட கனடியத் தமிழர் பேரவையின் உறுப்பினர்கள்தான்... கன்சவேடிவ் கட்சிக்காக ஆதரவு தருமாறு பகிரங்கமாக பத்திரிகை அறிக்கை தந்த இருவரில் ஒருவரும் கனடியத் தமிழர் பேரவை உறுப்பினர்தான்.... கனடியத் தமிழர் பேரவையில் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களும் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அதனால் தேர்தல் காலங்களிலே கனடியத் தமிழர் பேரவை உறுப்பினர்கள்*

சமூகத்தின் எதிர்கால நலன்களை கவனத்தில் எடுத்து, கடுமையான உழைப்பைக் கொடுத்து, தாம் நம்பும்

– கனடா மூர்த்தி

நான்: இவை ஒருபுறமிருக்க, கனடியத் தமிழர் பேரவை பக்கசார்புடன் இயங்கியதாக முகப்பத்தகங்களில் ஒருசிலர் கனடியத் தமிழர் பேரவை மீது குற்றம்சாட்டி தாக்குதல்களைச் செய்கிறார்களே..?

டேவிட்: *அப்படியா..?? அந்த ஓரிருவர்களுக்காக கனடாவில் ஒரு பொறுப்புள்ள அமைப்பாக இருக்கும் கனடியத் தமிழர் பேரவை அதிகம் அலட்டிக் கொள்ளப் போவதில்லை. ஒட்டுமொத்த தமிழ் மக்களின் நல்வாழ்வு, கனடியத் தமிழர்களின் அரசியல் பலம் என்பன மேம்படத்தான் கனடியத் தமிழர் பேரவை உறுதியுடன் பாடுபட்டு வருகிறது. அதை அனைத்து மக்களும்சரி, அரசியல் தலைவர்களும்சரி நன்கு தெரிந்தே வைத்திருக்கிறார்கள். அதேசமயத்தில் நீங்கள் சொல்லும் அந்த ஓரிருவர் தம் அறிவுக்கெட்டியதை தங்கள் சொந்த விருப்பு வெறுப்புக்காக முகப்புத்தகத்தில் எழுதக்கூடும். ஆனால் எல்லைகள் மீறப்படும் போது விளைவுகளையும் அவ்வாறு கனடியத் தமிழர் பேரவைமீது சேறுபூசுபவர்கள் சந்திக்க நேரிடக் கூடும்.*

(இத்துடன் என் பேட்டியை முடித்துக்கொண்டேன். அடுத்ததாக யாரைப் பேட்டி காணலாம்?)

பெண்களை கிண்டலடித்ததால்

நடந்த கொலை?

மதகுகளிலும் வீதி ஓரங்களிலும் பொழுதை கழிக்கும் இளைஞர்கள் வீதியால் போகும் பெண்களை கிண்டலடிப்பதால் ஏராளம் பிரச்சனைகள் உருவாகின்றன. அடிதடி, குடும்பச்சண்டை, ஊர்ச்சண்டை என ஏராளம் பிரச்சனைகள் ஏற்படுவது வழக்கம். ஆனால் ஒரு கொலையே விழுந்துள்ளது. ஆம். யாழ்ப்பாணத்தில் மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சங்குவேலியில் அது நிகழ்ந்தது.

17.08.2016 அன்று ஒன்றரை வயது பிள்ளையின் தந்தையும் பஸ் உரிமையாளருமான சிவகுமார் பிரணவன் (வயது 30) என்பவரே வெட்டிக்கொல்லப்பட்டார்.

இந்த கொலையின் பின்னணி என்ன? யார் இதனை செய்தார்கள்? கொலைக்கான காரணங்களை அடையாளமிட்ட பொலிசார் கொலையாளிகளென சிலரை வட்டமிட்டுள்ளனர். அவர்களை தேடப்படுபவர்களாக பொலிசார் அறிவித்துள்ளனர். இந்த கொலை தொடர்பாக துப்புதுலக்கிவரும் பொலிசாரிடம் பேசியதில் பல திடுக்கிடும் தகவல்கள் கிடைத்தன. அவை தொடர்பாக வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.

மூன்று வருடங்களிற்கு முன்னர் கந்தரோடையில் அமைந்துள்ள ஒரு ஐஸ்கிறீம் கடையில் கொலையுண்ட பிரணவனின் தம்பி ராம் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) வேலைசெய்துள்ளார். அந்தப்பகுதியில் பல இளைஞர் குழுக்கள் இருந்துள்ளன. கடை உரிமையாளரின் மகளை வீதியில் வைத்து குழுவொன்று கிண்டலடித்துள்ளது. இந்த தகவல் தந்தையான கடை உரிமையாளரின் காதிற்கு சென்றுள்ளது. ஒரு விபத்தாக, கிண்டலடித்தவரின் விபரம் பிழையாக அவருக்கு சென்றுவிட்டது. ராம்தான் அந்த செயலை செய்ததென அவருக்கு தகவல் கொடுக்கப்பட்டது.

ராமை அழைத்து கண்டபடி திட்டியுள்ளார். எனினும் ராம் குற்றச்சாட்டை மறுத்துள்ளார். முதலாளியின் மகளை அழைத்து, தான் இதில் சம்மந்தப்படவில்லையென்பதை முதலாளிக்கு புரிய வைத்தார். அந்த சம்பவத்துடன் முதலாளியுடன் முரண்பட்டு ராம் கடையை விட்டு வெளியேறினார்.

இது நடந்து இரண்டு வாரத்தில் கடை உரிமையாளரின் வீட்டுக்குள் கும்பலொன்று புகுந்து வாள்வெட்டு தாக்குதல் நடத்தியது. பின்னர் ராமை பொலிசார் கைது செய்து விசாரணை நடத்தினார்கள். பொலிஸ் விசாரணையின் பின்னர் விடுதலையானார். இந்த வழக்கு நீதிமன்றத்தில் நடந்து வந்தது. கடந்த யூன் மாதம்தான் நீதிமன்ற தீர்ப்பு வெளியானது. ராம்தான் அந்த வாள்வெட்டை செய்தார் என்பது நீதிமன்றத்தில் தெளிவாக நிரூபிக்கப்பட்டதையடுத்து, அவருக்கு ஒன்றரை வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

இதன் பின்னர் எல்லாப்பிரச்சனையும் முடிவடைந்துவிட்டது என இரு வீட்டாரும் நினைக்கும்போது மீண்டும் பிரச்சனை கபிலனின் இரண்டாவது அண்ணனான சிவா (பெயர் மாற்றப்பட்டுள்ளது) பக்கம் மாறியது. இரண்டு மூன்று தடவை இவரின் வீட்டிற்குள் இனந்தெரியாத குழு புகுந்து தாக்குதல் நடத்தியுள்ளது. ஒருமுறை சிவாவையும் உறங்கி கொண்டிருந்த இவரின் மாமாவையும் வெட்டிவிட்டு வீட்டையும் சேதமாக்கி விட்டு தப்பிச்சென்றுள்ளனர். இது தொடர்பாக மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்தாலும் குற்றவாளிகள் தலைமறைவாகியமையால் பொலிஸாரால் கைது செய்ய முடியாமல் போய்யிருந்தது.

சிவாவுடனான இப்பிரச்சனை 17.8.2016 அன்று இரவு இறுதியில் உச்சக்கட்டத்தை எட்டியது. அன்று சிவாவுக்கு ஒரு அனேமதேய அழைப்பு வந்துள்ளது. 'நீ எங்கே நிற்கின்றாய்' என்று தொலைபேசியில் ஒருவர் கேட்டுள்ளார். வீட்டில் நிற்பதாக சிவா கூறினாலும், அவருக்கு ஏதோ விபரீதம் நடக்கவுள்ளது புரிந்துள்ளது. உடனடியாக அண்ணன் பிரணவனிற்கு அழைப்பை ஏற்படுத்தி விடயத்தை சொன்னார். வீட்டிலிருக்கடயமாக உள்ளதாக சிவா கூறியதையடுத்து, பிரணவன் தனது வீட்டுக்கு அழைத்து சென்றுள்ளார்.

ஆனால் எதிராளிகள் விடுவதாக இல்லை. பிரணவனின் வீட்டிற்கே வந்துவிட்டனர். இரண்டு மோட்டார்சைக்கிளில் வாள்களுடன் வந்த ஆறுபேர் சிவாவை கூப்பிட்டுள்ளனர். ஆனால் சிவா வெளியில் வரவில்லை. அதனையடுத்து, வீட்டு ஜன்னல், கதவுகளை உடைத்துக்கொண்டு உள்ளே நுழைய முற்பட்டனர். சிவா மற்றும் பிரணவன் கற்களை கொண்டு எதிர்தாக்குதல் நடத்தியுள்ளனர். வாள்வெட்டு குழு அவர்கள் மீது அசிற் வீச்சை நடத்தியுள்ளது. இதனையடுத்து சிவாவும், பிரணவனும் வீட்டைவிட்டு ஓடத் தொடங்கினார்கள். வாளவெட்டு குழுவும் பின்தொடர்ந்துள்ளது. மதில் பாய்ந்து பக்கத்துவீட்டு ஜயரின் வீட்டுக்குள்ளால் ஓடும்போது, அங்கு நின்ற ஈரப்பிலா மரமொன்றுடன் இடறுப்பட்டு பிரணவன் நிலத்தில் விழுந்துள்ளார்.

அவர்களை துரத்தி வந்த குழு அவரை பிடித்துக் கொண்டது. தமது வாள்களால் அவர் மீது கொலை வெறித்தாக்குதல் நடத்தியது. தலை, கைகளில் சரமாரியான வெட்டுவிழுந்தது. கடுமையாக வெட்டிவிட்டு, வாள் வெட்டு கும்பல் தலைமறைவாகிவிட்டது.

படுகாயமடைந்து உயிருக்கு போராடிக் கொண்டிருந்த பிரணவனை அங்கிருந்தவர்கள் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். யாழ் போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு, தீவிர கண்காணிப்பில் இருந்தாவும் அதிகாலை 1.45 அளவில் மரணமானார்.

இக்கொலையில் ஈடுபட்டவர்கள் யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலமாக பல்வேறு சமூகவிரோத, வாள்வெட்டு சம்பவங்களில்; ஈடுபட்டவர்கள் என்கிறது பொலிஸ் தரப்பு. சுன்னாகம், யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸ் நிலையங்களில் இவர்கள் மீது பல குற்றச்சாட்டுக்கள் இருப்பதால், பொலிசார் இவர்களை வலைவீசி தேடிவருவதாக கூறுகிறார்கள். சில மாதங்களுக்கு முன்னர் இணுவில் பகுதியில் வைத்து வாள்வெட்டு ஒன்றுக்கு தயாராகிக் கொண்டிருந்தவேர்களை, சுன்னாகம் பொலிசார் வளைத்துப்பிடிக்க முயன்றபோதும், டிமிக்கி கொடுத்துவிட்டு தப்பிவிட்டதாக பொலிஸ் தரப்பு கூறுகிறது.

துற்போது இவர்கள் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறி தலைமறைவாகியுள்ளதாகவும், இவர்கள் பற்றிய தகவல் தருமாறும் அண்மையில் அறிவிக்கப் பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. விடுதலைப் புலி சந்தேகநபர்களை கண்ணுக்குள் எண்ணெய் விட்டுக்கொண்டு வலைவீசிப் பிடிக்கும் பாதுகாப்பு தரப்பிற்கு மூன்று ரௌடிகள் டிமிக்கி காட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பது நெருடலான விவகாரம்தான்.

தலைமறைவாக இருக்கும் ரௌடிகள், திடீர் திடீரென வந்து வாள்வெட்டு நிகழ்திவிட்டு போவதாக கூறப்படுவதும் ஆச்சரியமானதுதான். யாழ்ப்பாண குடாவை உறைய வைக்கும் வாள்வெட்டுக்களை நிறுத்துவது பொலிசாரின் கைகளில்தான் உள்ளது.



சிறந்த விலையில் தரமான முறையில் உங்கள் ஓட்டுனர் பயிற்சிகளைப் பெற்று கொள்ள இன்றே அழையுங்கள்!!!

Summer Special $299

Beginner Driver Education (BDE)
Full Driving Program for New Students
- 10 Hr In-Car Instruction
- 20 Hr In-Class Instruction
- 10 Hr of Home Links (In-Class/Home Assignments)
- Assistance in getting an Insurance Discount

MTO-APPROVED BDE COURSE PROVIDER

- மாகான அரசின் அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சியாளர்கள்
- தமிழ் மக்களின் நன்மதிப்பினையும் நம்பிக்கையையும் பெற்ற பல வருட அனுபவம் கொண்ட முழுநேர சாரதிப் பயிற்றுனர்கள்
- வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சி வழங்கப்படும்

www.aplusdriving.ca

Tel: 416.666.6060

Markham:
9889 Markahm Rd. Unit 207
Markham,ON L6E 0B7
(Markham Rd/ Major Mackenzie)

Scarborough:
880 Ellesmere Road Unit N200
Scarborough, ON M1P 2W6
(Kennedy/Ellesmere)

இஸ்மாயில்

மகள் தந்தைக்காற்றிய கடன்

தந்தை மகளிற்காற்றும் கடன் என்ற சொற்பதமொன்றுண்டு. கண்விழிக்காத குழந்தையாக பெற்றெடுக்கும் மகள்களை வளர்த்து ஆளாக்கி, செல்வம் தேடி வைத்து, நல்வாழ்க்கை வாழ வைப்பதில் அப்பாக்களின் பங்கு முக்கியமானது. பெண்பிள்ளைகள் அப்பா நெருக்கத்திற்கு பலகாரணங்கள் இருந்தாலும், இதுவும் முக்கிய காரணம்.

பாரதலக்ஷ்மன் பிரேமச்சந்திர கொலை வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டதை தொடர்ந்து அவரது மகளான ஹிருணிகா மீண்டுமொருமுறை ஊடகங்களில் பரவலாக பேசப்படுகிறார். நீதி எப்பொழுதும் லேற்றாகத் தான் வரும். ஆனால் லேட்டஸ்ற்றாக வரும். அதனால்த்தான் அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும் என்கிறார்கள். நீதி தேவதையின் பார்வையிலிருந்து யாரும் தப்பிக்க முடியாது.

தந்தையின் கொலைக்கு நீதிகோரி ஹிருணிகா நடத்தியது நீண்ட போராட்டம். அது சாதாரணமானதல்ல. ஒருகொலை நடந்தால் அதற்கான நீதி விசாரணை நடக்குமென்ற அடிப்படையான கட்டமைப்பு இருக்கிறது. ஆனால் அந்த கட்டமைப்பை செயற்பட விடாமல் அரசியல், அதிகார பலத்துடன் ஆட்கள் முட்டுக்கட்டை போடும் வரலாறுகள் நிறைய உள்ளன. அதனை கடப்பதென்பது சாதாரண விடயம் கிடையாது.

ஒரு குகைக்குள் இரண்டு சிங்கங்கள் இருக்க முடியாது. ஒன்று அகற்றப்பட்டே தீரும். அதுதான் இந்த சிக்கலின் அடிப்படை. கொலன்னாவ தொகுதியில் பாரதலக்ஷ்மன் பிரேமச்சந்திர கோலோச்சிக் கொண்டிருக்க, ராஜபக்ச ரெஜிமென்றின் புதிய தத்துப்பிள்ளையாக துமிந்த அங்கு நுழைந்ததும் பிரச்சனை ஆரம்பித்தது. துமிந்த மீது போதைப்பொருள் கடத்தல், பாதாள உலககுழுக்களை வழிநடத்தியது உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்கள் ஏற்கனவே உள்ளதுதான். வெலே சுதா விவகாரத்திலும் துமிந்தவின் பெயர் அடிபட்டது. அவர் குற்றப்பின்னணி உள்ளவர் என்ற பொது அபிப்பிராயம் பரவலாக ஏற்பட்டுவிட்டது.

துமிந்தவின் இந்த நடவடிக்கைகளிற்கு மகிந்த முகாமின் செல்லப்பிள்ளையென்ற பின்னணி பேருதவியாகவும் இருந்தது. துமிந்தவிற்கும் கோத்தபாயவிற்குமிடையிலான நெருக்கம் வெளிப்படையானது. துமிந்த சூட்டுக்காயத்திற்குள்ளாகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது, மேலதிக சிகிச்சைக்காக சிங்கப்பூர் கொண்டு செல்லப்பட்டபோது கடுமையான பாதுகாப்பு வழங்கினார் கோத்தபாய.

பாரதலக்ஷ்மன் கொலன்னாவ தொகுதி அமைப்பாளராக இருந்து பின்னர் மகிந்த ராஜபக்சவின் ஆலோசகராக நியமிக்கப்பட்ட பாரதலக்ஷ்மன், நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த துமிந்த சில்வா ஆகியோரிற் கிடையில் இருந்த நீண்ட பகை தேர்தல் வாக்களிப்பு சமயத்தில் களேபரமாகி கொலையில் முடிந்துள்ளது.

பாரதலக்ஷ்மனின் வாகன தொடரணியை மறித்து, அவரது முகத்தில் அடித்து வீழ்த்தி, தலையின் பின்பகுதியில் துப்பாக்கியால் சுட்டு, அவரை சுடும்படி தனது அடியாட்களிற்கு கட்டளையிட்டார் துமிந்த என்பது நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டு, துமிந்த தூக்குத்தண்டனை கைதியாகியுள்ளார்.

மகிந்த ராஜபக்சவின் ஆட்சி தொடர்ந்திருந்தால் இது நிகழ்ந்திருக்காது. அப்பொழுது வழக்கு விசாரணை துரிதமடையவில்லையென்பதுடன், நீதி கோரி போராட வேண்டாமென்றுதான் ஹிருணிக்காவிற்கு மகிந்த அன்புக்கட்டளை இட்டு வந்தார். அவருக்கு பதவிகள் வழங்கி ஆறுதல் சொல்லி, தனது மகளென அன்பால் கட்டுப்போட முயன்றார்.

ஆனாலும் தனது தந்தையின் கொலைக்கு நீதி கிடைக்கும் வரை ஓயாமல் போராடி வென்றிருக்கிறார் ஹிருணிகா. தந்தை கொல்லப்படும்போது அவருக்கு வயது 24. அப்பொழுது ஆரம்பித்த போராட்டம். ஐந்து வருடங்களின் பின்னர் துமிந்த குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு, தண்டனை விதிக்கப்பட்டுள்ளார்.

தந்தையின் கொலை விவகாரத்தில் மகிந்த ராஜபக்ச அரசு பாராமுகமாக இருக்கிறதென்ற அதிருப்தி, அவரை கட்சி மாறவும் வைத்தது. தந்தையின் கொலைக்கு நீதி வேண்டி அவர் செய்ததுணிச்சலான காரியம் அது. மைத்திரி எடுத்த முடிவிற்கு நிகரானது அது. கரணம் தப்பினால் மரணம். மகிந்த மீண்டும் வெற்றிபெற்றால் நிலைமை மோசமாகும் என்பதை தெரிந்தேதான் ஹிருணிகா அந்த ஆபத்தான முடிவை எடுத்தார். தந்தைக்கு மகள் ஆற்றிய பெருங்கடன் அது.

துமிந்தவிற்கு வழங்கப்பட்ட தண்டனையை ஒரு போட்டிக்களமாக ராஜபக்ஷ ரெஜிமென்ற் எடுத்துள்ளதை போலத்தான் தெரிகிறது. தண்டனை அறிவிக்கப்பட்டதும் கோத்தபாய அவசரமாக துமிந்தவின் குடும்ப உறுப்பினர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டதாக கூறப்படுகிறது. மேல் முறையீட்டிற்கு சென்று வெற்றி பெறுவோம், கவலைப்பட வேண்டியதில்லையென ஆறுதல் சொன்னாராம். கோத்தாவிற்கும் துமிந்தவிற்குமிடையிலான நெருக்கத்திற்கு இது சான்று.

ஆட்சியதிகாரங்களால் குற்றவாளிகள் தப்பிக்க முடியாதென்ற நீதிக்கட்டமைப்புதான் மக்களின் நம்பிக்கை. அது காப்பாற்றப்பட்டுள்ளது. ஹிருணிகாவின் போராட்டமும் சமாந்தரமாக நிகழ்ந்து அதற்கு வலுச் சேர்த்தது. ராஜபக்ச ரெஜிமென்றிற்கு ஹிருணிகா சொன்ன செய்தி வலுவானது. அது

எல்லா மகள்களும், மகன்களும் தந்தைகளிற்கு கடன்களை ஆற்ற தயாரானால், குற்றவாளிகள் தப்பிக் முடியாது!

All We Do Is Discount At
Scarsview Chrysler

WE ALSO
DEAL WITH HIGH END
FULL LUXURY VEHICLES
ONE STOP SHOP

Suresh Muthulingam
Service Manager

Sunil Talwar
Sales Manager

SCARSVIEW CHRYSLER
www.scarsviewchrysler.com

We service all makes and models

951 Milner Ave. Scarborough
416-281-6200

உடுவில் மகளிர் கல்லூரி மாணவர் போராட்டம்:

நிர்வாகத்தின் பொறுப்பற்ற முன்மாதிரி

யாழ்ப்பாணத்தின் பிரபலமான கல்லூரி களில் ஒன்றான உடுவில் மகளிர் கல்லூரியின் அதிபர், முன்னறிவித்தலின்றி கல்லூரி நிர்வாகத்தால் வேலை நீக்கம் செய்யப்பட்ட விவகாரம், அக்கல்லூரி மாணவிகள் மத்தியில் ஏற்படுத்திய அதிருப்தி, கடந்த வாரம் அந்தப் பாடசாலையை ஒரு போராட்டக் கலமாக மாற்றிவிட்டிருந்தது.

கல்லூரி நிர்வாகத்தினர், புதிய அதிபர் ஒருவரை நியமிக்கும் தமது நோக்கத்துக் காகவே, பதவியில் இருந்த அதிபரை உடனடியாகவேலை நீக்கம் செய்யும் முடிவுக்குவந்திருந்தனர் என்பதேமாணவியர் தரப்பு வாதமாகும். பாடசலையின் அதிபர் சிரானி மில்ஸ் அவர்களது பதவிக்காலத்தை மேலும் இரண்டாண்டுக்கு நீடிக்குமாறு மாணவர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டதை அடுத்து கல்லூரி நிர்வாகத்திற்கும் மாணவிகளுக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடு சுமுகமான முறையில் தீர்ப்பதில் நிர்வாகம் அக்கரை காட்டவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. மாணவிகலின் இந்தக் கோரிக்கைக்குப், பழைய மாணவிகள் மற்றும் பெற்றோர்களின் ஆதரவும் இருந்தது. ஆயினும் அவர்களின் இந்தக் கோரிக்கையையும்,புதிய அதிபரை நியமிக்கும் முடிவு மீதான எதிர்ப்பினையும் பொருட்படுத்தாது, தமது முடிவை நிர்வாகம் அமுல்ப்படுத்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டதைத் தொடர்ந்து, கல்லூரி மாணவிகள்கடந்தசனிக்கிழமை(செப்டம்பர், 03)கவனயீர்ப்பு போராட்டத்தில் குதித்தனர்.

கவனயீர்ப்புப் போராட்டம் நிர்வாகத்தின் கவனத்தைப் பெறாததையடுத்து,இப்போராட் டம் பின்னர் உண்ணாவிரதப் போராட் டமாக மாறியது. கடந்தபுதன்கிழமை இப்போராட்டத்தைக் குழப்ப நிர்வாகத்துக்கு ஆதரவான சிலர் முயற்சித்ததை அடுத்து, மாணவிகளின்போராட்டம் வலுவடைந் ததுடன், பெற்றோர்களும் பொது மக்களும் போராட்டத்தில் ஈடுப்பட்ட மாணவி களுடன் இணைந்து நிற்கும் நிலையையும் ஏற்படுத்தியிருந்தது.

நிருவாகத்தினருக்கு நெருக்கமானவர் களும், சில பாதிரியார்களும், சில ஆசிரியர் களும்கொண்ட குழுவினரே மாணவி களின் போராட்டத்திற்கு எதிராக செயற்படுவதாகவும் அவர்களில் சிலர் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவிகளைத் தாக்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மாணவிகளின் போராட்டத்திற்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த சுமந்திரன்எம்பி அவர்களும்செயற்படுவதாக பெற்றோர் குற்றம் சாட்டியிருப்பதுடன், போராட்டத்தின் போது அவருக்கு எதிராகவும் கோஷமெழுப்பியிருந்தனர்.

போராட்டத்தைக் குழப்ப முற்பட்ட வர்கள், மாணவிகளைத் தாக்கியதுடன், ஊடகவியலாளர்களையும் தாக்கியுமுள்ள னர். இந்தத் தாகுதல்களில் சில மாணவிகள் காயமடைந்துமுள்ளனர். உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவி யொருவர் மயக்கமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்படார். மாணவிகள் தாக்கப்பட்ட தைத் தடுக்க முற்பட்ட தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவையின் தலைவரும் தாக்கப்பட்டுள்ளார். எனினும், கல்லூரிக்கு வெளியே நின்ற பொலிஸார் மாணவிகள் தாக்கப்பட்ட போது அதைத் தடுக்க முன்வரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. அதே சமயம்,பொலிஸார் போராட்டத் தில் ஈடுபட்ட மாணவிகளையும் பெற் றோர்களையும் ஊடகவியாலர்களையும் வீடீயோ எடுத்ததாகவும் தெரிவிக்கப்படு கிறது.

இதேவேளை, மாணவிகளின் உண்ணா விரதத்திற்கு மத்தியில், அருகிலுள்ளதிருச் சபையொன்றில் புதிய அதிபர் சம்பிரதாய ரீதியில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டு பாடசாலைக்கு வந்த போது அவரை உல்ளே புவிடாது வாசலில் மானவிகள் தடுத்து நின்றனர், இந்தச் சந்தர்ப்பத்தில், இக் குழுவினர், மறித்து நின்ற மாணவிகளைத் தள்ளிவிட்டு கல்லூரிக்குள் சென்றதுடன், அதிபரின் விடுதியறைக்குள் சென்று பழைய அதிபரைப் பதவியிலிருந்து விலகு மாறுவற்புறுத்தியதாகவும், அதையறிந்த மாணவிகள் அதிபரின் விடுதியைச் சுற்றி சங்கிலிப்போராட்டத்தில் ஈடுப்பட்ட தாகவும் தெரிவிக்கப்படுகிறது. அப்போதும் மாணவிகள் தாக்கப்பட்டுள்ளனர். இதை யடுத்து மாணவிகள் அவலக் குரல் எழுப் பவே, வெளியே நின்றமாணவிகளும் பெற் றோர்களும்உள்ளேசென்றுமாணவிகளுக்குப் பாதுகாப்பு வழங்க முற்பட்டுள்ளனர்.

பதட்ட நிலை தொடர்ந்ததையடுத்து, மேலதிக பொலிஸார் வரவழைக்கப்பட்டு, கல்லூரிபொலிஸாரின் பூரண கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதுடன் கல்லூரியிலிருந்துமாணவிகள்,பெற்றோர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

– விஜே

இந்த விடயம் தொடர்பில் மனித உரிமைகள் அமைப்பிடம் முறையிடப் பட்டதையடுத்து மனித உரிமைகள் அமைப் பின் அதிகாரிகள் கல்லூரிக்கு விஜயம் செய்து சம்பந்தப்பட்ட தரப்புக்களிடம் கலந்துரையாடல்களை மேற்கொண்டனர். அதே சமயம்,மல்லாகம் மாவட்ட நீதிவானும் கல்லூரிக்கு விஜயம் செய்து கலந்துரையாடல்களை மேற்கொண்டி ருந்தார். இதன் பின்னர், பாடசாலையை வழமையான முறையில் இயங்கச் செய்வதென முடிவெடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், மாணவிகளுக்கு எந்த இடையூறும்விளைவிக்கக் கூடாது என வேண்டுகோளும் விடுக்கப்பட்டுள்ளது.

ஆறு நாட்கள் மாணவிகள் நடத்திய போராட்டத்திற்கு எந்தப் பயனும் கிடைக் காத நிலையில் யாழ்ப்பாணம் வந்திருந்த ஜனதிபதியிடமும் மானவிகள் முறை யிட்டிருக்கிறார்கள் . கடந்தவியாழக்கிழமை (செப்டம்பர், 08) யாழ்ப்பாணத்திற்கு அவர் விஜயம் செய்திருந்த போதே இந்தச் சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ஜனாதிபதியைச் சந்தித்தமாணவிகள், அவரது காலில் விழுந்து அழுதுபுலம்பி, தமது கல்லூரிக்கு பழைய அதிபரை மீளவும் பணியாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், பாதிரியார்களும் கல்லூரி நிர்வாகமும் கடுமையாகத் தாக்கியது தொடர்பாக அவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் கோரியிருக்கிறார்கள். இது தொடர்பிலான மகஜர் ஒன்றையும்ஜனாதிபதிக்கு அவர்கள் கையளித்துமுள்ளனர்.

வழமைக்கு மாறாக கல்லூரியின் அதிபரின் வயதைக் காரணம் காட்டி, கல்லூரி நிர்வாகம்சிறப்பாகப் பணியாற்றி வந்த பழைய அதிபரின் சேவைக்காலத்தை நீடிக்காது, புதிய அதிபர்ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுத்தது பற்றி பலரும் சந்தேகம் தெரிவித்திருக்கிறார்கள்.அமெரிக்க மிஷனரியினரால் உருவாக்கப்பட்ட இக்கல் லூரியின் நிர்வாகத்திற்காக அமெரிக் காவிலிருந்து பெருமளவு பணம் அனுப்பப் பட்டு வரும் நிலையில், இத்தகைய பிரச்சினைகளால் கல்லூரியின் எதிர்காலம் கேள்விக்குறியாகும் என பெற்றோர்கள் மத்தியில் கவலை தெரிவிக்கப்படுகிறது.

ஒரு பாடசாலை மாணவர்களின் போராட்டத்தை, பாடசாலை நிர்வாகம் கையாண்ட விதம், பாடசாலைக்குள், பொலிஸ், அரசியவாதிகள், நீதிமன்றம் என்று அனைத்து அவசியமற்ற தலையீடுகளையும் கொண்டுவந்து நிறுத்தும் நிலையை ஏற்படுத்தியுருப்பது ஒன்றும் இலேசாகக் கடந்து போகக் கூடிய விடயம் அல்ல. இது பாடசாலைகளின் எதிர்கால நிகழ்வு களுக்கு ஒரு தவறான முன்னுதாரணமாக அமையக் கூடாது.

நிர்வாகம் சுமுகமான கல்விச்சேவையை வழங்கும் பாடசாலைக்காகவே அன்றி நிர்வாகத்துக்காகப் பாடசாலை இயங்குவ தில்லை என்பதை அவர்கள் மறந்து செயற்பட்டிருப்பது கண்டிக்கத்தக்கது. தென்னிந்திய திருச்சபை இது தொடர்பாக விரிவான விசாரணையை மேற்கொள்வதும், இவ்வாறான நிலை தொடராதிருக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற் கொள்வதும் உடனடி அவசியமான விடயங்கள்.

உலகளாவிய தமிழரின் பத்திரிகை. the global newspaper of TAMILS.

தொறொன்ரோ உலகத் திரைப்பட விழா-2016

இவ்வாண்டுக்கான தொறொன்ரோ திரைப்பட விழா கடந்த 8ம் திகதியிலிருந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கிட்டதட்ட 80 நாடுகளிலிருந்து வந்துள்ள 200க்கும் மேற்பட்ட திரைப்படங்கள் இந்த திரைப்படவிழாவில் இடம்பெறுகின்றன. அதிகளவிலான திரைப்படங்கள் (76) அமெரிக்காவிலிருந்தும் அதற்கடுத்ததாக அதிகளவான படங்கள் (63) ஃபிரான்சிலிருந்தும் வந்துள்ளன. இந்தத் திரைப்பட விழாவில் கனடாவில் தயாரிக்கப்பட்ட 38 கனடியப் படங்களும், இந்தியாவிலிருந்து வந்த 8 திரைப்படங்களும் இடம்பெறுகின்றன. 40 நிமிடங்கள் நீளமான திரைப்படத்திலிருந்து, 227 நிமிடங்கள் வரை நீளமான திரைப்படங்கள் என்று பல அளவுகளிலானதும் பலமொழிகளிலானதுமான திரைப்படங்கள் இங்கு திரையிடப் படுகின்றன.

ஐந்து ஹிந்திப் படங்களும், மலையாளம், மராத்தி, பெங்காளி ஆகிய மொழிகளில் ஒவ்வொன்றுமாக எட்டுப்படங்களுடன், இன்னொரு 7 நிமிட குறுந்திரைப்படமும் இந்தியாவிலிருந்து வந்திருந்தன. தீபா மேத்தாவின் Anotomy of violance, கொங்கோனா சென்சர்மாவின் Death in the kunj, கொரான் பஸ்கல்ஜெவிக்கின் land of the god , றிச்சி மேத்தாவின் India in a day யுடன், குஷ்பூ ரங்கா இயக்கிய 7 நிமிடத் திரைப்படமான Right to prayயுடன் அவர் வினய் சுக்லாவுடன் இணைந்து இயக்கிய an insignificant man என்பன ஹிந்தி மொழிப் படங்களாகும். The Bait என்ற பெங்காளி திரைப்படத்தை புத்தாதீப் தாஸ்குப்தாவும், மராத்திய திரைப்படமான the cenema of travellers ஐ ஷேர்லி ஏபிரஹாமும், once again என்ற மலையாளப்படத்தை அடூர் கோபால கிரிஷ்ணனும் இயக்கியிருக்கிறார்கள். இவற்றில், அடூரின் once again என்பது அவரது முத்திரையைப் பதித்துள்ள,எட்டுவடுடங்களுக்குப் பிறகு வந்துள்ள ஒரு தவறவிடக்கூடாத படம் எனவும், றிச்சி மேத்தாவின் India in a day, அடுத்த சந்ததியினைச் சேர்ந்த திரைப்பட ரசிகர்களுக்கான படம்என்ற அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட படம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இந்தியாவின் மிக உயர்ந்த தரத்திலான திரைப்படங்களைத் தந்துள்ள புகழ் பெற்ற இயக்குனர்களின் இந்தப் படங்கள் இரண்டாவது அல்லது மூன்றாவது தடவையாக 16 18ம் திகதிவரையான காலப்பகுதிகளில் காட்சிப்படுத்தப்படுகின்றன மேலதிக விபரங்களை TIFF இன் இணையத்தளத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

இந்தவருடத்திற்கான யாழ் சர்வதேச திரைப்பட விழா எதிர்வரும் 23ம் திகதி முதல் 27ம் திகதிவரை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பானத்தில் நடக்கும் இரண்டாவது உலகத் திரைப்பட விழாவான இந்த விழாவில் திரையிடப்படவுள்ள திரைப்படங்கள் அனைத்தும் இலவசமாகவே காண்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை திரையிடப்படுவதாக அறிவிக்கப்பட்டுலள்ள திரைப்படங்களில், Girlhood என்ற ஃபிரஞ்சுப் படம், paper plane என்ர அவுஸ்திரேலித் திரைப்படம் மற்றும் இறுதிநாள் திரையிடப்படவுள்ள வெற்றிமாறனின் 'விசாரணை' என்ற திரைப்படம் என்பவை முக்கியமான படங்கள் எனத் தெரியவருகிறது. விழா ஏற்பாட்டுக் குழுவின் தலைவரும் யாழ் பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளருமான பாக்கியநாதன் அகிலன் அவர்கள் இது தொடர்பான ஊடகவியலாலர் சந்திப்பின்போது ஆற்றிய உரை இங்கு நன்றியுடன் பிரசுரமாகிறது. (ஆர்)



யாழ் உலகத் திரைப்பட விழா 2016

முதலாவது தமிழ் திரைப்படம் கீசகவதம் வெளியிடப்பட்ட 100ஆவது வருடத்திலும், முதலாவது பேசும்படம் காளிதாஸ் வெளி வந்து 75ஆவது வருடத்திலும் நின்றுகொண்டு யாழ்ப்பாணம் எனும் யுத்தத்தால் குதறியெறியப்பட்ட ஒரு சிறிய பிராந்தியமொன்றின் இரண்டாவது சர்வதேசச் சினிமா விழாவினை நிகழ்துவதில் பெரு மகிழ்சியடைகிறோம். தமிழ் சினிமாவின் இந்த நூற்றாண்டுப் பயணத்தில் தென்னிந்திய சினிமாப் பண்பாட்டுப் புலத்தின் வெவ்வேறு களங்களில் வெவ்வேறு சினிமாத் துறைகளில் ஈழத்தமிழர்களின் பங்கும் பணிகளும் கலந்தூறிப்போயுள்ளன. ஒரு தொழிற்சாலையாக தமிழ் சினிமா இந்த நூற்றாண்டுப் பயணத்தின் விளைவாக பெரு வளர்ச்சி கண்டுள்ளதாயினும், அதனூடாக தமிழில் ஒரு பெரிய வெகுஜன சினிமாப் பண்பாட்டைக்; கட்டியெழுப்பியுள்ளோம் என்ற போதிலும், இந்த நூறாண்டுகளில் சினிமாவின் உள்ளார்ந்த வெளிப் பாட்டின் தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்ந்த பெறுமானங்களாலான பல்பரிமாண முடைய வாழ்க்கைக்கு நிகரான இன்னொரு வாழ்வாக நிற்கின்ற, அதனால் வாழ்வின் ஆழமான கேள்விகளாலும், அர்த்தங்களின் பல்லடுக்களாலும் அமையப்பெற்ற சினிமா வெளிப்பாடுகளாலும் அவற்றை ஒட்டிய தொடர்ச்சியான திரையிடல்கள், பார்வையிடல்கள் உரையாடல்கள்,திறனாய்வுகள் என்பவற்றாலான ஆரோக்கியமான வொரு மாற்றுச் சினிமாப் பண்பாட்டையும்; வெகுஜனச் சினிமாப் பண்பாட்டிற்கு நிகராக கட்டியெழுப்ப எங்களால் எவ்வளவு தூரத்திற்கு முடிந்திருக்கின்றது என்ற கேள்வி இந்தத் தருணத்தில் முக்கியமானது.

நம்பிக்கை தரத்தக்க பல முன்னோடிச் செயற்பாடுகள் தமிழ் சினிமா வட்டகையில் உண்டென்றாலும் சினிமாப் பண்பாடு குறித்தான மாற்றுச் செயற்பாடுகளும், மாற்று சினிமாக்களை உள்ளடக்கிய குறிப்பிடத்தக்க மாற்றங்களையும் இன்று பரந்துபடக் காண்கிறோம் என்ற போதிலும் சினிமா மொழியிலும், மொழிதலிலும் மேலும் வலுப் பெற வேண்டிய விடயப் பரப்புகள் எம்முன்னால் விரிந்தே காணப்படுகின்றன.

அதேநேரம் சினிமா என்ற கலை வடிவம் தன்னியல்பிற் கொண்டுள்ள கவர்ச்சி காரணமாகவும், அது ஏனைய வெகுஜன ஊடகங்கள் மீது கொண்டுள்ள வலுவான ஆதிக்கம் காரணமாகவும், இன்று சினிமாவை எடுப்பதற்கான தொழில்நுட்ப சாத்தியங்களின் வளர்ச்சி காரணமாகவும் பெருந்தொகையான இளைஞர்கள் சினிமாவை நோக்கி ஈர்க்கப்படுகிறார்கள். இவ்வகையில் அண்மைச் சில வருடங்களாக இலங்கையில் பெருந் தொகையான இளை ஞர்கள் குறுந்திரைப்படங்களை எடுப்பதில் ஆர்வங்காட்டுதலைக் காண முடிகிறது. பரந்துபட்ட கருப்பொருட்களை அவர்கள் கையாளுகிறார்கள். ஆனால் மேற்படி ஊடகத்தின் மீதான கவர்ச்சியைத் தவிர அவர்களிற் பலரிடம் அதன் மொழி அதன் பரிணாமங்கள் பற்றிய போதிய அறிவும்,அனுபவமும் இல்லை.மேலும் அவர் களிடையே வலுவான ஒரு சினிமா சார்ந்த ஆளுமைகளுடனான் வலைப்பின்னலும் இல்லை.அதனால்பெரும்பாலானஇத்திரைப் படங்கள் வெளிப்பாட்டு ரீதியாகப் பலவீனமானவையாக உள்ளன.

இத்தகைய சூழலை மாற்றியமைப்பதிலும், வெகுஜன சினிமாப் பண்பாடொன்றுக்கு எதிரிடையான மாற்று சினிமாப் புலத்தைக் கட்டியெழுப்புவதிலும் அதே சமயம் வெகுஜனசினிமாவைபுரிந்துகொள்ளுதற்கும் வாசிப்பதற்குமான புதிய பார்வைகளை வழங்குவதிலும் இத்தகைய சினிமா விழாக்கள் பெரும் பங்கை ஆற்ற முடியும். உலகத்தின் தலை சிறந்த சினிமா ஆக்கங்களை ஒருங்கே பார்பதற்கும், அவற்றிடையே பயணஞ் செய்யும் வேறுபாடுகளையும், தனித்துவங்களைக் கண்டுகொள்ளவும், உணர்ச்சிகளின் காண்பியக் கழிப்பை பெறுதலுக்கும், வாழ்வை மேலும், மேலும் புரிந்து கொள்வதற்கும், கலை வெளிப்பாடு தன்னுடைய சொந்தத் தர்க்கங்களான இன்னொரு வாழ்வாக இருத்தலைக் காணவும் இவை வழி திறந்து விடுகின்றன சினிமாப் படைப்பாளிகளின் வகுப்புக்கள், சினிமாப் படைப்பாளிகளுடனாக நேரடிச் சந்திப்புக்கள் என்பன அவர்களது துறைசார் பட்டறிவுகளை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை உருவாக்குகின்றன. அந்தவகை யில் சினிமா விழாக்கள் உள்ளூர் படைப் பாளிகளுக்கான வலுவான தளமொன்றை உருவாக்குமதேசமயம். உலகளாவிய சினிமாக்களின் புதிய போக்குகளுடனும், படைப்பாளிகளின் வலையமைப்புடனும் அவர்களை இணைக்க உதவுகிறது. உள்ளூர் மக்களை சினிமாவை நோக்கி இவ்வகைப் பட்ட விழாக்கள் ஈர்ப்பதுடன் அவர்களது சினிமா அரங்குகள், வர்த்தக முயற்சிகள் மற்றும் உல்லாசப் பிரயாணத்துறை இவற்றின் மீதும் சாதகமான மாற்றங்களை சினிமா விழாக்கள் உருவாக்கும்.

எல்லாவற்றுக்கும் மேலாக பலவேறு நாடுகள் பிராந்தியங்கள் பண்பாடுகளினது படைப்பாக்கங்களை எதிர்கொள்வதனூ டாக அவற்றின் இடம், வரலாறு, இனத் துவம், மதம் முதலியன சார்ந்த வேறுபாடு களைப் புரிந்து கொள்ளவும், அதேநேரம் அவற்றை ஊடறுத்துச் செல்லும் மனித குலப் பொதுமைகளை மேற்படி வேறுபாடு களிடையே காணவும் இவ்விழாக்கள் உதவுகின்றன. கலையொரு சாட்சியமா கவும், அதேசமயம் பிரநிதித்துவமாயும், அதனால் ஒரு வரலாற்று ஆவணமா கவும் நிற்கும் ஒரு பெருங்கடப்பாட்டை ஆற்ற, ஒரு வெளிப்பாடாக அது கொள்ளும் பல தோற்றப்பாடுகளைக் காண இத் திரைப்படவிழா ஒரு யாத்திரை வழிபோலத் தொழிற்படும் என நம்புகிறோம்.

காதலுக்காக கடன்வாங்கிய நடிகர்

நடிகை அஞ்சலியும், ஜெய்யும் தீவிரமாக காதலிக்கிறார்கள் என்பது நீண்டநாள் பேச்சு. காதலிற்காக ஜெய் செய்த காரியம்தான் லேற்றஸ்ற் பேச்சு. அஞ்சலியும், ஜெய்யும் காதலிக்கிறார்கள் என்ற தகவல் வந்த சமயத்தில்தான் சித்தியுடன் பிரச்சனையென அஞ்சலி தலைமறைவானார். அஞ்சலியின் தலைமறைவுடன் ஜெய்யும் இணைத்து பேசப்பட்டார். திரும்பி வந்த அஞ்சலிக்கு வாய்ப்புகளும் கிடைக்காமல்போக, தனது படத்தில் நாயகியும் ஆக்கினார். அதன் பின்னர் நடந்ததுதான் ஹைலைட். அஞ்சலி நடித்த இரண்டு படங்கள் நிதிப்பிரச்சனையால் வெளிவர முடியாமல் இருந்தன. ஜெய் பணம் கொடுத்து படங்களை ரிலீசாக்கியுள்ளார். பணம் எப்படி வந்ததென விசாரித்தால், கடன் வாங்கித்தானாம் கொடுத்துள்ளார்.

அடிதடிக்கு ஆசைப்படும் நடிகை

பொங்கி எழு மனோகரா படத்தில் நடித்தவர் அருந்ததி நாயர். தற்போது வேறுசில படங்களிலும் நடித்து வருகிறார். தன்னை நயன்தாராவின் ரசிகையென கூறியுள்ளார். "நடிப்பில் அவரை பின்பற்றுகிறேன். என்றாலும் கவர்ச்சியில் எல்லை தாண்ட மாட்டேன். அனுஸ்கா போல ஆக்சன் படங்களில் நடிக்க ஆசை. அனுஸ்காவின் ஆக்சனை பார்த்து மிரண்டு போயிருக்கிறேன். நான் ஐந்தடி எட்டு அங்குல உயரமானவள். எனக்கு ஆக்சன் பொருத்தமாக இருக்குமென்கிறார்கள். வருங்காலத்தில் ஆக்சன் படங்களில் நடித்து முத்திரை பதிக்க ஆசை" என்றுள்ளார்.

கிராமமும் வரும் கிளாமரும் வரும்

சஞ்சிதா படுகோனே கன்னட நடிகை. விஜயின் வேட்டைக்காரனில் சிறிய வேடத்தில் நடித்தார். ஜித்தன் ரமேசுடன் ஒரு படத்தில் நாயகியாக நடித்தார். பின்னர் வாய்ப்புக்கள் வரவில்லை. அவர் ஒரு அதிரடி அறிவித்தல் வெளியிட்டுள்ளார். "நான் தமிழை நேசிக்கிறேன். எனக்கு பிடித்த நாயகர்கள், இயக்குனர்கள் இங்கு உள்ளனர். நான் தமிழில் நடிக்க ஆர்வமாக உள்ளேன். கிராமத்து பெண்ணான எனக்கு கிளாமரும் வரும். கவர்ச்சியாக நடிக்கவும் தயார்" என்றுள்ளார்.

அஜித்தின் புதுப்படம் இதுதான்!

அண்மைக்காலமாக அஜித் படங்களின் தலைப்பு அறிவிக்கவே நீண்டகாலம் எடுத்துக் கொள்கிறார். தற்போது தல 57 என அழைக்கப்படும் படத்தில் தலைப்பும் அறிவிக்கப்படவில்லை. படம் பற்றிய புதுபுது தகவல்கள் தினம்தினம் வெளியாகிக் கொண்டிருக்க, எந்தக்கவலையுமில்லாமல் வெளிநாட்டில் படப்பிடிப்பில் பிசியாக உள்ளது படக்குழு. இப்போது வெளியாகும் தகவலின்படி படத்திற்கு துருவன் என பெயரிடப்படலாமென தெரிகிறது.

கிருதி கர்பண்டா

1571 Sandhurst Circle (McCowan& Finch) woodside cinemas

NOW PLAYING

ALBION CINEMAS
1530 Albion Rd, Etobicoke, ON M9V 1B4
(416) 742-1765 www.albioncinemas.com

YORK CINEMAS
115 York Boulevard, Richmond Hill, ON L4B 3B4

WSid Info 416 266 3456 / Direct: 416 299 1045 | www.yorkcinemas.ca/www.newwoodsidecinema.ca | York Info.: 289 809 3456 / Direct: 905 707 3456

நான் பானுஜன் அல்ல; மோனிஷா!

ஒரு திருநங்கையின் வாழ்வியல் தொடர் 2

முதற்காதல் ஒரு குழந்தையின் முத்தம் போலப் பரிசுத்தமானது. நம்மையறியாமலே நம்முள் ஒருவகைக் கொண்டாட்ட மனநிலையை ஏற்படுத்திவிடும். எல்லோருடைய வாழ்விலும் பருவமாற்றத்தில் கடந்து சென்ற ஒரு காதல்கதை நிச்சயமாக இடம் பெற்றிருக்கும். ஒரு சராசரி மனித உயிரியாக எனக்குள்ளும் அந்தக் காதல் மலர்ந்தது. ஆனால் இந்தக் காதல் அபூர்வமானது. அது ஓர் 'அவள்' மீது ஏற்பட்ட காதலல்ல அது 'அவன்' மீது ஏற்ப்பட்ட காதல்.

அவன் என் அயல்வீட்டுத் தோழன். என் சக பராயத்தவன். எப்பொழுதெல்லாம் அவனைக் காண்கிறேனோ அப்பொழுதெல்லாம் என் மனத்தில் ஆயிரம் வண்ணத்துப் பூச்சிகள் செட்டை கட்டிப்பறந்தன. ஏனோ இனம் புரியாத ஒரு படபடப்பு என்னில் ஒட்டிக்கொள்ளும். வெட்கம் வேறு பிடுங்கித்தின்றது. தினம் தினம் எப்படியாவது அவனைப் பார்த்துவிட வேண்டும் என மனது அடித்துக் கொள்ளும்.

மருந்தினைக் குடித்து விட்டு சிகிச்சை வெற்றுக் கொண்ட பின்பு எனது பாடசாலை வாழ்க்கை முற்றிலுமாக மாறிப்போய் விட்டது. என்னை ஆண்கள் வரிசையில் அமருமாறு பாடசாலை சமூகம் நிர்ப்பந்தித்திருந்தது. ஆனால் என்னால் ஆண்கள் மத்தியில் சமமான ஒரு ஆணாக இருக்க முடியவில்லை.

ஆனால் அவனுடன் பேசுவதென்றாலே கையும் காலும் வெடவெடத்துப் போய்விடும். அப்பொழுது நடிகர் குணால் மிகவும் பிரபலமாக இருந்தார். என் அவன் கூட குணாலின் சாயலிலே இருந்தான். மோனல் என எனது பெயரினை நான் மாற்றிவைத்துக் கொண்ட பின்ணணியில் கூட என் முதற்காதல் இருந்தது.

இப்படியே அவன் மீதான காதலின் பெறுமதி நாளுக்குநாள் ஏறுவரிசையில் சென்றது. ஒரு கட்டத்தில் பாடப்புத்தகங் களிலெல்லாம் அவன் பெயரினைக் கிறுக்கி வைக்கும் அளவிற்குக் கிறுக்குக்

கூடிப்போனது. இப்படி ஒருநாள் கணக்குப் புத்தகத்தில் அவன் பெயரினை எழுதி வைத்து விட்டு உறங்கிவிட்டேன். வீட்டில் உள்ளவர்கள் பார்த்து விட்டனர். விடயம் அவன் காதுகள் வரை சென்றது.

அவர்கள் பார்வையில் எப்போதும் நான் பானுஜன்தான். அதனால்தான் என்னவோ, அவர்கள் அன்று நான் புத்தகத்தில் கிறுக்கியதை பெரிதாகக் கண்டு கொள்ளவில்லை. ஏதோ சக நண்பன் பெயரினை விளையாட்டாகக் கிறுக்கிவைத் துள்ளான் என்றே நினைத்திருந்தனர். ஆனால் அன்று முதல் என் காதல் ஊரறிந்த பரகசியமாகிவிட்டது. பானுஜன் என்ற என் பெயரே மறந்து போகும் அளவிற்கு பற்பல புதுப்புது பெயர்களை வைக்க ஆரம்பித்து விட்டார்கள். அலி, ரொபி, சூப்புத்தடி என தத்தமது மொழியறிவிற்கு எட்டிய வகையில் எல்லாம் புதிய புதிய பல பெயர்களை வைத்தனர்.

ஆனால் எனது மன உணர்ச்சியைப் பற்றி யாரும் கருத்தில் கொள்ளவில்லை. இப்போது அவர்களுக்கு தேவையானதெல்லாம் கிண்டலடித்து கேலிபேசுவதற்கான ஒரு வேடிக்கைப் பொருள். அது தம்மைப் போல இரத்தமும் சதையும் இணைந்த உணர்ச்சியுள்ள ஒரு ஜீவன் என்பது அவர்களின் கண்களுக்குத் தெரியவில்லை. வகுப்பில் தனியாக இருக்கிறான், ஆசிரியர்கள் கேள்வி கேட்டால் நெளிந்து நெளிந்து பதில் செல்கிறான், பெண்கள் போல நடக்கின்றான், இவன் அப்படி, இப்படி என இட்டுக்கட்டி அப்பாவிடம் சொல்லி விட்டார்கள். அவ்வளவுதான் அன்றிரவு அப்பா ருத்திர தாண்டவம் ஆடிவிட்டார். கோவம், அவமானம் இரண்டையும் ஒன்றாக எப்பெழுதாவது உணர்ந்திருக்கிறீர்களா?. நான் உணர்ந்திருக்கின்றேன் .

அது வாழ்வதில் அர்த்தமில்லை என்ற முடிவிற்கு நான் வந்ததருணம். எப்படியாவது என் உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டும் என்ற உணர்வு தீவிரமாக வலுப்பெற்றது. ஆனால் என்ன செய்வது என்றுதான் புரியவில்லை. அப்போது மலத்தியோன்தான் என் கண்ணில் தென்பட்டது. ஏதா ஒரு வேகத்தில் கரைத்துக் குடித்துவிட்டேன். மலத்தியோனைக் குடித்தது மட்டுமன்றி நித்திரைக் குளிசைகளையும் அள்ளிப் போட்டுக் கொண்டு உறங்கிவிட்டேன். கண்விழித்தபோதுதான் தெரிந்ததது நான் இருப்பது ஒரு மருத்துவமனை. மரணம் கூட என்னை நேசிக்கவில்லைப் போல. அன்று நான் பிழைத்துக்கொண்டேன். ஆனால் அதன் பின்புதான் எனக்கான சோதனைகள் ஆரம்பித்தன.

மருந்தினைக் குடித்து விட்டு சிகிச்சை பெற்றுக் கொண்ட பின்பு எனது பாட சாலை வாழ்க்கை முற்றிலுமாக மாறிப்போய் விட்டது. என்னை ஆண்கள் வரிசையில் அமருமாறு பாடசாலை சமூகம் நிர்ப்பந்தித் திருந்தது. ஆனால் என்னால் ஆண்கள் மத்தியில் சமமான ஒரு ஆணாக இருக்க முடிய வில்லை. நானும் கூட ஒரு ஆணாக வாழ விரும்பவில்லை. அதேநேரம் பெண்கள் வரிசையில் ஒரு பெண்ணாகவும் என்னால் இயல்பாக இருக்க முடியவில்லை. எனவே ஆண்கள் வரிசைக்கும் பெண்கள் வரிசைக் கும் இடையில் கதிரை, மேசை போட்டு தனியாக அமர்ந்து விட்டேன். யாருடனும் பேசுவதற்குக் கூட அந்த நேரத்தில் பிடிக்கவில்லை.

ஆனால் மனதிற்குள் ஆயிரம் சுனாமி அலைகள் ஓயாமல் அடித்துக் கொண்டே இருந்தன. அப்பொழுது என் மனஉணர்வை எங்காவது ஒரு இடத்தில் கொட்டித்தீர்க்க வேண்டும் எனத் தோன்றியது. அவர் எனது பாடசாலையின் ஆங்கில ஆசிரியர்; வயது முதிர்ந்தவர். எனது பாடசாலையின் கண்டிப்பான ஆசிரியரும் அவர்தான். அவரிடம் வீட்டுப்பாடம் செய்யாமல் பல தடவை அடிகூட வாங்கியிருக்கின்றேன். ஆனாலும் அந்த ஆசிரியரிடம் எப்படியாவது பேசிவிட வேண்டும் என்று நினைத்தேன். எனது மனப்பாரத்தை ஒருவாறு இறக்கி வைக்கத் தீர்மானித்தேன். **தொடரும்...**

– மோனிஷா

கர்ப்பகால நீரிழிவு

தாயாகப் போகிறோம் என்கிற மகிழ்ச்சிக் கடலில் மூழ்கிக் கொண்டிருக்கும்போதே திடீரென சில மாற்றங்கள் நிகழும். சோதனை முடிவுகளும் சோதனைக்கு உள்ளாக்கும். ஹோமோன் மாற்றங்கள் காரணமாக ஏற்படும் இந்தப் பிரச்னை கர்ப்பகாலத்தின் எந்த நேரத்திலும் வெளிப்படலாம். பிரசவத்தில் பிரச்சனை ஏற்படுத்துகிற நீரிழிவிலும் இரு வகைகள் உண்டு.

குளுக்கோஸ் தாங்குதிறன் குறைவதால் சிக்கல்களை உண்டாக்கும் கர்ப்ப கால நீரிழிவு இது. நீரிழிவால் பாதிக்கப்படுகிற கர்ப்பிணிகளில் 90 சதவிகிதத்தினருக்கும் இந்த வகை பிரச்னையே ஏற்படும். கர்ப் பத்தின் தொடக்கத்திலோ அது அறியப் படும்போதோ இந்த நீரிழிவும் அறியப் படும்.

ஏற்கனவே டைப் 1 அல்லது டைப் 2 நீரிழிவு உள்ள பெண்கள் மற்றும் கர்ப்ப கால நீரிழிவு ஏற்படக்கூடிய நிலையில் உள்ளவர்களுக்கு பிரசவத்தையே குழப்பமாக்கக்கூடிய தன்மை ஏற்படக்கூடும். தாய்க்கும் வயிற்றில் வளரும் குழந்தைக்கும் ஆபத்து விளைவிக்கவோ வளர்ச்சிக் குறைபாடு உண்டாக்கவோ இது காரணமாகலாம்.

கர்ப்ப காலத்தின் நடுவிலோ இறுதிக் கட்டத்திலோ இந்தக் குழப்பங்கள் தீவிரமாகும். கர்ப்ப கால நீரிழிவு அல்லது அதற்கு முந்தைய நிலையில் அதிகம் பாதிக்கப்படுவது யார்? 25 வயதுக்குப் பிறகு கர்ப்பம் தரிப்பவர்களே இந்தப் பிரச்னைக்கு அதிகம் ஆளாகிறார்கள். எடை அதிகம் கொண்டவர்களும் இதில் சிக்கலாம். குடும்பப் பின்னணியில் நீரிழிவு கொண்டிருப்பவர்களுக்கும் இது ஏற்படலாம்.

குடும்பப் பின்னணியில் நீரிழிவு, கிலோவுக்கும் அதிகமாக குழந்தை எடை பெறுதல், திரும்பத் திரும்ப கரு கலைதல் பிரச்சனை, சிறுநீரில் அதிக சர்க்கரை, பருமன் அதிக எடை

முந்தைய பிரசவத்தில் பிரச்னைகள் தவறாக உருவாகி இருத்தல் குறைப் பிரசவம் குழந்தை இறத்தல் போன்ற குழப்பங்கள், அளவுக்கு அதிகமான ரத்தக்கொதிப்பு, பூஞ்சைத் தொற்று அல்லது சிறுநீரகக் குழாய் தொற்று அடிக்கடி ஏற்படுதல், முந்தைய கர்ப்ப காலத்தில் குழந்தைக்கு நரம்பியல் கோளாறு காரணமாக பிரசவத்தில் சிக்கல்.

இதுபோன்ற எந்தக் காரணியும் இந்தப் பிரசவத்துக்கு முன்பே நீரிழிவைக் கொண்டு வரக்கூடும். கர்ப்ப காலத்தின் ஒவ்வொரு ட்ரைமஸ்டரிலும் (3 மாதங்களுக்கு ஒரு முறை) நீரிழிவு பரிசோதனை அவசியம்.

இதயத்தின் இடது வலது வென்டிரிகிள்களைப் பிரிக்கும் சுவரில் பழுது ஒக்சிஜன் அதிகமுள்ள ரத்தமும் ஒக்சிஜன் குறைவான ரத்தமும் கலந்து பிரச்சனை ஏற்படுதல். இது போன்ற இதயம் சார்ந்த பிரச்னைகள் அதிக அளவு உண்டாகும் அபாயம் உள்ளது. மத்திய நரம்பு மண்டலம். குழந்தையின் தண்டுவடம் மற்றும் நரம்பு மண்டலத்தில் சிக்கல்கள் ஏற்பட 7.2% அளவு வாய்ப்பு உள்ளது.

அன்னப்பிளவு சீரற்ற உதடு மற்றும் முதுகுத்தண்டில் வளர்ச்சிப் பிரச்னைகள்.

சிறுநீரகக் குழாய் அமைப்பில் குழப்பங்கள் இரட்டிப்பாக உருவாகுதல் சிறுநீரகங்களில் ஒன்றோ அல்லது இரண்டுமோ வளர்ச்சி அடையாமல் இருத்தல்

மலக்குழாய் உருவாகாமல் இருத்தல் அல்லது தவறான இடத்தில் உருவாகுதல். உறுப்புகள் சாதாரணமாக இருக்க வேண்டிய இடத்தில் உருவாகாமல் எதிரும் புதிருமாக அமைதல். பிரசவத்தின் போது ஏற்படும் விளைவுகள்

தாய்க்கு மட்டுமல்லாமல் கருவுக்கும் தொற்றக்கூடும், குழந்தை பிறந்த உடன் அதீத ரத்தப்போக்கு, சிசேரியன் செய்ய வேண்டிய நிலை, உயர் ரத்த அழுத்தம், கரு கலைதல், மூன்றாவது ட்ரைமஸ்டரில் குழந்தை இறத்தல்

வல்லாரை தரும் மருத்துவம்

வல்லமை மிக்க கீரை என்பதால் வல்லாரை எனப் பெயர் பெற்றது.

மூளை நன்கு செயல்படத் தேவையான ஊட்டச்சத்துகளை தகுந்த முறையில் பெற்றிருக்கிறது. இதனாலேயே 'வல்லாரை உண்டோரிடம் மல்லாடாதே' என்ற பழமொழி ஏற்பட்டது.

வீட்டு சமையலில் வல்லாரையை வாரம் இருமுறையேனும் பயன்படுத்த வேண்டும்.

வல்லாரையில் அடங்கியுள்ள சத்துகள்

வல்லாரையில் இரும்புச்சத்து, சுண்ணாம்புச் சத்து, விட்டமின் ஏ மற்றும் சி, தாது உப்புகள் ஏராளமாக அடங்கியுள்ளன.

ரத்தத்துக்குத் தேவையான சத்துகளை இந்த கீரை சரிவிகித அளவில் கொண்டுள்ளது.

வல்லாரை கீரையின் மருத்துவ குணங்களும் பயன்களும்

1. வல்லாரை கீரை உடல் உஷ்ணத்தை குறைத்து உடலுக்கு குளிர்ச்சியை கொடுக் கிறது.
2. ரத்தத்தில் ஹீமோகுளோபின் எண்ணிக் கையை அதிகரித்து ரத்தசோகையை போக்கும்.
3. மூளையின் நரம்புகளைத் தூண்டி நினை வாற்றலைப் பெருக்கும். அத்துடன் மூளை நன்கு செயல்படத் தேவையான ஊட்டச் சத்துகளை தகுந்த முறையில்பெற்றிருக்கிறது.
4. வல்லாரைப் பொடியைக் கொண்டு பல் துலக்கினால் பல்லிலுள்ள கறைகள் நீங்கும். மேலும் பல் ஈறுகள் பலப்படும்.
5. கண் எரிச்சல், கண்களில் நீர் வடிதல் போன்றவற்றை போக்கி கண் நரம்புகளுக்கு பார்வைத்திறனை அதிகரிக்கிறது.
6. ரத்தத்தை சுத்திகரிக்கிறது. தொண்டைக் கட்டி காய்ச்சல் உடற்சோர்வு மற்றும் படை போன்ற சரும நோய்களைப் போக்கும்.
7. யானைக்கால் நோயால் பாதிக்கப்பட் டவர்கள் வல்லாரை இலையை அரைத்து கட்டினால் நோயின் தாக்கம் குறையும்.

தினசரி உணவில் எப்படி?

வல்லாரை கீரை பருப்பு மசியல்

வல்லாரை கீரை தோசை செய்து அதை அழகிய வடிவங்களில் கட் செய்து குழந்தைகளுக்கு பிடித்தவாறு சமைக்கலாம்.

வல்லாரை கீரையை பொடியாக அரைத்து உபயோகித்தும் பயன் அடையலாம்.

வல்லாரை கீரையின் சாற்றை எடுத்து பாலுடன் கலந்து குழந்தைகளுக்க காலையில் வெறும் வயிற்றில் கொடுக்கலாம்

இன்னும் உண்டு

வல்லாரை இலையை நிழலில் உலர்த்தி பொடி செய்து தினமும் காலை மாலை என இருவேளையும் 1 டீஸ்பூன் பொடியில் தேவையான அளவு தேன் கலந்து 48 நாட்கள் சாப்பிட்டு வந்தால் ஞாபக சக்தி அதிகரிக்கும்.

வல்லாரை இலையுடன் மிளகு, துளசி, இலை ஆகியவற்றை சம அளவு எடுத்து விழுதாக அரைத்து மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு சுடுநீருடன் சாப்பிட்டால் காய்ச்சல் குணமாகும். வல்லாரை இலையை காயவைத்து சீரகம், மஞ்சள் சேர்த்து தூள் செய்து வைத்துக் கொள்ளவும். இதில் காலை மாலை உணவுக்கு முன்பாக 2 கிராம் அளவில் சாப்பிட்டு சூடான பசும்பால் குடித்து வர நினைவாற்றல் பெருகும்.

1/4 கிலோ புழுங்கல் அரிசியை ஊற வைத்து அத்துடன் வல்லாரை இலைகளையும் 5 மிளகாயையும் சேர்த்து அரைத்துக் கொள்ளவும். தேவையான அளவில் சின்ன வெங்காயம் நறுக்கிச் சேர்த்து அந்த மாவில் ரொட்டி போலச் செய்து சாப்பிட்டு வர சரும நோய்கள் விலகும். வல்லாரை இலையை நன்கு சுத்தம் செய்து அதனுடன் சின்ன வெங்காயம் பூண்டு மிளகு சேர்த்து சட்னியாக செய்து 48 நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் மாணவமாணவிகளுக்கு உண்டாகும் அறிவுச் சோர்வை நீக்கி ஞாபக மறதி குணமாகும். வல்லாரை இலையை சுத்தம் செய்து அதை டீயுடன் சேர்த்து குடிக்கலாம். இதைச் செய்தால் ஆஸ்துமா, சளி, இருமல் போன்றவற்றுக்கு மருந்தாகும்.

வல்லாரை கீரை சட்னியை இட்லி தோசை சப்பாத்திக்குத் தொட்டுக் கொள்ளலாம். தயிர் சாதத்துக்குத் தொட்டுக் கொள்ள பொருத்தமான சட்னி இது.

குழந்தைகளுக்கு புரதம் அவசியம்

குழந்தைகளின் திடமான வளர்ச்சிக்கு புரத சத்து அவசியம். புரதம் கட்டடத்தின் செங்கல் போல் உடலில் உள்ள செல்கள் உறுதியாக இருக்க உதவுகிறது. முளைகட்டிய பயறு, பருப்பு வகைகள், பச்சை பயறு, கடலை, பால், முட்டை, மீன் போன்றவற்றில் அதிகம் புரதம் உள்ளது. இதனை குழந்தைகளின் உணவுகளில் கண்டிப்பாக சேர்த்துக்கொள்ள வேண்டும்.

புரதம் வளர்ச்சிக்கும், காபோவைதரேற் சக்திக்கும் பெரிதும் உதவுகிறது. இரண்டும் சேர்ந்ததுதான் சமச்சீரான உணவு. குழந்தைகள் ஓடியாடி விளையாட படிக்க தேவையான சக்திகளை கொடுக்கும் ஊட்டச்சத்து காபோவைதரேற். கோதுமை, கம்பு, மக்காச்சோளம், அரிசி, இந்தச் சத்துகள் உள்ளது. இவை குழந்தைகள் ஆரோக்கியமாகவும் வலிமையாகவும் வளர உதவும். கோதுமை யில் றொட்டி செய்து கொடுக்காமல் காய்கறி கலவையை உள்ளே வைத்து செய்து கொடுக்கலாம்.

வரகு மற்றும் கம்பு ஆகியவற்றில் கஞ்சி அடை தோசை செய்து தரலாம். சோளத்தை வேகவைத்து அதில் உப்பு, மிளகுத்தூள் தூவி கொடுத்தால் குழந்தைகள் விரும்பி சாப்பிடுவார்கள். இப்போது சோழம்மா கடைகளில் கிடைக்கிறது. அதில் சர்க்கரை மற்றும் சிறிது நெய் சேர்த்து உருண்டையாக பிடித்துக்கொள்ளலாம். சர்க்கரையில் இரும்பு சத்து உள்ளது. அதே சமயம் நெய் பால் சார்ந்த பொருட் என்பதால் கல்சீயம் சத்தும் கிடைக்கும்.

கொழுப்பு சத்து குழந்தைகளின் வளர்ச்சிக்கு அவசியம். இதிலிருந்து ஏ ,டி ,ஈ மற்றும் கே போன்ற விட்டமின்கள் கிடைக்கின்றன. ஆனால் அளவுக்கு மீறிய கொழுப்பு ஆபத்தானது. எனவே துரித உணவுகளை தவிர்த்து விடுங்கள்.

அதே சமயம் ரத்தசோகை மற்றும் சோர்வு ஏற்படாமல் தடுக்கிறது. பால் தயிர் மோர், மீன், கீரை வகைகள் மற்றும் கேழ்வரகில் சோர்வை தடுக்கும் அனைத்து சத்துகளும் உள்ளன. முளைகட்டிய பயிர், பால், முட்டை, நார்ச்சத்துள்ள உணவுகள், கோதுமை, கேழ்வரகு, கம்பு, சோளம், பாசிப்பயிறு, கடலை, சோயா, பழங்கள், அப்பிள், ஒரேஞ்ச்,திராட்சை மற்றும் பச்சை காய்கறி களை சாப்பிட கொடுக்கலாம்.

பல குழந்தைகள் பள்ளிக்குச் செல்லும் அவசரத்தில் காலை சிற்றுண்டியை தவிர்த்து விடுகிறார்கள். இது தவறு. பொது வாக காலை சிற்றுண்டி குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் அவசியம். எனவே இட்லியை காலை சாப்பாடாக சாப்பிடுவதாக இருந்தால் சாம்பார் கருவேப்பிலை அல்லது தக்காளி சட்னியுடன் சேர்த்து சாப்பிடலாம்.

மதிய உணவில் அனைத்து ஊட்டச் சத்துகளும் இருக்க வேண்டும். எனவே மரக்கறிகள் அவித்து சேர்த்தசோறு அல்லது தேங்காய் சாதத்தில் பாதாம் துருவி சேர்க்கலாம். வேர்க்கடலை அல்லது வேகவைத்த கொண்டைக்கடலை சேர்த்து கொடுக்கலாம். தவிர வேகவைத்த முட்டை கீரை வகைகள் காய்கறிகள் போன்றவற்றை மாறி மாறி கொடுப்பதால் தேவையான ஊட்டச்சத்து குழந்தைகளுக்கு கிடைக்கும்.

உலகளாவிய தமிழரின் பத்திரிகை. the global newspaper of TAMILS.

கனடாவும் அகதிகளும்

கடந்த வார இதழிலே '1986ம் ஆண்டு கனடாவின் நியூபவுண்லாந்து மாகாண கடலிலே காப்பாற்றப்பட்ட 155 தமிழர்களின் வருகை பற்றி இந்த வாரம் பகிர்ந்து கொள்வோம்' என்று எழுதியிருந்தேன். இந்த அகதிகளின் வருகை பற்றி இந்தப் பத்திரிகை உட்பட பல ஊடகங்களில் சமீப காலமாக பல்வேறு கட்டுரைகள் எழுதப்பட்டிருந்தாலும், இந்த அகதிகளின் வரலாற்றுப் பதிவு குறித்து அவர்களின் வருகையையும் பின்புலத்தையும் குறிப்பிடுவது இத்தொடருக்கு மிகப் பொருத்தமாக இருக்கும் என நான் நம்புவதால், அதைப்பற்றி மீண்டும் சில விடயங்களை தீபம் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என எண்ணுகிறேன்.

நான் கடந்த பல இதழ்களில் இத்தொடரிலே குறிப்பிட்டபடி 1983ம் ஆண்டு இலங்கையின் தென் பகுதி எங்கும் நிகழ்ந்த இன அழிப்புக் கலவரத்தைத் தொடர்ந்து அரசியல் தஞ்சம் கோரி ஆயிரக் கணக்கிலே இலங்கைத் தீவை விட்டு வெளியேறிய தமிழர்கள், குறிப்பாக தமிழ் இளைஞர்கள் ஐரோப்பா கண்டத்தையே தம் இலக்காக வைத்து நகர்ந்தனர். 1980களின் ஆரம்பத்திலே பிரான்ஸ் ஜேர்மனி உட்பட பல ஐரோப்பிய நாடுகளிலே அரசியல் தஞ்சம் கோரிச் சென்ற தமிழ் இளைஞர்களால் ஏற்படுத்தப்பட்ட தொடர்புகளும், அந்த இளைஞர்களால் இலங்கைத்தீவிலிருந்து புறப்பட்டவர்களுக்குக் கிடைத்த உதவியும் அவர்களை அவ்வாறு ஐரோப்பா நோக்கிப் போக வைத்தன. ஆனால் 1980களுக்குப் பின்னர் பிரான்ஸ், ஜேர்மனி உட்பட ஏனைய ஐரோப்பிய நாடுகளில் அரசியல் தஞ்சம் கோரிவர்களுக்குக் கிடைத்த வசதிகள், சலுகைகளை விட கனடாவிலே வசதிகள் அதிக அளவில் கிடைக்கின்றது என்று இவர்கள் அறித் தொடங்கிய பின்னர் இந்த அரசியல் தஞ்சம் கோரிய தமிழ் இளைஞர்களில் கணிசமானோர் இந்த நாடுகளில் இருந்து கனடா நோக்கி வரத் தொடங்கினர். ஏறத்தாழ எல்லாருடைய பிரயாணமும் விமான மூலமாகத்தான் இருந்தது என்பதை நான் இங்கு குறிப்பிட்டே ஆக வேண்டும்.

இந்தச் சமயத்தில்தான் ஜேர்மனியிலிருந்த பல தமிழர்களுக்கு ஒரே நேரத்திலே கனடா போகக் கூடிய வாய்ப்பிருப்பதாக தகவல் கிட்டியது. ஹொன்டூராஸ் தேசத்தில் பதிவு செய்யப்பட்டு ஜேர்மன் பிரஜை ஒருவருக்குச் சொந்தமான ஒரு சரக்குக் கப்பல் மூலமே இந்த வாய்ப்பு அவர்களுக்குக் கிட்டியது. Oaurige என்று பெயரிடப்பட்ட இந்தக் கப்பலின் சொந்தக்காரரான Wolfgang Bindel என்ற ஜேர்மன் பிரஜையும் அந்த நேரத்திலே ஜேர்மன் நாட்டிலே வசித்துவந்த இன்னொரு இலங்கைப் பிரஜையுமே இதனுடைய பிரதான சூத்திரதாரிகள் என்று சொல்லவேண்டும். இவர்கள் இருவரும் சேர்ந்து இன்னொரு ஈழத்தமிழரின் துணையுடன் இந்தப் பிரயாணத்திற்கான ஆட்களைத் திரட்டத் தொடங்கினர்.

1986ம் ஆண்டு ஜூன் நடுப்பகுதியில் ஜேர்மன் நாட்டின் ஒரு பிரபல நகரமான ஹம்பேர்க் நகரத்திலிருந்து 55 கிலோமீட்டர் தொலைவில் உள்ள Starade எனும் துறைமுகத்தில் இருந்து இக்கப்பல் கனடா நோக்கி 155 ஈழத்தமிழ் அகதிகளுடன் தனது பிரயாணத்தை ஆரம்பித்தது. கப்பலிலே பிரயாணித்த ஈழத்தமிழ் அகதிகளுக்கு அவர்களை "மொன்ரியால் நகரத்திற்கு அருகாமையில் தாங்கள் கொண்டு சேர்ப்போம்" என்றுதான் பிரயாணத்தை வழிநடத்தியவர்கள் சொல்லியிருந்தார்கள்.

– டேவிட் பூபாலபிள்ளை

நாங்கள் கடந்த பல இதழ்களில் பார்த்திருந்தவாறு அன்றைய காலகட்டத்தில் கனடாவின் மொன்ரியால் மாநகரமே கனடா வரும் தமிழ் அகதிகளின் மையப்புள்ளியாக விளங்கியது. இங்குதான் அன்றைய தமிழ் அகதிகளின் பெரும் எண்ணிக்கையினரும் அன்றைய தமிழ்ச் செயல்பாட்டாளர்கள் அகதிகள் குறித்த செயல்பாடுகளும் மையம் கொண்டிருந்தன. இதனால் தாங்கள் மொன்ரியால் மாநகரத்தை சென்றடையப்போகிறோம் என்ற பெரும் சந்தோசத்திலே அந்த ஈழத் தமிழ் அகதிகள் அந்தக் கப்பலிலே பிரயாணத்தை ஆரம்பித்தனர்.

இந்தக் கப்பல் உண்மையிலே அத்திலாந்திக் சமுத்திரம் போன்ற பெரிய சமுத்திரத்தைக் கடக்கும் அளவிற்கு வசதிகளுடன் கட்டப்பட்ட கப்பல் அல்ல. பெரிய சமுத்திரங்களின் கரையோரப் பகுதிகளுக்கு ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு சரக்குகளை ஏற்றிச் செல்ல பயன்பட்ட Costers என்று அழைக்கப்படும் ரகத்தைச் சேர்ந்த கப்பல் தான் இது. பொதுவாக இந்தக் கப்பல்கள் சமுத்திரத்தைக் கடக்கப் பயன்படுத்தப் படுபவை அல்ல. ஆனால் இப்படி ஒரு வசதியும் பாதுகாப்பும் குறைந்த கப்பலில்தான் ஜேர்மனியில் இருந்த இந்த 155 ஈழத்தமிழ் அகதிகளும் கனடா செல்லும் கனவுடன் ஏறிக் கொண்டனர்.

ஆறு வாரங்கள் கஸ்டமான கடல் பிரயாணத்தின் பின்னர் நாங்கள் கனடாவை எட்டிவிட்டோம் என்று அந்த ஈழ அகதிகளுக்கு கப்பலைச் செலுத்தியவர்களால் சொல்லப்பட்டது. மொன்ரியலில் இருந்த சில நிமிடங்கள் தூரத்திலே அவர்கள் இருப்பதாகவும் அவர்களை இரு உயிர்காப்புப் படகிலே இறக்கி விடுவதாகவும், மிகக் குறைந்த நேரத்திலே அவர்கள் இவ் உயிர்காப்புப் படகுகள் மூலம் மொன்ரியலை சென்ற டைந்துவிடலாம் என்றும் அவர்களுக்கு மேலும் சொல்லப்பட்டது.

அதிகபட்சம் 25பேரே கொள்ளக்கூடிய இந்தப் படகுகள் இரண்டிலும் மொத்தம் 155 பேரும்பிரித்துஇறக்கிவிடப்பட்டனர்.மிகவும் பாதுகாப்பற்றதொரு கடல் பிரதேசத்திலே இவர்கள் இறக்கி விடப்பட்டார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. சில நிமிடங்களிலே மொன்ரியலை அடைந்து விடலாம் என்று நினைத்த இந்தப் பயணிகள் அடுத்துவந்த மூன்று தினங்களிலும் அத்திலாந்து சமுத்திரத்திலே மரணத்ததுடன் போராடுவார்கள் என்று அவர்கள் கனவிலும் நினைத்திருக்கவில்லை.

அந்த மூன்று தினங்களும் அவர்களுக்கு எப்படிக் கழிந்தன அந்த உயிராபத்தை அவர்கள் எப்படி எதிர் கொண்டார்கள் என்பதை அடுத்த இதழில் விரிவாகப் பார்ப்போம்.



பவழவிழாக் கண்ட பத்மநாப ஐயர்!

தீமை போக்கும் வரவும்!

தீவிர தமிழ் கலை இலக்கிய உலகில் ஒரு படைப்பாளியை, ஒரு விமர்சகரை, ஒரு கலைஞரை யாராவது அறிந்துகொள்ளாமல் இருப்பதற்குக் வாய்ப்பு உண்டு. ஆனால், மதிப்புக்குரிய பத்மநாப ஐயரை அறியாமல் இருக்க முடியாது. அவ்வளவுக்கு அவருக்கும் தீவிர தமிழ் இலக்கிய உலகுக்குமான உறவு நீண்ட நெடுங்கால உறவாகத் தொடர்கிறது. பாடசாலையில் படிக்கின்ற காலம் தொட்டு அண்மையில் தனது பவழவிழாவைக் கொண்டாடிய 75வது அகவையைக் கடந்தும் அவருக்கும் தமிழுக்குமான நெருக்கமான உறவு நீடித்து நிற்கிறது. அவருக்கும் தமிழுக்குமான உறவு என்பது அவருக்கும் நூலுக்குமான உறவாகத் தொடங்கி, நூலைப் பரவலாக்குவதாக வளர்ந்து, நல்ல நூல்களைப் பதிப்பிப்பதாக உயர்ந்து, தமிழ் எழுத்துகளையும் படைப்புகளையும் ஆவணப்படுத்தல் என்ற உயர்ந்த மட்டத்தில் இப்போது நிலைகொண்டிருக்கிறது.

ஈழத் தமிழின் படைப்புக்களை தமிழ் பேசும் பிரதேசங்களெங்கும் பரப்புவதில் அவர் தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர். அதற்காக தனது உழைப்பு முழுவதையும் செலவு செய்தவர். ஆர்வமுள்ள வாசகர்களுக்கு, தேடித் தேடி நூல்களை கொண்டு சேர்த்தவர். ஈழத் தமிழ்ப் படைப்புக்களை தமிழ் தெரியாதவர்களுக்கும் அறிமுகம் செய்யும் நோக்கில், ஆங்கில மொழிக்குக் கொண்டுவருவதற்காக அயராது உழைத்தவர். ஈழத் தமிழ் நூல்களை ஆவணப்படுத்தும் அரிய பணியில் ஈடுபட்டிருக்கும் நூலகம் (http://www.noolaham.org) என்ற நிறுவனத்தின் இயக்குனர்களில் ஒருவராக இருப்பவர். தமிழுக்கு இவர் ஆற்றிய சேவையைப் பராட்டி கனடிய இலக்கியத் தோட்டம் அவருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதை (2004) வழங்கிக் கௌரவித்தது. தமிழியல் வெளியீடு என்ற தனது பதிப்பகத்தினூடாக, பல அரிய நூல்களை வெளியிட்டவர். ஆவணப்படுத்தல் என்ற நோக்கில், அவர் ஆவணப் படங்கள் தயாரிப்பதிலும் அக்கறையுடன் இயங்கி வருபவர். அவரது அருமுயற்சியில் அண்மையில் வெளியிடப்பட்ட ஒரு ஆவணப்படம் தான், ஒப்பற்ற தவில் மேதையான அளவெட்டி தட்சணாமூர்த்தி அவர்களது வாழ்வைப் பற்றிய ஆவணப்படம்.

அண்மையில் அவரது பவழவிழா நிகழ்வு இலண்டனில் சிறப்பாக நடைபெற்றது.அவரது விழா மலராக 'நூலை ஆராதித்தல்' பத்மநாப ஐயர் 75 என்ற நாநூற்றுக்கும் மேற்பட்ட பக்கங்களைக் கொண்ட மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. மு.நித்தியானந்தன், கே.கே ராஜா ஆகியோர் இணைந்து தயாரித்த இந்த மலர் மிகவும் சிறப்பான முறையில் வெளிவந்துள்ளது.

ஏழு இயல்களாகப் பகுக்கப்பட்டு வெளிவந்திருக்கும் இந்த நேர்த்தியான நூல், வெறும் விழா மலரோ அல்லது வெறும் ஐயர் பற்றிய தகவல்களையும் புகழாரத்தையும் கொண்ட திரட்டோ அல்ல. மாறாக. ஐயரோடு பழகிய வாழ்ந்த,சேர்ந்து செயற்பட்ட அறுபதுக்கும் மேற்பட்ட நம்காலத்தின் முக்கிய படைப்பாளர்கள் ,கலைஞர்கள், விமர்சகர்களின் ஆக்கங்களைத் திரட்டித் தரும் ஒரு அரிய நூல் என்று சொல்வது மிகை அல்ல. '2004ம் ஆண்டுக்கான இயல் விருது அவருக்கு கண்டா இலக்கியத் தோட்டத்தினால் 2005 இல் வழங்கப்பட்ட போது. அவரைக் கௌரவிக்கும் நோக்கில் ஒரு மலரை வெளியிடுவதென்று தீர்மானிக்கப்பட்டதிலிருந்து,' இந்த நூலின் கதை ஆரம்பமாகிறது என்கிறார் மு. நித்தியானன் அவர்கள். தனது இந்த நூலுக்கான பதிப்புரையில் இவ்வாறு மேலும் குறிப்பிடுகிறார்:

'துரிதமாக மேற்கொள்ளப்படவேண்டும் என்று தொடங்கப்பட்ட இந்த மலரின் ஆக்க முயற்சி, பத்து ஆண்டுகளைக் கடந்து போய்விட்டது என்பதை நினைக்கவே ஆச்சரியமாக இருக்கிறது. எனினும், பத்மனாப ஐயரது எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவை ஒட்டியாவது இந்த மலரைக் கொணர முடிந்திருப்பது மகிழ்ச்சி தருகிறது. பத்மனாப ஐயர் உலகளாவிய வகையில்,தமிழ் இலக்கியம் குறித்தும், இசை குறித்தும்,ஓவியம் குறித்தும் விரிந்த தொசர்பினைக் கொண்டவராக இருந்திருக்கிறார். பல்வேறு நாடுகளில் இருந்து வெவ்வேறு துறைசார்ந்த எழுத்தாளர்களும், கலைஞர் களும், பத்மநாப ஐயர் குறித்த தங்களின், துல்லியமான ஆக்கங்களின் பதிவுகளை இந்த மலர் தாங்கி நிற்கிறது. பத்து ஆண்டுகளுக்கு மேற் பட்ட காலப்பகுதில் சேகரிக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பாக இந்த மலர் மிளிர்கிறது."

பத்து ஆண்டுகளுக்கு மேலான காலப்பகுதியில் திரட்டப்பட்ட கட்டுரைகளை இருப்பதால் இந்த இடைக்கலத்தில் மறைந்துவிட்ட தமிழின் முக்கிய ஆளுமைகளான, ஏ.ஜே.கனகரத்ன, சுந்தர ராமசாமி, சண்முகம் சிவலிங்கம், கனகனாயகம், கி.பி அரவிந்தன், சாரல் நாடன் மற்றும் லக்ஸ்மி ஹோம்ஸ்ரோங் ஆகியோரின் அரிய எழுத்துக்களையும் கொண்டதாக இம்மலர் வெளிவந்திருக்கிறது.

எளிமையும், எவருடனும் நட்புடன் பழகும் இனிய பண்பும் கொண்ட பத்மநாப ஐயரின் அர்ப்பணிப்பும், தமிழுக்கான உழைப்பும், அவர்து வெளிப்படையான தன்மையையும் பற்றி அறியாத சிலர் அவரை ஒரு சாதி வெறியர் என்றும், பிராமணர் என்பதைக் காட்டும் தனது பட்டத்தை சுமந்து திரிபவர் என்றும் குற்றம்சாட்டி எழுதியும் பேசியும் வருகின்றனர். இந்த நூல் வெளிவந்த போதும், அத்தகைய சர்ச்சைகள் மேலெழுந்தன. வழமை போலவே, அமைதியாக அதைக் கடந்து தானும் தனது பணியும் என்று சென்றுகொண்டிருக்கிறார் அவர். அவரது அசாத்தியப் பொறுமையும், எதையும் இயல்பாக எடுக்கும் நெஞ்சுரமும் ஆச்சரியப் படவைப்பவை. அவருடன் நெருக்கமாகவும், நட்பாகவும் நீண்ட காலம் பழகிய யாரும் அவரிடம் சாதி வெறியோ சாதி அபிமானமோ இருந்ததாக சொன்னதில்லை. முப்பது ஆண்டுகளுக்கு மேலாக அவ்ரௌடன் நெருக்கமாகப் பழகும் வாய்ப்பு என்க்கு இருந்திருக்கிறது. அவரிடம் எனக்கு சாதி பற்றிய உணர்வின் சாயலைக் கூட அடையாளம் காண முடிந்ததில்லை. எல்லா மற்ற நண்பர்களையும் போலவே அவருக்கேயுரிய பலமும் பலவீனமும் கொண்ட சாதாரண மனிதராகவே எனக்குத் தெரிகிறார். வெறிகொண்ட ஒருவராக, சாதிய நலன்களின் அடிப்படையிலான செயற்பாடுகளில் ஈடுபடும் ஒருவராக அவரை ஒரு சந்தர்ப்பத்திலும் நாடையாளம் கண்டதில்லை. ஆயினும் அவரது பெயரின் பின்னொட்டாக வரும் ஐயர் என்ற சொல்லின் காரணமாக அவர் இவ்வாறு 'சாதி வெறி' யராக விமர்சிக்கப்பட்டு வருகிறார். உண்மையில் அந்தச் சொல் அவருக்கு ஒரு பெயர் மட்டுமே. அதற்குமேல் அதற்கு மேலதிக அழுத்தம் எதையும் அவர் கொண்டிருக்கவில்லை. அதற்காக தன்னை விமர்சிப்பவர்களைக் கல் கண்டார் கல்லே கண்டார் என்று அந்த விமர்சனங்களைப் புறங்கையால் ஒதுக்கிவிட்டு அவர் தனது பணியும் தானுமாக இயங்கி வருகிறார். அவர் இன்னும் நீண்ட காலம் உடல் நலத்தோடு இனிதே வாழ வாழ்த்துவோம்.

– எஸ்கேவி

குழந்தைப் போராளி

சைனா கெய்ரெர்சி
தமிழில்: தேவா

விடுமுறை முடிந்து நகர வீட்டிற்குச் செல்லும் நேரமும் வந்தது. சிரிப்பு டனேயே சிற்றன்னை எங்களை வரவேற் றார். அது ஒரு அசாதரணமான காட்சி. தொலைந்துபோன எங்கள் சகோதரிக்காக அவர் சிரித்திதிருக்க வேண்டும். எது எப்படியாயினும் கடைசியில் சிற்றன் னையின் விருப்பப்படியே சம்பவங்கள் நடந்தேறியிருந்தன. எங்களைத் தொலைத்து விடுவதற்கு அவரெடுத்த முயற்சியில் அவர் வெற்றி பெற்றிருந்தார்.

எங்களின் கடைசிப் பிணைப்பான செவிலித் தாயார் மேரியும் வீட்டைவிட்டு போகப் போகிறார் என்பதனையும் கேள்விப் பட்டோம். அவரிடம் எங்களை விட்டுப் போகவேண்டாமென அழுகையுடன் கெஞ் சிக்கூடப் பார்தோம். அவர் எங்களுக்குத் தந்த நேசமும் கருணையும் தாயினுடையதைப் போன்றது என்பது எங்களுக்கு விளங்கியு மிருந்தது. சிற்றன்னையுடன் முரண்பட்டுக் கொண்டுதான் எங்கள் அன்பான மேரி வீட்டைவிட்டு வெளியே போகிறார். காலை உணவு மேசையில் தயாராக இருந்தது. ஆனால் மேரியைக் காணவில்லை. தோட்டத்தில் தேடிப் பார்த்தோம், அவரை எங்குமே காணவில்லை. பாடசாலைக்குச் செல்லும் வழியில் அவர் எங்களுக்குச் செய்தவை பற்றியெல்லாம் நானும் தம்பியும் பேசிக்கொண்டே போனோம். ஒருவேளை பாடசாலை முடிந்ததும் அவரைக் காணக் கூடியதாயிருக்கும் என நினைத்தோம். ஆனால் நாங்கள் அதன் பின்பு எப்போதுமே அவரைக் காணவில்லை.

மேரியின் இழப்பு எனக்குப் பெரியதென் பதைச் சிற்றன்னையிடம் காட்டிக் கொள்ளாது கவனமாகவே இருந்தேன். நான் உறுதியானவள் போன்றும் மேரியின் வெற்றிடம் எனக்குப் பொருட்டேயில்லை என்பது போலவும் நாடகமாடினேன். பிரச்சினைகளில் அமிழ்ந்து விடாது தப்பி வாழ்வதற்கு உணர்வுகளை மழுங்கடிக்க வேண்டியிருந்தது. எனது பிற்கால வாழ்க்கையில் அதுவே வழமையாகவும் விட்டுவிடமுடியாத பழக்காமாகவும் மாறியிருந்தது.

எனது நிலைமை மேலும் மேலும் மோசமாகிக்கொண்டே போனது. சிற்றன்னையின் குற்றச்சாட்டுகள் ஓயந்த பாடில்லை.அப்பாவின் சித்திரவதைகள் நான் அங்கயீனமானவளாகப் போய்விடுனோ என அஞ்சுமளவுக்கு மோசமாகத் தொடர்ந்தன. நிலைமை இவ்வாறாகிப் போனதால் நாட்களைக் கவனமாக ஓட்டுவது மட்டுமின்றி, எனது மனதைத் திடமாக வைத்துக்கொள்ளவும் நான் கடுமையாகப் போராட வேண்டியிருந்தது. நாளாக நாளாகச் சிற்றன்னையின் வெறுப்பு வளர்ந்து கொண்டே போயிற்று. எனது தம்பியைப் பொறுத்த வரையில் என்னுடன் ஒப்பிடுகையில் அவனின் நிலைமை நன்றாகவேயிருந்தது.

ஒருநாள் நான் எனது புத்தகப் பையைத் தொலைத்துவிட்டேன்.மதிய உணவுக்காக வீட்டுக்குச் சென்றிருந்தபோது அதைப் பாடசாலையிலேயே விட்டுவிட்டுச் சென்றிருந்தேன். திரும்பி வந்ததும் குழப்பத்துடன் அங்குமிங்கும் அதைத் தேடினேன்.புத்தகப்பைகிடைக்கவேயில்லை. பயம் என்னைக் கவ்விக் கொண்டது. புத்தகப் பையின்றி வீடு சென்றால் என்ன நடக்குமென்பது எனக்குத் தெரியும். மற்ற மாணவர்களெல்லோரும் வீடு சென்றுவிடப் பயப்பிராந்தியுடன் அழுது கொண்டே பாடசாலையிலிருந்து வெளியே வந்தேன். அழுகை எனக்கு உதவப் போவதில்லை. வீடு செல்லத் துணிவில்லாமல் அங்கேயே நின்றேன்.

மாலையாகியிருந்தது, வீட்டில் என்ன நடக்குமென்பதை மனக்கண்ணில் பார்த்துக் கொண்டேன். திடீரென எனது சினேகிதி ரெகேமாவின் ஞாபகம் வந்தது. அவள் தனது சித்தப்பாவின் வீட்டில் தங்கிப் படித்து வந்தாள். நான் அவளைத் தேடிப் போய்க்கொண்டிருக்கையில் வழியிலேயே அவளைச் சந்தித்தேன். அவளிடம் எனக்கு உதவி செய்யுமாறு கெஞ்சினேன். அவளென்னை வாழைத்தோட்டத்தினுள் ஒழிந்திருக்குமாறும், வாய்ப்பு வரும் போது என்னைத் தனது அறையினுள் கூட்டிச் செல்வதாகவும் சொன்னாள். நான் நீண்டநேரமாக வாழைத்தோட்டத்தினுள் ஒழிந்திருந்தேன்.இறுதியாக அவள் வந்து தனது அறைக்கு என்னைக் கடத்திச் சென்றாள். அவளது அறை ஆட்டுப் பட்டியை ஒட்டியிருந்தது. அவளால் சிறிது உணவையும் தேடிக்கொள்ள முடிந்திருந்தது. நாங்கள் சாப்பிடத் தொடங்கும் போது அவளின் சித்தப்பா அவளைக் கூப்பிட்டார். அவள் தான் திரும்பி வரும் வரை சாப்பிட வேண்டாமெனக் கூறி விட்டுச் சென்றாள். அவர்களின் வீட்டிற்குத் திடீர் விருந்தினர்கள் வந்திருந்தார்கள். அவர்கள் ரெகேமாவின் அறையில் அன்றிரவு தூங்கப் போகின்றார்கள். எனவே ரெகேமா என்னை ஆட்டுப் பட்டிக்கு மாற்றினாள். அதிகாலையில் மற்றவர்கள் தூக்கத்திலிருந்து விழிப்பதற்கு முன்னதாகவே ரெகேமா ஆட்டுப் பட்டிக்கு வந்து என்னை எழுப்பிவிட்டாள்.பதற்றத்துடன் எழுந்த நான் அவளை மிகவும் நேசிப்பதாகச் சொன்னேன்.

தொடரும்...

எங்கள் கல்வி நிலையத்திற்கு வாருங்கள். உங்கள் பிள்ளைகளை சரளமாக ஆங்கிலம் பேச வைக்கிறோம்... 9 ஏ எடுக்க வைக்கிறோம்... புலமைப்பரிசிலில் சித்திபெற வைக்கிறோம் என ஏராளம் விளம்பரங்களை அன்றாடம் பார்க்க கிடைக்கிறது. இப்படியான நிறுவனங்களில்த்தான் தமது பிள்ளைகளை படிப்பிக்க பெரும்பாலான பெற்றோர் விரும்புகிறார்கள். பரீட்சை பெறுபேறுகளால் பெருமையடைந்த காலம் போய், பிள்ளைகள் கல்விகற்கும் இடங்களால் பெற்றோர் பெருமைப்பட்டுக் கொள்ளும் காலம் உருவாகியுள்ளது.

நமதுநாடு பெருமைப்பட்ட விடயங் களில் முதன்மையானது இலவச கல்வி. ஆசியாவில் கல்வியறிவு வீதம் அதிகமுள்ள நாடுகளில் நமது நாடும் முன்வரிசையில் இருக்க இலவச கல்வியும் ஒரு காரணம். கல்வி பணம்படைத்தவர்களின் உரிமையல் லத்தானே.

ஆனால் இன்று கல்வி விரைவாக தனியார்மயமாகிக் கொண்டிருக்கிறது. பாடசாலைக்கு வெளியில் மிகப்பெரும் விலையில் கல்வி விற்கப்படுகிறது. அதை வாங்க எல்லோரும் போட்டிபோடுகிறோம்.

கல்வியையும் பெண்களையும் இணைத்து மிகப்பெரும் பொருளாதார சந்தை உருவாகி யுள்ளது. வடக்கு கிழக்கு எங்கும் இது பொதுவாகிவிட்டபோதும் யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற பெருநகரங்களில்த் தான் இதன் அசலான முகத்தைகாண முடியும். இரண்டு, மூன்று வயது குழந்தைகளின்

பெண்ணெழுத்து 13

புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள பிள்ளையை காலையிலிருந்து இரவு வரை ஒவ்வொரு ரியூசனாக ஏற்றியிறக்கினார். ஒரு கட்டத்தில் பிள்ளையுடன் ஓடித்திரிவதா, வீட்டு வேலைகள் செய்வதா, உழைக்கும் வழியை பார்ப்பதா என்ற தடுமாற்றம் ஏற்பட்டது.

கல்வி நிலையங்கள் தொடக்கம் உயர்தரம் கற்பிக்கும் தனியார்கல்வி நிலையங்கள் வரையும் தாராளமாக உருவாகிவிட்டன. இரண்டு வயதில் குழந்தைகளை போட்டிக் களத்திற்குள் பெற்றோர் தள்ளிவிடுகிறார்கள்.

இந்த இடத்தில் தவிர்க்கவியலாமல் ஒரு உண்மையை ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும். குழந்தைகளின் தலையில் மாபெரும்சுமையைஏற்றுவதில்பெண்களிற்கு உள்ள பங்கு. முன்னர்தான் குழந்தைகளை கல்விநிலையங்களிற்குஅனுப்பிவிட்டு,வீட்டி லிருந்து பெண்கள் பெருமை பேசினார்கள். இப்பொழுது கல்விநிலைய வாசலிற்கு பேச்சிடத்தை மாற்றிவிட்டனர். பிள்ளை களின் பெறுபேற்றில், கல்வி கற்குமிடத்தில் பெருமைபேசிக்கொள்வதில் ஒப்பீட்டளவில் பெண்கள்தான் முன்னணியில் நிற்கிறார்கள்.

முன்பள்ளிகள் தொடங்கி உயர்தர கல்வி நிலையங்கள் வரை ஒரு அவதானத்தை செலுத்துங்கள். பிள்ளைகளிற்காக காத்தி ருக்கும் பெண்களின் எண்ணிக்கை எவ்வள வென்பது புரியும்.

குழந்தைகளை போல இப்பொழுது பெண்களின் உலகமும் நேரநெருக்கடியாகி விட்டது. அதிகாலையில் எழுந்து பிள்ளையை படிக்க வைத்து,குளிக்க வார்த்து தயாராக்கி, உணவு சமைத்து, கல்விநிலையத் தில் கொண்டுபோய் இறக்கி, மீண்டும் ஏற்றிவந்து, மீண்டும் உடைமாற்றி, அடுத்த கல்விநிலையம்...

இப்படியே இயந்திரமாக இயங்கு கிறார்கள் பெண்கள். கணவன்மார் அலுவலகத்திற்கு அல்லது வெளிநாட்டுக்கு சென்றுவிட, பெண்கள் பிள்ளைகளின் படிப்புடன் ஓடித்திரிகிறார்கள். அவர் களில் பெரும் பாலானவர்களிடம் மோட்டார்சைக்கிள் உள்ளது.

முன்னொரு காலத்தில் அனைத்து முன்பள்ளிகளும் இலவசமாக இயங்கின. இப்பொழுதும் முன்பள்ளிகளில் ஒருபகுதி இலவசமாக இயங்குகின்றனதான். ஆனால் அதிக பணம் கறக்கும் முன்பள்ளிகள்தான் பிரபல்யமானவையாகவும், அதிகம் பேர் பிள்ளைகளை சேர்க்கும் இடங்களாகவும் உள்ளன. சாதாரணமாக இப்படியான இடங்களில் 15,000 20,000 வரை அட்மிசன் பணம் அறவிடப்படுகிறது.

வசதிபடைத்தவர்கள் இப்படியான செலவுகளை தாராளமாக செய்யலாம். அவர்களை பார்த்து வாழ முயலும் ஏழைகளின் நிலை?

அவர்கள் என்ன விலை கொடுத்தாவது அந்த பந்தயத்தில் இறங்குகிறார்கள். அவர்களிற்காகவே இருக்கிறது லோன் சிஸ்டங்கள். வங்கிகளும், நிதி நிறுவனங்களும் கொடுக்கும் லோன்களில் எதற்காக பெண் களிற்கானவைதான் அதிகமாக உள்ளது. 30,000 - 500,000 வரை நிதி நிறுவனங்கள் லோன் கொடுக்கின்றன. ஒவ்வொரு வாரமும் பணம் கட்டும் நடைமுறைதான் பெரும் பாலான லோன்கள். இவை கண்ணுக்கு தெரியாமல் பெண்களை சுரண்டுகின்றன. நிதி நிறுவனங்களில் லோன் வாங்கும் ஒருவர் மெதுமெதுவாக 28 வீத வட்டியை செலுத்துகிறார்கள். சமூகத்தில் உள்ள இன்னொருவரை பார்த்து அவதிக்குள்ளாகும் பெண்கள் பலர்.

அவர்களில் ஒருவரை அண்மையில் சந்தித் தேன். உடுவிலில் உள்ள பாடசாலை யொன்றில் தனது பிள்ளையை சேர்க்க அவர் விரும்பினார். அங்கு சேர்ப்பதெனில் குறைந்தது 15,000 அட்மிசன் தேவை. பாடசாலையில் சேர்ந்த பின்னரும் மாதா மாதம் அங்கு செலவுதான். கணவனை இழந்த அவர் இந்த விசப்பரீட்சையில் இறங்கினார். கிழமை லோன், மாதலோன் என 50,000 வரை கடன் பெற்றார். பிள்ளையை கல்விநிலையங்களிற்கு ஏற்றியிறக்க ஒரு மோட்டார்சைக்கிள் தேவையென நினைத்து, நகைகளை அடைவு வைத்தார்.

புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்ற வுள்ள பிள்ளையை காலையிலிருந்து இரவு வரை ஒவ்வொருரியூசனாக ஏற்றியிறக்கினார். ஒருகட்டத்தில் பிள்ளையுடன் ஓடித்திரிவதா, வீட்டு வேலைகள் செய்வதா, உழைக்கும் வழியை பார்ப்பதா என்ற தடுமாற்றம் ஏற்பட்டது.

ஒருகட்டத்தில் பணப்பிரச்சனை தலைக்கு மெல் சென்றது. நகைகளிற்கு வட்டி கட்ட முடியாமல் அவை அறுதியில் சென்றன. பின்னர் புலமைப்பரிசில் பிள்ளையும் கோட்டை விட்டது. மற்றைய கடன்களும் கழுத்தை பிடிக்க, இன்று அந்தரித்து திரிகிறார். கல்வி, பணம் எல்லாம் வாழ்க்கையை கொண்டு நடத்தவே. முழீறாக வாழ்க்கையை அழிப்பதற்கல்ல. குழந்தைகளில் தமது விருப்பங்களை ஈடுவைக்கும் கலாசாரத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதெனில் பெண்கள் மத்தியிலேயே விழிப்புணர்வு அவசியம். **தொடரும்...**

– பி.சியா

மேற்கிந்தியத்தீவுகள்; கலிப்சோவிலிருந்து கலிப்சோவுக்கு–3

1930இல்இங்கிலாந்துக்குஎதிரான தொடரைச் சமன் செய்த மேற்கிந்தியத்தீவுகள் அணி, 1930-31 இல் அவுஸ்திரேலியாவுக்குப் பயணம் செய்து 5நாட் போட்டிகள் ஐந்து கொண்ட தொடரொன்றில் விளையாடியது. இந்தத் தொடரில் ஆரம்பம் முதலே நிறையச் சம்பவங்கள் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிரானதாகவே இருந்தன. அந்தக் காலப்பகுதியில் அவுஸ்திரேலியாவில் "வெள்ளை அவுஸ்திரேலியா" என்கிற கொள்கை நடைமுறையில் இருந்தது. இந்தக் கொள்கையின்படி அவுஸ்திரேலியாவுக்கு, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இருந்து வரக் கூடிய வெள்ளையினத்தவர் மட்டுமே குடிவரவாளர்களாக அனுமதிக்கப் பட்டார்கள். மேற்கிந்தியத்தீவுகளின் துடுப் பாட்டக் கட்டுப்பாட்டுச் சபை அவுஸ்தி ரேலிய அரசாங்கத்திடம்,தொடரின் பிற்பாடு எந்தக் கறுப்பின வீரரும் அவுஸ்திரேலியாவில் தங்கமாட்டார்கள் என்ற உறுதிமொழியைக் கொடுத்தபின்னரே இந்தத் தொடரில் பங்குபற்றிய கறுப்பினவீரர்களை அவுஸ்தி ரேலியா நாட்டுக்குள் அனுமதித்தது. மேலும், மேற்கிந்தியத்தீவுகளின் வேண்டு கோளின்படி அந்த அணியின் எல்லா வீரர் களும் ஒரே தங்குமிடங்களிற்தங்க அனுமதிக் கப்படவில்லை. அணியிலிருந்த 7 வெள்ளை யின வீரர்கள் தனியாகவும், 7 கறுப்பின வீரர்கள் தனியாகவும் தங்கவைக்கப்பட் டார்கள்.

தொடரின் ஆரம்பத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அவுஸ்திரேலியாவுக்கு ஈடு கொடுக்க சிரமப்பட்டார்கள். ஆயினும், ஹெட்லி, கொன்ஸ்ரன்ரைன் ஆகியோர் ஓரளவுக் கேனும் தமது திறமையை வெளிக்காட்டி னார்கள். சிட்னி மைதானத்தில் நடந்த ஐந்தாவது 5நாட் போட்டியில் 30 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பெற்ற வெற்றியே அவர்கள் அந்நியமண்ணில்பெற்றமுதல்வெற்றியாகும். இருப்பினும், போட்டிகளின் தொடரை 41 என்கிற கணக்கில் மேற்கிந்தியத்தீவுகள் அணி தோற்றிருந்தது.வில்லியம்பொன்ஸ்ஃபோர்ட் (467 @ 77.83), டொனால்ட் பிராட்மன் (447 @ 74.50) ஆகியோருக்கு அடுத்தபடியாக 336 ஓட்டங்களை (சராசரி 37.33) இரண்டு சதங்கள் அடங்கலாக ஜோர்ஜ் ஹெட்லி பெற்றுக் கொண்டார். மேற்கிந்தியத்தீவுகள் அணி தொடரிற் தோற்றிருந்தாலும், அவுஸ்தி ரேலியத் துடுப்பாட்ட விசிறிகள் மத்தியில் நன்மதிப்பைப் பெற்றுக்கொண்டது.

1933 ம் வருடம் மீண்டும் இங்கிலாந்துக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 20 என்கிற கணக்கிற் தோல்வியைத் தழுவிக்கொண்டது மேற்கிந்தியத்தீவுகள் அணி. 1934-35 காலப்பகுதியில் மீண்டும்மேற்கிந்தியத்தீவுகள் அணி இங்கிலாந்து அணியைச் சொந்த மண்ணில் வைத்து எதிர்கொண்டது. அந்தத் தொடர் மேற்கிந்தியத்தீவுகளின் துடுப்பாட்ட வரலாற்றை மாற்றியமைத்தது எனலாம். பார்பேடோஸில் நடைபெற்ற முதலாவது 5நாட் போட்டியை இங்கிலாந்து மிகுந்த போராட்டத்தின் பின் வெற்றிகொண்டது. மொத்தம் நான்கு ஆட்டவாய்ப்புகளில் ஒரு அணிகளும் சேர்ந்து 36 இலக்குகளை இழந்து வெறும் 309 ஓட்டங்களையே பெற்றிருந்தனர். அடுத்த போட்டியில் கொன்ஸ்ரன்ரைன், ஹெட்லி, சீலி போன்றோரின் திறமையான துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சாளர்களின் ஒருமித்த உழைப்புக் காரணமாக 217 ஓட்டங்களால் மேற்கிந்தியத்தீவுகள் அணி வெற்றியைத் தமதாக்கிக்கொண்டது. மூன்றாவது போட்டி வெற்றி தோல்வியின்றி முடிய, நான்காவது போட்டி தொடரைத் தீர்மானிக்கும் போட்டியாக அமைந்தது. அந்தப் போட்டியில் ஹெட்லி எடுத்த 270 ஓட்டங்களும், மன்னி மாட்டின்டேல் (Manny Martindale), கொன்ஸ்ரன்ரைன் ஆகியோரின் சிறப்பான பந்துவீச்சும் சாதக மாக அமைய, ஒரு ஆட்டவாய்ப்பு மற்றும் 161 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந் தைப் படுதோல்வியடையச் செய்து, தமது முதற்தொடர் வெற்றியைப் பெற்றுக் கொண்டது மேற்கிந்தியத்தீவுகள் அணி.

1939 இல் மீண்டும் இங்கிலாந்துக்குச் சென்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி மூன்று போட்டிகள் கொண்ட தொடரை 10 என்கிற கணக்கில் தோற்றது. ஹெட்லி லொர்ட்ஸ் மைதானத்தில் நடந்த போட்டியின் இரு ஆட்டவாய்ப்புகளிலும் சதமடித்தார். இந்தத் தொடருக்குப் பிறகு 1948 வரையில் மேற்கிந்தியத்தீவுகள் எந்தத் தொடரையும் விளையாடவில்லை. இந்தத் தொடர் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தொடராக அமைந்தது. பார்பேடோஸில் நடந்த முதற் போட்டி சமநிலையில் முடிந்தது. ட்ரினிடா டில் நடந்த இரண்டாவது போட்டியும் அவ்வாறே. அப்போட்டியில் அறிமுகமான Andy Ganteaume சதமடித்தாரென்பதும், அதற்குப் பிறகு அவர் எந்தப் போட்டி களிலும் விளையாடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இதே போட்டியில் George Carew என்பாரும் சதமடித்தார்.

இறுதியிரு போட்டிகளிலும் மிகப் பெரும் வெற்றிகளை மேற்கிந்தியத்தீவுகள் அணி பெற்றுக்கொண்டது. அவ்வெற்றிகளின் காரணகர்த்தாக்கள் மேற்கிந்தியத்தீவுகளின் துடுப்பாட்ட வரலாற்றில் மிகவும் முக்கிய மானவர்கள். அவர்களைப் பற்றி, வரும் அத்தியாயங்களில் பார்க்கலாம்

பீனிக்ஸ் பறவைகள் போல்

மீண்டும் உயிர்த்தெழும் முல்லைத்தீவு!

முல்லைத்தீவுமாவட்டம்புதுக்குடியிருப்பு 10ம்வட்டாரத்தில்உள்ளபொதுநோக்கு மண்டபத்தில் 27082016 சனிக்கிழமை "பீனிக்ஸ் மாற்றுத் திறனாளிகள் சங்கம்", "கணினிக் கல்வி மையம்", "வன்னீஸ்வரம் இசைக்குழு" ஆகிய மூன்று அமைப்புகளின் அங்குரார்ப்பண விழா, மறுவாழ்வு கனடா அமைப்பினரின் ஏற்பாட்டில் சங்கத் தலைவர் இ.பிரபாகரன் தலைமையில் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. இந்த விழாவுக்கு வடமாகாண சபையின் கௌரவ அமைச்சர் டெனிஸ்வரன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

முதலில் 'பீனிக்ஸ் மாற்றுத் திறனாளிகள் சங்க'த்தின் பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்துவைத்த அமைச்சர் "நாங்கள் வீழ்ந்து விட்ட இனமல்ல, மாற்றுத் திறனாளிகளாய் இருந்தாலும் கூட பீனிக்ஸ் பறவைகள்போல் நாங்கள் மீண்டும் எழுவோம் என்பதை இங்கு நீங்கள் நிரூபித்துள்ளீர்கள்" என்று குறிப்பிட்டார்.

அடுத்த நிகழ்வாக 20 மாணவர்கள் பங்குகொள்ளக்கூடிய, பத்துக் கணினிகள் மற்றும் மேசை கதிரைகள் உட்பட்ட தளபாட வசதிகளைக் கொண்ட புதிய "கணினிக் கல்வி மையம்". கௌரவ அமைச்சர் அவர்களால் மங்கல விளக்கேற்றித் திறந்து வைக்கப்பட்டது. கல்வி மையத்தை திறந்து வைத்து உரையாற்றிய அமைச்சர் " உலகம் கணினி மயமாகி உள்ளது. கணினிக் கல்வி இல்லாமல் எமக்கு எதிர்காலம் இல்லை. அனைத்தின் ஆதாரமாக இன்று கணினிதான் பயன்படுகிறது.

முல்லை மக்களின் கல்விக்கு கணினி அறிவின் அத்தியாவசியத்தை உணர்ந்துதான் மறுவாழ்வு கனடா அமைப் பினர் இந்த கல்வி நிலையத்தை உருவாக்கி யுள்ளனர். கூடியளவு மாற்றுத் திறனாளி களையும் போரால் பாதிக்கப்பட்டே டாரையும் அரசியற் கைதிகளின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களையும் இந்த வகுப்புகளில் சேர்த்துக்கொள்ள வேண்டும்" என்று கூறினார். இதன் பின்னர் அமைச்சர், ஆசிரியர் மாணவர்களோடு கலந்துரையாடி ஆலோசனைகளையும் வழங்கினார்.

தொடர்ந்து அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்த "வன்னி ஸ்வரங்கள் " இசைக்குழுவின் அங்குரார்ப் பணம் அங்கே அமைக்கப்பட்டிருந்த மிக அழகிய மேடையில் கோலாகலமாக ஆரம்பிக்கப்பட்டது. பெருந்திரளான மக்கள் இந்த இசை நிகழ்ச்சியைக் கண்டும் கேட்டும் களிக்கவெனத் திரண்டிருந்தனர். கௌரவ முதலமைச்சர் திரு விக்னேஸ்வரன் தமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணங்களினால் வரமுடியாமைக்கு வருத்தம் தெரிவித்து தமது சார்பில் நீண்ட உரை ஒன்றை அனுப்பி வைத்திருந்தார். அதை முழுமையாக வாசித்த அமைச்சர் டெனிஸ்வரன் இந்த முயற்சியை மிகவும் பாராட்டி இதற்கு அனுசரணை வழங்கிய மறுவாழ்வு கனடா அமைப்பிற்கு தமது மனமார்ந்த நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்தார்.

இந்த இசைக்குழுவின் மூலம் மாற்றுத் திறனாளிகள் உட்பட பலர் தமது வாழ்வாதாரத்தை பெறவுள்ளதோடு அவர்கள் தமது வருமானத்தின் மூலம் இன்னுமின்னும் பலருக்கு சுயதொழில் வாய்ப்புகளை தாமே ஏற்படுத்திக் கொடுக்க இருப்பதை அறியும்போது இத்திட்டம் பற்றி தாம் மிகவும் மகிழ்ச்சியும் பெருமையும் அடைவதாக குறிப்பிட்டார். ஒரு வயலினை எடுத்து சங்கத் தலைவர் பிரபாகரனிடம் கொடுத்து இசைநிகழ்ச்சிகள் ஆரம்பமாவதாக கௌரவ அமைச்சர் அறிவித்ததைத் தொடர்ந்து இசை முழங்கத் தொடங்கியது. நள்ளிரவு கடந்து 1.30 மணிவரை மக்கள் திறந்தவெளியில் ஆர்வமாக அமர்ந்திருந்து இசைமழையை ரசித்து மகிழ்ந்தார்கள். அனைவர் உள்ளங்களிலும் ஒரு புது நம்பிக்கையும் உற்சாகமும் மகிழ்ச்சியும் உருவான நிலையில் நிகழ்வு இனிதே நிறைவுற்றது.

குப்பிளான்
ஐ.சண்முகன்

ஒரு இலக்கியக்காரனின் வாழ்பனுபவங்கள் 4

இவ்வித தடைகளை எல்லாம் தாண்டி கொழும்பு போய் சேர்ந்தோம். அங்கே வெள்ளவத்தையில் நண்பனின் வீட்டில் தங்கியிருந்து அலுவல்கள் பார்க்கத் தொடங்கினோம். வெள்ளவத்தைப் பொலிஸ் நண்பனுக்கு அறிமுகமானவர்களாக இருந்ததினால் அவனது வீட்டில் தங்குவதற்கான நெருக்கடிகள் ஏதும் இருந்ததில்லை.

எங்கள் உறவினர்கள் இருவர் செட்டியார், வீதி நகைக்கடையில் "பொறுப்பான" திசைகளில் வேலை செய்து கொண்டிருந்தார்கள். அவர்களைச் சந்திப்பதற்காகவும், உதவிகள் பெறுவதற்காகவும், அங்கு சென்று வருவோம். அதில் ஒரு கடையில் வேலை செய்தவர்களில் பலரும் எங்களுடன் நன்கு பழக்கமானார்கள். சில வேளைகளில் நீண்ட நேரமாக அங்கிருந்து "பலதும் பத்தும்" கதைத்துக் கொண்டிருப்போம். இப்படியாக ஒரு மாலை வேளையில் நீண்ட நேரமாக அங்கிருந்து கதைத்து விட்டு மாலை மங்கி இருட்டும் வேளையில் அங்கிருந்து புறப்பட்டோம். அந்தோனியர் கோவிலை நோக்கிய வீதியில் ஒரு ஒதுக்குப் புறத்தில் "சேர்" என்று சிரித்தபடி கூறிக்கொண்டு ஒரு நண்பர் எதிர்ப்பட்டார். நானும் கலோ என்று சிரித்தபடியே கூறிக்கொண்டு குலுக்குவதற்காக கைகளை நீட்டினேன்.

"என்னை மறந்து விட்டீர்களா?" நான் வவுனியாவில் பாஸ் எடுக்க உங்களுக்கு உதவி செய்தனான். அவன் பேசிய நிமிடமும் ஒரு மாதிரியாக இருந்தது. சுதாகரித்துக் கொண்டேன்.

அதற்கிடையில் குலுக்குவதற்காக நீட்டிய இரண்டு கைகளையும் அவன் பலமாகப் பிடித்து கொண்டான். அவனது கைகளும் தோல் தடித்துக் கரடுமுரடாக இருந்தன.

இவ்வளவிற்கும் மனைவி "ஏமலாந்தியபடி" பின்னால் வந்து கொண்டிருந்தாள். எனக்கு எங்கிருந்து அவ்வளவு பலம் வந்ததோ தெரியாது. இல்லையென்று கைகளை விடுவித்துக் கொண்டு சனங்களிடையே புகுந்து புகுந்து ஓடத்தொடங்கினேன். சட்டென நிலைமையைப் புரிந்து கொண்ட மனைவியும் என் பின்னே ஓடி வந்தாள். வீதியில் எதிர்ப்பட்ட சனங்களிடையே புகுந்து புகுந்து வேகநடை நடந்தோம். ஒரு மோட்டார் சைக்கிளிலில் இருவர் எங்களைப் பின் தொடர்ந்து வந்து கொண்டே இருந்தார்கள்.

சனங்களிடையே மறைந்து மறைந்து நிலமையை அவதானித்தபடியே நடந்து கொண்டிருந்தோம். நெஞ்சு பக் பக் என்று அடித்துக்கொண்டேயிருந்தது. ஒரு எல்லைக்கப்பால் பின் தொடர்ந்த மோட்டார் சைக்கிளைக் காணவில்லை. எதிர்ப்பட்ட சனங்கள் நிறைந்த பஸ் தரிப்பில் சற்று நிதானித்து ஆசுவாசப்படுத்திக் கொண்டோம்.

"அப்போது தான் மனைவி வாய் திறந்தாள் என்னப்பா நடந்தது."

அவன் "சேர்" என்ற போது நான் என்னிடம் எப்போதோ படித்த மாணவனென்று நினைத்து கைகளை நீட்டினேன். அவனும் எனதுகைகளைப் பிடித்துக் கொண்டான். பிடியில் வித்தியாசம் தெரிந்தது. "அவன் வவுனியாவில் பாஸ் எடுக்க உதவி செய்தனான் என்ற போது "இது பிரச்சனை" எனத் தெரிந்து கைகளை உதறி ஓடத்தொடங்கினேன்.

வவுனியாவில் உதவி செய்தவர் எங்களுக்குத் தெரிந்த தமிழ் நண்பர் மற்றும் உயர் பதவியிலிருந்த உறவினர் ஒருவர்.

அந்த நேரத்திலும் மனைவி சொன்னான்.

"அப்படித்தான் அகப்பட்டிருந்தாலும் அந்த நேரச் செலவுக்கு என வைத்திருந்த ஆயிரத்தையோ இரண்டாயிரத்தையோ தான் எடுத்திருப்பான். நான் வெறும் சங்கு மாலை தானே போட்டிருந்தேன்.

"நீண்ட நேரம் நகைக் கடையில் இருந்ததால் அவன் பெறுமதியான சாமான்கள் இருக்குமென்று நினைத்திருப்பான். இந்தச் சம்பவத்திற்குப் பிறகு உஷாரானோம். கொழும்பில் பார்க்கின்ற பழகுகின்ற புதியவர்களை சற்று எச்சரிக்கையாகவே எதிர்கொண்டோம். புதிய புதிய இடங்களில் பழகுகின்ற போது மிகவும் எச்சரிக்கை உணர்வுடன் நடந்து கொண்டோம்.

இவ்வாறாக கொழும்பு கொட்டாஞ்சோலையில் ஏதோ தேவை கருதி சனப்புழக்கம் குறைந்த ஒரு குறுக்கு வீதியில் நடந்து கொண்டிருந்த போது ஒரு மாடி வீட்டில் முதல் மாடியிலோ இரண்டாவது மாடியிலோ நின்று எங்களை சிலர் அவதானிப்பதைக் கண்டோம். அவர்களில் வாட்டசாட்டமான இளைஞன் ஒருவன் எங்களைச் சுட்டிக்காட்டி மற்றவர்களுக்கு ஏதோ சொல்வதையும் பார்த்தோம். திடீரென அவன் எங்களை நோக்கி சத்தமிட்டவாறே மரப்படிகளில் தடதடவென இறங்கிவரத் தொடங்கினான்.

நாங்கள் ஓடத்தொடங்கினோம். எங்களால் இயன்ற மட்டும் வேகமாக ஓடினோம். இவனும் ஏதோ சத்தமிட்டவாறே எங்களை நோக்கி ஓடி வந்து கொண்டே இருந்தான்.

ஒரு சந்திப்பில் அவன் எங்களை வசமாகப் பிடித்துக் கொண்டான்.

"சேர் சேர் சேர் நான் இளங்குமரன் உங்களிட்ட படிச்சனான்." அப்போது தான் வடிவாகப் பார்த்தேன். நன்கு பழகிய முகம் என்னிடம் உயர்தர வகுப்பில் படித்த மாணவன். "நீங்கள் வாறதை மேல் மாடியில் நிண்டு கண்டனான் நீங்கள் தானே எண்டு ஐமிச்சமாய் இருந்தது"

"உங்களுக்கு பின்னால ரீச்சர் வாறதைக் கண்டிட்டு நீங்கள் தானென்டு வடிவாய் தெரிஞ்ச பிறகு மேல் வீட்டிலிருந்து கூப்பிட்டுக் கொண்டு ஓடி வாரேன். நீங்கள் ஏன் கேக்காத மாதிரி ஓடிப் போனனீங்கள்.

நாங்கள் மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க நின்றோம். நான் நடந்ததை ஓரளவு சுருக்கமாகச் சொன்னேன். அவன் சிரித்தான் அதே அழகான அப்பழுக்கற்ற அடக்கமான சிரிப்பு

"கொழும்பிலை கொஞ்சம் கவனமாக இருக்க வேண்டும் சேர்"

"சேர் எனக்கு வெளிநாட்டுக்குப் போக ஒரு சந்தர்ப்பம் வந்திருக்கு ஒரு மூன்று நான்கு நாளில போய்டுவன் உங்களுக்கெல்லாம் சொல்லிப்போட்டு போக வேண்டும் என்று ஆசைப்பட்டனான். கடவுளாகப் பார்த்து பார்க்கவைச்சிட்டார்.

"சந்தோசம் தம்பி நல்லாய் இருப்பாய் போய்ட்டு வா"

அவன் எனது மனைவியை நோக்கி "எப்படி ரீச்சர்" என்று தலையாட்டினான்.

குனிந்து வணங்கி எங்களிடமிருந்து விடை பெற்றான்.

சமீபத்தில் நெல்லியடி இளங்குமரனின் சகோதரியை சந்தித்தேன்.

"இளங்குமரன் எப்படி இருக்கின்றான் என்று கேட்டேன்"

லண்டனில் மனைவி, இரண்டு பிள்ளைகளுடன் நல்லாய் இருப்பதாகச் சொன்னான். **(தொடரும்)**

மதியூகத்தின் மறுபெயர்!

எம்.ஜி.ஆர் படங்களில் பாடல் காட்சிகள் மற்றும் முக்கியமான காட்சிகளில் அமைக்கப்படும் அரங்குகள் பிரம்மாண்டமாக இருக்கும். மக்களின் வரவேற்பையும் பெறும். படத்தில் இடம்பெற வேண்டிய காட்சிகள் தன் மனதில் எப்படி விரிகிறதோ அதை கலை இயக்குநரிடம் எம்.ஜி.ஆர். விவரிப்பார். அதை கலை இயக்குநர்கள் கண்முன் கொண்டு வந்து விடுவார்கள். அப்படி எம்.ஜி.ஆர். மனதில் உள்ளதை காட்சியாக கொண்டு வருபவர்களில் முக்கியமானவர் அவரது படங்களின் ஆஸ்தான கலை இயக்குநர் அங்கமுத்து.

எம்.ஜி.ஆரின் லட்சியப் படம் மட்டுமல்ல; அவரது ரசிகர்களால் மறக்க முடியாத பிரம்மாண்ட படம் 'உலகம் சுற்றும் வாலிபன்'. அதுவரை தமிழில் வெளியான படங்களின் வசூலை முறியடித்து அபார வெற்றி பெற்றது. எம்.ஜி.ஆர். திரையுலகில் இருந்தவரை 'உலகம் சுற்றும் வாலிபன்' படத்தின் வசூல் சாதனை முறியடிக்கப்படவில்லை. இந்தப் படத்தை எடுக்கவும் அதை வெளியிடவும் எம்.ஜி.ஆர் பட்ட கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. அதையே தனியாக ஒரு புத்தகமாக எழுதலாம். படம் முழுவதுமே பிரம்மாண்டம் என்றாலும் எம்.ஜி.ஆருக்கும் நம்பியாருக்கும் இடையே நடக்கும் புத்தர் கோயில் சண்டைக் காட்சி படத்தின் ஹைலைட்.

கதைப்படி, ஜப்பானில் புத்தபிட்சுவின் வீட்டில் அணுகுண்டு ஃபார்முலா ரகசியம் புதைத்து வைக்கப்பட்டிருக்கும். புத்த பிட்சுவின் வீடே சின்னச் சின்ன புத்தர் உருவங்களாலும் நடுவில் பெரிய புத்தர் சிலையுடனும் புத்த விஹார் போல இருக்கும். அணுகுண்டு ரகசியத்தை மீட்பதற்காக அங்கு எம்.ஜி.ஆர். செல்வார். அதற்கு முன்பே நம்பியார் அங்கு சென்று புத்த பிட்சுவைப் போல மாறு வேடத்தில் இருப்பார். அப்போது, இருவருக்கும் நடக்கும் சண்டை, ரசிகர்களுக்கு விருந்து.

அன்பையும் அகிம்சையையும் வலியுறுத்திய புத்தரின் கோயில் என்பதால் கோயிலுக்குள் நம்பியாரை எம்.ஜி.ஆர் அடிக்க மாட்டார். நம்பியாரின் அடிகளை வாங்கிக் கொண்டே கோயிலை விட்டு வெளியே வந்துவிடுவார். பின்னர், நம்பியாரைப் பார்த்து,"உன் பலத்தை நான் பார்த்துட்டேன். என் பலத்தை நீ பார்க்க வேண்டாம்? ஒரு சான்ஸ் கொடேன்" என்று எம்.ஜி.ஆர் கூறும்போது ரசிகர்களின் உற்சாக வெறிக் கூச்சலால் தியேட்டர் அதிரும்.

அந்தக் காட்சியில் புத்தர் கோயிலை கலை இயக்குநர் அங்கமுத்து கண்முன் நிறுத்தியிருப்பார். க்ளைமாக்ஸில் ஸ்கேட்டிங் சண்டைக்காக எம்.ஜி.ஆர் தனது தோட்டத்தில் மாடியிலேயே ஸ்கேட்டிங் பயிற்சி எடுத்துக் கொண்டார். அந்தக் காட்சிக் கானசெட்டும்அங்கமுத்துவின்கைவண்ணம் தான்.

'உலகம் சுற்றும் வாலிபன்' படத்துக்காக ஒருநாள் சத்யா ஸ்டுடியோவில் 'செட்' அமைப்பதில் அங்கமுத்து தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தார். பணியில் முழு கவனத்துடன் வியர்க்க விறுவிறுக்க வேலை செய்து கொண்டிருந்தார். அப்போது அவர் மீது தென்றலாய் காற்றுபட்டது. அதை உணர்ந்தாலும் காரியத்திலேயே கண்ணாக பெயிண்டிங் செய்து கொண்டிருந்தார் அங்கமுத்து. சிறிதுநேரம் கழித்து வேலை முடிந்ததும் கைதட்டல் ஒலி திரும்பிப் பார்த்தால் எம்.ஜி.ஆர். நின்று கொண்டிருக்கிறார். பணியில் தீவிரமாக இருந்த அங்கமுத்துவுக்கு வியர்ப்பதை பார்த்ததும் அவருக்கு காற்று வரும்படி ஃபேனை அவர் பக்கமாக எம்.ஜி.ஆர் தான் திருப்பி வைத்திருக்கிறார்.தொழிலாளர்களின் திறமைக்கு மதிப்பளிப்பதுடன் அவர்களின் கஷ்டத்தை உணர்ந்து செயல் படுபவர் எம்.ஜி.ஆர்.

திமுகவில் இருந்து எம்.ஜி.ஆர். நீக்கப் பட்ட போது, அவரது ரசிகர்கள் தமிழகம் முழுவதும் கொந்தளித்தனர். புதிய கட்சியை எம்.ஜி.ஆர் தொடங்கும் முன்பே, ஆர்வ மிகுதியால் முதன் முதலாக மதுரையில் எம்.ஜி.ஆர். ரசிகர்கள் தாமரைப் பூ உருவம் பொறித்த கொடியை ஏற்றினர். மேலும் சில இடங்களிலும் தாமரைப் பூ கொடி ஏற்றப்பட்டது. ஒரு சில இடங்களில் கொடிகளை மாற்றுக் கட்சியினர் கிழிப்பதாகவும் கொடிக்கம்பங்களை வெட்டுவதாகவும் செய்திகள் வெளியாயின.

பின்னர், அதிமுக கட்சி தொடங்க எம்.ஜி.ஆர். முடிவு செய்தவுடன் இதுபற்றி அவரிடம் கேட்கப் பட்டது. "எங்கள் புதிய கட்சியின் கொடியை யாரும் இனிமேல் கிழிக்க மாட்டார்கள்" என்று எம்.ஜி.ஆர். கூறினார்.அவர் அவ்வளவுநம்பிக்கையோடும் உறுதியாகவும்கூறியதற்கான காரணம்கட்சிக் கொடி அறிமுகமானபோதுதான் எல்லாருக்கும் தெரிந்தது. அதிமுக கொடியில் பேரறிஞர் அண்ணாவின் உருவம் பொறிக்கப் பட்டிருந்தது. எம்.ஜி.ஆரின் யோசனைப்படி அந்தக் கொடியை வடிவமைத்தவர் கலை இயக்குநர் அங்கமுத்து.

எம்.ஜி.ஆர். நடித்த 'மீனவ நண்பன்'படத்தில்

'நேருக்கு நேராய் வரட்டும்; நெஞ்சில் துணிவிருந்தால்...'

பாடல்காட்சியின்படப்பிடிப்புகர்நாடகா மாநிலத்தில் நடந்து கொண்டிருந்தது. அந்தப் பாடலில் 'தனி ஒரு மனிதனுக்கு உண வில்லை என்றால் ஜெகத்தினை அழித்திடுவோம்; என்று தமிழ்க்கவி பாரதி பாடிய பாட்டை நடைமுறை ஆக்கிடுவோம்' என்ற வரிகள் இடம்பெறும்.

அந்தக் காட்சியில் பாரதியார் புகைப்படம் இடம்பெற வேண்டும். ஆனால், பெங்களூரு முழுக்க சுற்றியும் பாரதியார் படம் கிடைக்கவில்லை. படத்தின் இயக்குநர் தரோ கண்டிப்பாக பாரதியார் படம் வேண்டும் என்று சொல்லிவிட்டார். தமிழகம் சென்று பாரதியார் படம் வாங்கி வரலாம், அதுவரை வேறு காட்சிகள் எடுக்கலாம் என்று படக்குழுவினர் நினைத்தபோது, அங்கமுத்துவை எம்.ஜி.ஆர். அழைத்தார்.

"என்னப்பா, கையிலே வெண்ணையை வெச்சுக்கிட்டு நெய்க்கு அலையறே. உனக்கு பாரதியார் படம் வரையத் தெரியாதா? " என்றார். அப்போது தான் எல்லாருக்கும் உறைத்தது. அடுத்த அரை மணி நேரத்தில் பாரதியார் ஓவியம் ரெடி. எல்லாருக்கும் திருப்தி. 'மீனவ நண்பன்' படத்தில் குறிப்பிட்ட காட்சியில் அங்கமுத்து வரைந்த அந்த பாரதியார் படம்தான் இடம் பெற்றிருக்கும்.

ஓவியத்தைப் பார்த்துவிட்டு எம்.ஜி.ஆர். சொன்னார்."தமிழன் எங்கே இருக்கிறானோ, அங்கே நிச்சயம் பாரதியார் இருப்பார். இந்த சின்ன விஷயத்துக்காக தமிழகம் போக இருந்தீர்களே?"

மதியூகத்தின் மறுபெயர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்.

தொடரும்...

எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்தபோது மேல் சபை உறுப்பினராக அங்கமுத்து நியமிக்கப்பட்டார். பின்னர், குடிசை மாற்று வாரியத் தலைவராகவும் ஆனார் அங்கமுத்து. அந்தப் பதவியில் அவரது பணிகளை பாராட்டி ஓராண்டே நிர்ணயிக்கப்பட்டிருந்த குடிசை மாற்று வாரிய தலைவர் பதவியை மூன்று ஆண்டுகளாக நீட்டித்தார் எம்.ஜி.ஆர்.

1970ல் ஜப்பானில் நடைபெற்ற எக்ஸ்போ 70ல் 'உலகம் சுற்றும் வாலிபன்'

'மீனவ நண்பன்' படத்தில் எம்.ஜி.ஆர்., லதா.



அன்புநெறி
Anpuneri
Humanitarian Relief Organization.

வழங்கும்

வன்னியில் மனநலம் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வு நிதிக்காக

"கலைமாமணி" ராஜேஷ் வைத்யாவின்

நாத சங்கமம் 2016

Saturday Oct 8th, 2016 @ 6 pm

Sir John A. Macdonald CI
2300 Pharmacy Ave, Toronto, ON

416-451-8427 | 647-293-4629 | 416-500-9193

உலகளாவிய தமிழரின் பத்திரிகை. the global newspaper of TAMILS.

DEEPAM .news

தீபம்

கனடாப் பதிப்பு

14.09.2016

8 ஆவது ஆண்டு தமிழ்க் கனடியர்

நிதி சேர் நடை

8th Annual Tamil Canadian

Walk - A - Thon

Thomson Memorial Park

SEPTEMBER 11 SUNDAY 8:00 AM

கனடா- மட்டக்களப்பு நட்புப் பண்ணை நிதிக்காக

In support of Canada Batticaloa Friendship Farm

Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"

சம்பூர் அனல் மின்நிலையத் திட்டம் கைவிடப்பட்டது!

மக்களின் விட்டுக்கொடுக்காத தொடர்ச்சியான போராட்டத்துக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி!

சம்பூர் அனல் மின்நிலைய திட்டத்தை அரசாங்கம் கைவிட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சம்பூரில் நிலக்கரி அனல் மின் நிலையம் அமைக்கும் திட்டத்தை நிறுத்தக் கோரி திருகோணமலை உச்ச நீதிமன்றத்தில், சூழல் நிதித்தாபன லிமிட்டெட் தொடுத்திருந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்தத் தகவல் அரசதரப்பு சட்டத்தரணியால் நீதிமன்றத்தில் தெரிவிக் கப்பட்டது. மின்சக்தி மற்றும் மீளுருவாக்கம் செய்யக்கூடிய சக்தி வள அமைச்சின் செயலாளர், சம்பூரில் நிலக்கரி அனல் மின் நிலையம் அமைக்கும் திட்டத்தினை தமது அமைச்சு கைவிட்டுள்ளதாக தனக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளதாக அரச வழக்கறிஞர் நிதிமன்றத்தில் தெரிவித்தார். இதையடுத்து சூழல் நிதித்தாபன லிமிட்டெட் தொடுத்திருந்த இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

இதன் மூலம், ஒரு மிகப்பெரிய நீண்டகால அழிவிலிருந்து சம்பூர் உள்ளிட்ட ஒட்டு மொத்த திருகோணமலை மாவட்டமும் தப்பியிருக்கின்றது. இன்னும் சொல்லப்போனால் வெறும் திருகோணலை மாவட்டம் மட்டுமல்ல, முழு இலங்கையுமே தப்பிப் பிழைத்ததென்றே சொல்லவேண்டும். திருகோணமலை மாவட்டத்தில் யுத்தத்தி னால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது ஊருக்குத் திரும்பியபோதும் உத்தேச நிலக்கரி அனல்மின்நிலையம் அவர்களின் நீண்டகால வாழ்விற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்திக் கொண்டேயிருந்தது. மிகப்பெரும் அரசியல் மற்றும் பொருளாதார பலம் கொண்ட சக்திகள் சம்பூரில் எப்படியாவது அனல்மின் நிலையம் அமைக்கப்பட்டேயாகவேண்டும் என துடியாய்த் துடித்தன. இதில் தமிழ் மக்களுக்கு தலைமைதாங்குவதாக மார்தட்டிக் கொள்ளும் தமிழ்த் தேசிய தலைமையானது இந்தியாவின் நலனைக் காக்க பெரும்பாடுபட்டது.

இந்த வெற்றிக்காக, திருகோணமலை பசுமை இயக்கமும், பல சூழலியலாளர்கள், பொறியியலாளர்கள், பேராசிரியர்கள், மற்றும், ஊடகவியலாளர்கள் சமூக செயற் பாட்டாளர்கள் பலரும் இனமத வேறு பாடின்றி ஒருமித்து நின்று நடாத்திய தொடர்ச்சியான எதிர்ப்புப் போராட் டங்கள் வீண் போகவில்லை. இது மக்களது உறுதியான போராட்டத்துக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும். அரச மற்றும் அதிகார அமைப்புக்களின் எதேச்சதிகாரப் போக்குளையும்ளவர்கள் போட்ட தடைக்கற்களையும் தகர்த்தெறிந்து மக்கள் வெற்றி வாகை சூடியுள்ளார்கள். மக்களுக் காகவும் பிரதேச சூழலைப்பாதுகாக்கவும் அவர்களுடன் சேர்ந்து நேரடியாகவும் மறை முகமாகவும்இணந்துநின்றுஅயராதுஉழைத்த இவர்கள் அனைவரதும் அர்ப்பணிப்பான பங்களிப்பு ஒரு முன்னுதாரணமாகக் கொள் ளப்பட வேண்டிய, மக்கள் போராட்டத்தின் வலிமையை வரலாற்றில் பதிவுசெய்த வெற்றியாகும். மக்களின் இந்தப் போராட்டம் அரசின் காதுகளைத் துளைத்திருக்கிறது; அதன் கண்களைத் திறந்திருக்கிறது. திட்டத்தை விடுவது என்ற முடிவை நோக்கி அவர்களை உந்தித் தள்ளியிருக்கிறது.

ஓய்வொழிச்சலின்றி இதற்காக உழைத்த, நடத்திய போராட்டங்களில் வெய்யில் மழை என்றுபாராது ஒன்றுபட்டு நின்று குரலெழுப்பிய மக்களும், அவற்றை வழிநடாத்திய ஒவ்வொரு தொண்டர்களும் பாராட்டப்படவும், நினைவுகூரப்படவும் வேண்டியவர்கள்.

அதே வேளை, அரசாங்கம் இத்தகைய ஒரு முடிவுக்கு வரும்போது வேறொரு திட்டத்துடன் முன்வந்திருக்கலாம் என்ப தையோ, அவர்கள் நீதிமன்றத் தீர்ப்பு வரமுதல்மேற்கொண்டதற்காலிகப்பின்வாங் கலாகவும் இருக்கலாம் என்பதையோ நாம் மறந்துவிடக் கூடாது. ஏனென்றால், வழக்கு வாபஸ் பெறப்பட்டிருக்கிறதே ஒழிய, திட்டத்துக்கு நீதிமன்றத் தடை போடப்படவில்லை. எனவே இதை அரசு மீண்டும் ஆரம்பிக்க முடியாது என்றில்லை. இந்த அரசாங்கம் போய் இன்னொரு அரசாங்கம் வரும்போது இது மீண்டும் தொடங்கப்படலாம். கூடங்குளம் அணுமின் உலை போல விட்ட இடத்திலிருந்து மீண்டும் தொடங்கப்படலாம். ஆகவே வெற்றி பெற்றமக்கள் இதை ஒரு என்றென் றைக்குமான வெற்றியாக நினைத்து அமைதி கொள்ளக் கூடாது. மாறாக, தொடர்ச்சியான விழிப்புணர்வுடன் கூடிய அவதானிப்பும் அவசியம். இனி என்றென்றைக்கும் இந்த முயற்சியில் அரசு ஈடுபடா வண்ணம் கவனமாக செயற்படவும் வேண்டும். வெற்றி பெரிது தான். ஆனல் அதைவிடப் பெருது பெற்ற வெற்றியை தொடர்ந்து பேணுதல். மக்கள் ஒன்றிணைந்தால் சாதிக்க முடியாதது ஒன்றும் இல்லை.

'மக்கள்,மக்கள் மட்டுமே வரலாற்றின் உந்து சக்திகள்' என்பதை மெய்ப்பித்துக் காட்டிய இந்தப் போராட்டம், எம்மக்களின் விடிவுக்கான பாதையை சுட்டிக் காட்டியுள்ளதாக நாம் ஒவ்வொருவரும் கருத்தில் கொள்வோமாக.

தகவல்:கோ.அமிர்தலிங்கம்

தற்போது இணையத்திலும் உங்கள் தீபம்

Visit us online

www.deepam.news

like/follow us

News on Deepam

தற்போது முதல் மற்றும் இறுதிப் பக்க விளம்பரங்கள் சிறிய அளவுகளில்

தற்போதைய சிறப்பு அறிமுகக் கட்டணத்தை உறுதி செய்யுங்கள்!

Front and Back page Small Size advertising opportunities.

Call us today to get our introductory prices!

416.240.9727

ads@deepam.news | deepam.news

8 ஆவது ஆண்டு தமிழ்க் கனடியர்

நிதி சேர் நடை

8th Annual Tamil Canadian

Walk - A - Thon

Thomson Memorial Park

SEPTEMBER 11 SUNDAY 8:00 AM

சிறப்பு வருகை

மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்

திரு வியாழேந்திரன்

tamilcanadianwalk.ca @tmlcdnwalk tamilcanadianwalk2016

கனடா- மட்டக்களப்பு நட்புப் பண்ணை நிதிக்காக

In support of Canada Batticaloa Friendship Farm

Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"

/NewsOnDeepam @NewsOnDeepam